

# இலங்கைக்கு புதியதொரு சுப்பர்சொனிக்

*வழங்க இந்தியா முன்வருகை*

கொழும்பு, ஒக்.26
இந்தியா உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தனது புதிய டெஜாஸ் சுப்பர்சொனிக் போர் விமானத்தை இலங்கைக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளது.
இலங்கையின் விமானப்படைத் தளபதி எயார்மார்சல் கஹான் புளத்சிங்கள பாகிஸ்தானுக்கு அடுத்த மாதம் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தானின் ஜெட் விமானங்கள் குறித்து ஆராயவுள்ள நிலையிலேயே இந்தியாவின் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.
இலங்கை விமானப்படையின் பழைய விமானங்களுக்குப் பதில் புதிய விமானங்களை வாங்குவதற்காகவே பாகிஸ்தானுக்கான இந்தப் பயணம் அமையவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின்றபோதிலும், விமானப்படை அதிகாரிகள் இது பாகிஸ்தானுக்கான 24

# உதயன்

சுடர் 30 கதிர் 334 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 9, திங்கட்கிழமை 26.10.2015

30c – 25c
மழைக்கான சாத்தியம் உண்டு

# அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பளிக்காது அரசு

## அப்படியானால் படையினரையும் மன்னிக்கவேண்டுமாம்
## வழக்குகள் ஆராயப்பட்டு நவம்பர் நடுப்பகுதிக்கு முன் தீர்வு

கொழும்பு, ஒக்ரோபர் 26
தமிழ்க் கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் அரசு தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்காது. கைதிகளின் வழக்குகள் ஆராயப்பட்டுக் குற்றமற்றவர்கள் யாராவது நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் விடுதலை செய்யப்படுவர் என்று சட்டஒழுங்கு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.
அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினால், இலங்கைப் படையினருக்கும் அவர்களது குற்றச் செயல்களை விசாரிக்காமல் பொதுமன்னிப்பளிக்கவேண்டியிருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு என எதுவும் இல்லை. நாங்கள் ஒவ்வொரு வழக்காக ஆராய்வோம். யாராவது உரிய ஆதாரங்களோ அல்லது குற்றச்சாட்டோ இல்லாமல் நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் அவர்களை விடுதலை செய்வோம்.
எனினும் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு நவம்பர் மாத நடுப் பகுதிக்கு முன்னர் தீர்வு காணப்படும்.
ஜெனிவா அறிக்கையில், விடுதலைப்புலிகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவர்களும் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் 24




# காணாமற்போனோர் பணியகம் விரைவில்

*உள்ளக விசாரணைப் பொறிமுறையை முன்னெடுக்க*

யாழ்ப்பாணம், ஒக். 26
உள்ளக விசாரணைப் பொறிமுறையை முன்னெடுப்பதற்காகக் காணாமற்போனோர் பணியகம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. அந்தப் பணியகம் அமைக்கப்பட்ட பின்னர் தற்போதைய காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு கலைக்கப்படும் என்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனினால், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு கலைக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்திருந்ததன் பின்னணியிலேயே இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
உள்ளகவிசாரணைப் பொறிமுறையை முன்னெடுப்பதற்கு இலங்கை அரசு 4 நிறுவனங்களை அமைக்கவுள்ளது. அவ்வாறு அமைக்கப்படும் 4 நிறுவனங்களில், காணாமற்போனோர் தொடர்பான விசாரணைப் பணியகமும் அடங்குகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு முன்னர் குறித்த பணியகம் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த பணியகம் நிறுவப்பட்டதன் பின்னர், காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு கலைக்கப்படும். ஜனாதிபதி ஆணைக்கு முவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளும், புதிய பணியகத்துக்குப் பின்னர் பாரப்படுத்தப்படும். மேலும் பரணகம ஆணைக் குழுவுக்குக் 24

# இலங்கை நீதிமன்றில் சாட்சியமளிக்க தயார்

## சனல்-4 மக்ரே அறிவிப்பு




கொழும்பு, ஒக்.26
போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கை நீதிமன்றில் சாட்சியமளிக்கத் தயார் என சனல்-4 ஊடகவியலாளர் கெலும் மக்ரே தெரிவித்துள்ளார்.
போதியளவு சர்வதேசப் பங்களிப்புடன் இலங்கை அரசு நம்பகமான விசாரணை நடத்தினால் அதற்குப் பூரண ஆதரவளிக்கத் தயார் எனவும், பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் தாம் சாட்சியமளிக்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.
இது தொடர்பில் கெலும் மக்ரே மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கை அரசு நம்பகமான விசாரணை நடத்தினால், அதற்குப் பூரண ஆதரவளிக்கத் தயார். பாதிக்கப் பட்டவர்களின் சார்பில் சாட்சியமளிக்கப் போகின்றோம். எவ்வாறெனினும், சாட்சியங்களை வழங்கியவர்கள் மற்றும் எம்முடன் பேசியவர்களின் விவரங்களை நாம் வெளியிடப் போவதில்லை.
சுய மரியாதையுடைய ஊடகவியலாளர்கள் எவரும் தகவல்களை வழங்கியவர்களின் விவரங்களை வெளிப்படுத்தமாட்டார்கள். சிறைக்குச் சென்றாலும் தகவல் மூலங்களை வழங்கியவர்களை ஊடகவியலாளர்கள் காட்டிக் கொடுக்கமாட்டார்கள்.
போதியளவு சர்வதேசப் பங்களிப்புடன் நம்பகமான- உள்ளக விசாரணைப் பொறிமுறைமை உருவாக்கப்பட்டால் நான் அதில் சாட்சியமளிப்பேன். குற்றச் செயல்களில் ஈடுபட்ட அனைத்து இனச் 24

# ஆனந்தசங்கரியுடன் இணைகிறார் கருணா

## உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குவதற்காக



யாழ்ப்பாணம், ஒக். 26
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளதாகக் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பு அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்த விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணா, மகிந்த அரசுடன் இணைந்து செயற்பட்டார். கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது கருணாவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அத்துடன் கடந்த காலங்களைப் போன்று தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற ஆசனமும் வழங்கப்படவில்லை.
இவ்வாறானதொரு நிலையிலேயே, விநாயகமூர்த்தி முரளிதரன் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் 24

# 86 இந்திய மீனவர்கள் புதனன்று விடுவிப்பு

கொழும்பு, ஒக். 26
தமிழகச் சிறையிலுள்ள 2 இலங்கை மீனவர்களை விடுவித்து, இலங்கைச் சிறையிலுள்ள தமிழக மீனவர்கள் 86 பேரை மீட்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
நாளை மறுதினம் புதன்கிழமை இந்த மீனவர் பரிமாற்றம் இடம்பெறவுள்ளதாகத் தமிழக அரசினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையிலுள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 86 தமிழக மீனவர்களும் நாளை மறுதினம் புதன்கிழமை விடுவிக்கப்படுவார்கள். அவர்களைத் தமிழகத்துக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு முன்னெடுத்துள்ளது.
அதேபோல, தமிழகச் சிறையில் உள்ள இரண்டு இலங்கை மீனவர்களை நல்லெண்ண நடவடிக்கையாக விடுவிக்க மத்திய அரசு கூறியிருப்பதன் பேரில், அவர்களும் புதன்கிழமை விடுவிக்கப்படுவார்கள் என்றும் நேற்று தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
2011 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தற்போது வரை மீனவர் பிரச்சினை தொடர்பாகப் பிரதமருக்கு 73 கடிதங்களை தான் 24

# அரசியல் கைதிகளுக்காக நேற்று தேவாலயங்களில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக்.26
சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன.
தேவாலயங்களில் நேற்றைய ஞாயிறு வழிபாடுகளின்போது விசேடமாக இந்தப் பிரார்த்தனைகள் இடம் பெற்றதாக அருட்தந்தையர்கள் தெரிவித்தனர்.
வடக்கில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங்களிலும் உள்ள தேவாலயங்களில் இந்தப் பிரார்த்தனை 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியா அழிக்கப்பட்ட நாடாக இலங்கையை மாற்ற நடவடிக்கை

## சுகாதார நிறுவனத்திடம் இருந்து நிதி பெற ஒப்பந்தம்

யாழ்ப்பாணம், ஒக். 26

வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் மலேரியா நோயைக்கட்டுப்படுத்திய முதலாவது வெப்பமண்டல நாடாக இலங்கையை மாற்றுவதற்கான நிதியை உலக சுகாதார நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கு ஒப்பந்தம் கைச்சாத்திட அமைச்சரவை அங் கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த நிதியைப் பெற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மலேரியா நோயைக் கட்டுப்படுத்திய முதலாவது வெப்பமண்டல நாடாக இலங்கையை உலக சுகாதார நிறுவனத்தால் உறுதிப்படுத்த முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் சுகாதாரப் பிரச்சினையாகியுள்ள எயிட்ஸ் நோய், காச நோய் மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் நோக்கில் 2002 ஆம்ஆண்டில்உலகத்தலைவர்களின் பங்கேற்புடன் எயிட்ஸ் நோய், காச நோய் மற்றும் மலேரியா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான உலகளாவிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிதியம் ஆரம்பித்த நாள் முதல் இந்த நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக அந்த நோய்கள் பரவக்கூடிய நாடுகளின் அரச நிறுவனங்களுக்கும் வேறு அமைப்புக்களுக்கும் நிதி வசதிகளை வழங்கும் நிறுவனமாக உலகளாவிய நிதியம் செயற்பட்டு வருகின்றது.

2012ஆம் ஆண்டுசெப்ரெம்பர் மாதத்திலிருந்து இலங்கையில் மலேரியா நோய் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் பதிவாகவில்லை. தற்போது மலேரியா தொற்று இலங்கையில் முற்றாக நீங்கியுள்ளது. எனினும் அது பற்றிய அறிவிப்பைப் பூரணப்படுத்த வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்று வருபவர்கள் மூலமாகவே மலேரியா அதிகளவில் தொற்றுவதாகக் கூறப்படுகிறது. அதனால் அவ்வாறு வருபவர்கள் மட்டுமன்றி இலங்கையினுள் அத்துமீறி மீன் பிடிக்க முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்படுபவர்களும் மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்என்றும்கூறப்பட்டுள்ளது. (ற-4)




மட்டக்களப்பில் சனிக்கிழமை இரவு முதல் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இரவு 8.30 மணிமுதல் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் 182.80 மி.மீ மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பாளர் கே. சூரியகுமாரன் தெரிவித்தார். வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள குழப்பநிலையின் காரணமாக தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு மழை பெய்யும் காலநிலை காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.(ற-10)

# கைதடி சித்த மருத்துவமனையில் சிகிச்சைக்கு வருவோர் அதிகரிப்பு

## அதன் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி பிறேமா சிவசண்முகராசா தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக்.26

கைதடி சித்த மருத்துவ போதனா வைத்தியசாலையில் இந்தவருடம் கடந்த 10 மாத காலப்பகுதியில் 40 ஆயிரத்து 830 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். விடுதி வசதியுடன் செயற்படும் வைத்தியசாலையில் கடந்த 20 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வெளி நோயாளர் பிரிவில் 40 ஆயிரம் நோயாளர்களும் விடுதிகளில் தங்கியிருந்து 830 நோயாளர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த வைத்தியமுறையில் சிகிச்சை பெறவேண்டும் என்ற ஆர்வத்தோடு புலம்பெயர் உறவுகளும் வெளி நாட்டவரும் சிகிச்சைபெற வருகின்றனர். நாளாந்தம் சிகிச்சை பெற வருவோர் தொகை அதிகரித்து வருகின்றது. என வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி பிறேமா சிவசண்முகராசா தெரிவித்தார்.

**கடந்த 20 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் வெளி நோயாளர் பிரிவில் 40 ஆயிரம் நோயாளர்களும் விடுதிகளில் தங்கியிருந்து 830 நோயாளர்க ளும் சிகிச்சை பெற்றுள்ளனர்.**

கைதடி சித்த போதனா வைத்தியசாலைஏ-9வீதியில்கைதடிச்சந்திக்கு அருகில் அமைந்துள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையின் போதனா வைத்தியசாலையாகும். மத்திய சுதேச வைத்திய அமைச்சின்கீழ் செயற்படுகின்றது.

தற்போது அங்கு சேவை பெறவரும் நோயாளர் எண்ணிக்கை குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :-

வைத்தியசாலையில்சிகிச்சை பெறுவதற்கு புலம்பெயர் உறவுகள் மற்றும் வெளிநாட்டில் வசிப்போரும் வருகை தருகின்றனர். அத்துடன் நீர் கொழும்பு,சிலாபம்,திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, மன் னார் மாவட்டங்களில் இருந்து வருகை தந்து சிகிச்சை பெறுகின்றனர். அதேநேரம் யாழ்.மாவட்டத்தில்சில கிராமங்களில்இருந்து வருபவர்கள் இந்த வைத்தியசாலை தொடர்பாக தாங்கள் இதுவரை தெரிந்து கொள்ளவில்லை. இதன் சேவையை பெறத்த வறிவிட்டோம் என கவலை தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலைக்கான மருந்துகள் மற்றும் வசதிகளை மத்திய சுதேச வைத்திய அமைச்சு வழங்கி வருகின்றது. நாளாந்தம் நோயாளர் விடுதிகளில் மட்டும் 80 நோயாளர் வரையில் தங்கியுள்ளனர். நோயாளருக்குத் தேவையான சில மருந்து வகைகள் வைத்தியசாலையில் தயாரிக்கப்படுவதோடு மருத்துவ குடிநீர் மற்றும் கசாயம் போன்றன வைத்தியசாலையில் தயார் செய்யப்படுகின்றன.

மூத்தபிரசைகள் மற்றும் சிறுவர்கள், குழந்தைகள் உட்பட சகல தரப்பினரும் சிகிச்சை பெறுகின்றனர். பக்கவிளைவுகள் இல்லாதசித்தமருத்துவத்தில் மக்களுக்கு நம்பிக்கை அதிகரித்து வருகின்றது. அதனால் சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்து வருகின்றது.

புலம்பெயர் உறவுகள் மற்றும் வெளிநாட்டில் இருந்து சிகிச்சை பெற வருபவர்கள் கட்டணம் செலுத்தி தங்கி இருந்து சிகிச்சை பெறும்விடுதி வசதியை கோருகின்றனர். இது தொடர்பாக அமைச்சின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கின்றோம்.- என்றார். (ற-11)

பாலியல் லஞ்சம் கோரிய விவகாரம்

# செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் கையளிப்பு

கொழும்பு, ஒக்.26

முழங்காவிலில் இந்திய வீட்டுத் திட்ட பயனாளியிடம் பாலியல் இலஞ்சம் கோரிய விவகாரம் தொடர்பிலான இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் விசாரணை அறிக்கை மேலதிக நடவடிக்கைக்காக பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முழாங்காவிலில் இந்திய வீட்டுத் திட்டத்தைநடைமுறைபடுத்தும்இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் அப் பகுதியில் சுனாமி வீட்டுத் திட்ட பயனாளியான குடும்பத் தலைமைத்துவப் பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கோரியதாக குறித்த பெண்ணால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் உள்ளக விசாரணை நடத்தி அதன் அறிக்கையை கடந்த வாரம் இந்திய தூதருக்கும், சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சிடமும் கையளித்தது.

இந்த நிலையில் குறித்த விசாரணை அறிக்கையை மேலதிக நடவடிக்கைக்காக பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜெகத் விஜயவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன்குறித்தஅறிக்கைபொலிஸ்மா அதிப்ர் அலுவலகத்துக்கு கிடைத்துள்ளது என்றும் அதனை பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த விசாரணைகளிலிருந்து குறித்த தொழில்நுட்ப அலுவலருக்கு எதிராக, பெண்ணின் முறைப்பாட்டில் ஆதாரங்கள் இல்லை என இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் குறித்த உள்ளக விசாரணை அறிக்கையை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சிடம் மேலதிக நடவடிக்கைக்காக வழங்கியது.

அத்துடன் குற்றம்சுமத்தப்பட்ட தொழில்நுட்ப அலுவலர் மன்னாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (ற-வ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி வடக்கின் அபிவிருத்திக்கு இல்லை

இலங்கையின் பின்தங்கிய பிரதேசங்களுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய நிதி வடக்கின் வீதி அபிவிருத்திகளுக்குப் பயன்படுத்தப்படாது தெற்குக்கே செல்லவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய பிரதேசங்களின் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 800 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது. மூன்று கட்டங்களாக இவ்வீதி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்டங்களில் இவ்வீதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பின்தங்கிய பிரதேசங்களில் 3,108 கிலோ மீற்றர் வீதியும் 248 தேசிய வீதிகளும் இந்நிதியினூடாக புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இதற்காக சுமார் 906 மில்லியன் அமெரிக்க டொலர் செலவாகும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

800 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் நிலையில் மிகுதியை இலங்கை அரசு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தெற்கு, சப்ரகமுவ மத்தி, வடமத்திய மாகாணங்களிலும் மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்திலும் இவ்வீதி அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கிலுள்ள வீதிகளைப் புனரமைக்க நிதியும் ஒதுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

வடக்கில்ஏராளமான வீதிகள் இன்னும்புனரமைப்பின்றியே காணப்படுகின்றன. அவற்றைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிவருகின்றனர். ஆனால் அவற்றைப் புனரமைப்பதற்கு மாகாண சபையிலும் போதிய நிதி இல்லை என்று கூறப்படுகிறது. மழைகாலம் ஆரம்பிக்கப் பட்டுள்ள நிலையில் வீதிகள் மிக மோசமான நிலையில் உள்ளன். இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி வடக்குத் தவிர்ந்த ஏனைய சில மாகாணங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சட்டவிரோதக் குடியேற்றம் முல்லைத்தீவில் இல்லை

## குத்தியாகும்பம் முஸ்லிம் பள்ளி நிர்வாகிகள், மதத் தலைவர்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.26

முல்லைத்தீவில் சட்டவிரோத குடியேற்றங்கள் இடம்பெறுகின்றது என்று கூறப்படுவது தவறானது. அது அரசால் வழங்கப்பட்ட காணிகளாகும். – இவ்வாறு குத்தியாகும்பம் பகுதியில் முஸ்லிம் பள்ளி நிர்வாகிகள், மதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டு சட்டவிரோத குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை அடுத்து முல்லைதீவு குத்தியாகும்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அங்குமேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

1965 ஆம் ஆண்டு முல்லைத்தீவு முள் ளியவளை குத்தியா கும்பம், குமுழமுனை முறிப்பு வன்னியன் மேடு, குமாரபுரம்காட்டுப்பகுதியில் அன்றைய அரச அதிபர் சிங்காரவேல் என்பவரால் 3 ஏக்கர் திட்டம் மற்றும் 1976 ஆம் ஆண்டு இரண்டு ஏக்கர் திட்டம் 1982 ஆம் ஆண்டு மாதிரிக் கிராமம் அமைப்பதற்கான அரை ஏக்கர் திட்டம் என காணிகள் வழங்கப்பட்டு அதற்கான உத்தரவுப் பத்திரமும் வழங்கப்பட்டது.

இந்தக் காணிகளை நாம் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கே பயன்படுத்தும்படியும் தெரிவிக்கப்பட்டது. நாம் இதனை வெட்டும்போது 1990 ஆம் ஆண்டு எமது இடப்பெயர்வால் அவை பெருங்காடாக மாறியுள்ளது. மீண் டும் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் இங்கு மீண்டும் வந்த போது இந்தக் காணிகள் பெருங்காடாக மாறியுள்ளதால் அவைகளை உரியவர்கள் வெட்டித்துப்புரவு செய்து பயிர் செய்யும்படி அரச செயலகத்தால் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் விடுக்கப்பட்டது. நாம் உடனே இந்தக் காணிகளை வெட்டித்துப்புரவு செய்து கொண்டிருந்போது மாகாணசபை உறுப்பினரானது. ரவிகரன் என்பவர் இது அரச காணி இது எவருக்கும் வழங்கப்படவில்லை. இதனை வெட்ட வேண்டாம் எனத் தெரிவித்தது மட்டுமல்லாது உண்மைக்குப் புறம்பான செய்தியொன்றையும் ஊடகங்கள் மூலமாக அறிவித்தலையும் விடுத்தார்.

1990 ஆம் ஆண்டு 252 குடும்பங்கள் மட்டுமே இங்கிருந்த இடம் பெயர்ந்தோம். 2012 ஆம் ஆண்டு ஆயிரத்து 435 குடும்பங்களாகிய நிலையில் அரச மட்ட புள்ளிவிவரத்துடன் அரசிடம் இந்தக் குடும்பங்களுக்குகாணிகள் இல்லை எனத்தெரிவித்தோம். அதனை ஏற்று முள்ளியவளையில் காணிகள் காட்டப்பட்ட நிலையில் அவை முஸ்லிம்களுக்கு வழங்கக் கூடாது என தடுக்கப்பட்டது.

இவ்வாறு எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்தாலும் கூட எமக்குக் காணிகள் வழங்கக்கூடாது என்ற நோக்கிலும் தமிழ்–முஸ்லிம் மக்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்தும் முகமாகவும் எம்மையெல்லாம் வந்தேறு குடிகள் என விரட்டி அடிக்கவும் சதிவேலைகள் நடக்கிறது. எமக்கு அரசால் தரப்பட்ட காணியை தவிர நாம் அடாத்தாக காடுகளை அழிக்கவில்லை. அரசால் வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரமும் பொய்யானதா?. நாம் இங்குதான் வாழ்ந்தோம். எமது மூதா தையர் கள் இங்குதான் இருந்தார்கள், நாம் பிறந்து வளர்ந்து பாடசாலைக் குக்கூட இங்கிருந்து சென்றோம். ஏன் எமக்குக் காணி வழங்கக்கூடாது?. நாமும் தமிழ் மக்களும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையாக வாழ பிடிக்காத சிலர் இப்படியான அடாவடிகளை மேற்கொள்கின்ற னர். இதில் உண்மை இல்லை. எனவே இந்தக் காணிகள் பற்றிய பூரண விசாரணைகள் நடத்தி எமது உத்தரவுப் பத்திரத்துக்கமைய காணி அற்றோரை இனங்கண்டு நிம்மதியாக்க் குடியமர்ந்து பயிர் செய்ய ஆவன செய்யப்பட வேண்டும்.– என்றனர்.

(ற–21,500)

## கிளிநொச்சி அபிவிருத்திக்கு 665 மில்லியன் ரூபா தேவை

**மாவட்ட செயலக புள்ளிவிவரங்களில் தகவல்**

கிளிநொச்சி, ஒக்.26

கிளிநொச்சி மாவட்டத்தின் நகர அபிவிருத்தி, சுற்றாடல் மற்றும் விளையாட்டு அபிவிருத்தியின் தேவைகளுக்காக 665 மில்லியன் ரூபா தேவைப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளி விவரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட செயலகப் புள்ளி விவரங்கள் தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த விடயம் சுட்டிகாட்டப்பட்டது.

மாவட்டத்தின் பஸ் நிலையம் மற்றும் பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கு 50 மில்லியன் ரூபாவும், ஒரே கூரையின் கீழ் நிர்வாக அலகுகளை அமைப்பதற்கு 200 மில்லியன் ரூபாவுமாக கிளிநொச்சி மாவட்டத்தின் நகர அபிவிருத்திக்கு 250 மில்லியன் ரூபாவும், இயற்கை கள நிலையம், ஓய்வு அறை, சுற்றுச்சூழல், மைய நூலகம், பச்சை பூங்கா மற்றும் சில தேவைகள் சேர்த்து மாவட்டத்தின் சுற்றுச்சூழல் அபிவிருத்தியின் தேவைக்காக 200 மில்லியன் ரூபாவும் தேவைப்படுகின்றது என்றும் அத்தோடு விளையாட்டு அபிவிருத்தியை மேற்கொள்ளும் பொருட்டு கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகத்திலும் விளையாட்டு மைதானங்கள் நிறுவுவதற்கு 200 மில்லியன் ரூபாவும், விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் விநியோகிப்பதற்கு 10 மில்லியன் ரூபாவும், விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சியளித்தலுக்கு 5 மில்லியன் ரூபாவாக மொத்தம் 215 மில்லியன் ரூபாவும் தேவைபப்டுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மூன்று அபிவிருத்தியின் தேவைக்காக மொத்தம் 665 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்று மாவட்ட செயலைகத்தின் புள்ளிவிவர தகவல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற–21,ரி3)

## கத்திமுனைத் திருட்டுகள் வவுனியாவில் அதிகரிப்பு

### அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல்

வவுனியாவில் பல பகுதிகளில் கத்தி முனையில் இடம்பெறும் திருட் டுக்கள் அதிகரித்துள்ளன என்றும் தனிமையில் உள்ள வீடுகளை இலக்கு வைத்தே இவை நடக்கின்றன என்றும் தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள் ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலி ஸார் தெரிவித்துள்ள தாவது–

வவுனியாவில் இந்த மாதத்தில் இதுவரை கத்தி முனையில் ஒரே பாணியிலான நான்கு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கோவில்குளம், தட்சன்குளம், சாம்பல் தோட்டம் ஆகிய பகுதிகளில் சில நாள்களுக்கு முன்னர் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த வெள் ளிக்கிழமை இரவு பொன்னாவரசன் குளம் பகுதியில் இரு வீடுகளுக்குள் கத்தி, வாள்களுடன் புகுந்த குழு அவர்கள் அணிந்திருந்ததோடு, சங்கிலி உள்ளிட்ட சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதேபோன்று, பூந்தோட்டம் பகுதியில் உள்ள கடை ஒன்றும் வெள்ளிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு 43 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. இவ்வாறான திருட்டுக்களில் ஈடுபடுபவர்கள் முகத்தை மறைத்தவாறு, கறுப்பு நிற ஜக்கெட் அணிந்து வீட்டின் பின் பகுதியூடாக உள்நுழைந்து கத்தி, வாள் என்பவற்றை காட்டி மிரட்டுவதுடன் வீட்டில் உள்ளவர்கள் அணிந்திருக்கும் நகைகளைத் திருடி வருகின்றனர். இந்தத் திருட்டுநடவடிக்கைகளில் நான்கு, ஐந்து பேர் குழுவாகச் செயற்படுகின்றனர். கூடுதலாக ஒரே பாணியில் இடம்பெறும் இத் திருட்டுக்களில் தனிமையில் இருக்கும் வீடுகள் அதிகம் இலக்கு வைக்கப்பட்டுள்ளது..

எனவே, மக்கள் இவ்வாறான திருட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க. தமது வீடுகளுக்கு அருகில் உள்ள வீடுகளுடனும், பொலிஸ் நிலையங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்தால் உடனடியாக தெரியப்படுத்தவும். அயல் வீடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உடனடியாக தெரியப்படுத்தினால் அவர்களின் உதவியுடன் திருடர்களைக் கைது செய்ய முடியும். தற்போது இத்திருட்டுச்சம்பவங்கள் தொடர்பாகத் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ற–21)

## மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு பற்றிய அவதானம் தேவை

### எச்சரிக்கின்றனர் சுகாதாரத்துறையினர்

யாழ்ப்பாணம், ஒக். 26

வடக்கில் டெங்கு நோய் பரவுவது முன்னைய மாதங்களை விடக் குறைவடைந்துள்ளபோதும் மழை காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு பரவக் கூடிய சாத்தியம் நிலவுகிறது என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். எனவே வீட்டிலும் பொது இடங்களிலும் டெங்குத் தொற்றுக் குள்ளாகாது விழிப்பாக இருந்து கொள்ளுமாறு அறிவுறுத் துகின்றனர்.

வடக்கில் யாழ்.மாவட்டத்திலேயே அதிகளவானோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகினர். யாழில் வருட ஆரம் பத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் டெங்குத் தொற் றுக்கு உள்ளாகியிருந்தனர். பின் னர் அது குறைவடைந்து 50 இற்கும் மேற்பட்டோர் தொற்றுக்கு உள்ளாகினர். முன்னைய மாதங்களைவிடக் கடந்த ஓகஸ்ட் மாதம் டெங்குத் தொற்று எண்ணிக்கை குறைவடைந்தது. ஆனால் அந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த மாதம் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை புள்ளிவிவரம் மூலமாகத் தெரியவந்துள்ளது. அது மட்டுமன்றி தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகுவோரின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவே சுகாதாரப் பகுதியினர் கூறுகின்றனர். நுளம்புகள் பெருகியுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் தற் போது டெங்குத் தொற்றால் பாதிக் கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்கள் தொடர்பில் பதிவுகள் ஆரம்பிக்கத் தொடங்கியுள்ளன என்றும் தெரிவித்தனர்.

இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 313 பேரும், கிளிநொச்சியில் 61 பேரும், மன்னாரில் 61 பேரும், வவுனி யாவில் 112 பேரும், முல்லைத்தீவில் 117 பேரும் டெங்கால் பாதிக்கப் பட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 22 ஆயிரத்து 114 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(ற–4)

## யாழில் அதிகரிக்கிறது பெற்றோல் பாவனை

யாழ்ப்பாணம், ஒக். 26

கடந்த 5 ஆண்டுகளில் யாழ்.மாவட்டத்தில் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றின் பாவனை குறைவடைந்துள்ளதுடன் பெற்றோல் பாவனை அதிகரித்துள்ளது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புள்ளி விவரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு 7.4 மில்லியன் லீற்றர் பெற்றோல் (90 ஒக்ரேன்) பயன்படுத்தப்பட்டுள்ளது. இது 2011 ஆம் ஆண்டு 16.5 மில்லியன் லீற்றராக உயர்வடைந்ததுடன், 2013 ஆம் ஆண்டு 9.8 மில்லியன் லீற்றராகக் குறைவடைந்துள்ளது; 2014 ஆம் ஆண்டு 80 ஒக்ரேன் பெற்றோல் பாவனை ஏதுமில்லை என்பதுடன் 92 ஒக்ரேன் பெற்றோல் 19.57 மில்லியன் லீற்றராகவும் காணப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் பாவனை 2006 ஆம் ஆண்டு 10.5 மில்லியன் லீற்றராகவும், 2010 ஆம் ஆண்டு 13.96 மில்லியன் லீற்றராகவும் உயர்வடைந்துள்ளது. பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டு 8.5 மில்லியன் லீற்றராகக் குறைவடைந்துள்ளது.

டீசலைப் பொறுத்த வரையில் 2006 ஆம் ஆண்டு 52.1 மில்லியன் லீற்றராகவும், 2009 ஆம் ஆண்டு 60.5 மில்லியன் லீற்றராகவும் பாவனை இருந்துள்ளது. பின்னர் படிப்படியாகக் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டு 35.8 மில்லியன் லீற் றரே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் குறித்த ஆணைக்குழு அமர்வு நவ.18இல்

## யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு அடுத்த மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது என்று அந்த ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தனக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கிளிநொச்சியில் முதலாவது பகிரங்க அமர்வை நடத்தியிருந்தது. அதன் பின்னர் பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் பகிரங்க அமர்வு நடத்தப்பட்டிருந்தது.

தொடர்ச்சியாக மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பகிரங்க அமர்வு நடத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் ஒரே ஒரு பகிரங்க அமர்வே நடத்தப்பட்டிருந்தது. ஏனைய மாவட்டங்களில் இரண்டு தடவைகள் பகிரங்க அமர்வுகள் நடத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடைசியாக ஜூன் மாதம் அம்பாறையில் பகிரங்க அமர்வு நடத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் ஆணைக்குழு எந்தவொரு பகிரங்க அமர்வும் நடத்தவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பகிரங்க அமர்வுகள் கடந்த சில மாதங்களாக நடத்தப்பட்டிருக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் 18 ஆம் திகதி ஆணைக்குழு அமர்வு நடைபெறவுள்ளதாகவும் இதற்குரிய ஏற் பாடுகளை மேற்கொள்ளுமாறு பணித்துள்ளதாக ஆணைக் குழுவின் தலைவர் பரணகம தெரிவித்துள்ளார். (ந-5)

# கற்ற இளம் சந்ததி வெளிநாடு சென்றதும் நாட்டை மறக்கிறது

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு




யாழ்ப்பாணம், ஒக். 25

படித்து முடித்ததும் வெளிநாடுகளுக்கு எமது இளம் சந்ததியினர் சென்றுவிடுகின்றனர். அவ்வாறு சென்று அங்கு குடியேறிய பின்னர், இலங்கையில் ஈழத்தைப் பிரித்துக் கொடு – அங்குள்ள எமது மக்களின் நிலையைப் பாருங்கள் என்றெல்லாம் உணர்ச்சி பூர்வமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். இலவசக் கல்வியை வழங்கிய இந்த நாட்டுக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப் போகின்றோம் என்பதை மறந்து விடுகின்றனர்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். நியூ சயன்ஸ் வேல்ட் தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் குறித்த கல்வி நிலையத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**வருமானத்தை தேடி ஓடுகின்றனர்**

இந்த வருடம் எமது மாகாணத்தில் இருந்து பொறியியல் துறைக்கு 83 மாணவர்களும், வைத்தியத் துறைக்கு 53 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிந்தேன். பொறியியல் துறையில் தெரிவாகி இருக்கக் கூடிய இந்த 83 மாணவர்களும் அவர்களது கற்கை நெறி முடிவடைந்த பின்னர் எமது மக்களுக்குச் சேவையாற்றுவார்கள் என்று யாவரும் நம்புகின்றோம். ஆனால் பொறியியற் பீடமாணவர்கள் தமது கற்கைநெறிகளை நிறைவு செய்தவுடன் மிகக் கூடிய வருமானத்தை ஈட்டக் கூடிய சிங்கப்பூர், மலேசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி நகர்ந்து விடுகின்றார்கள்.

வேலை செய்து தாய் தந்தையரின் பணத் தேவைகள், சகோதரிகளின் திருமணம் ஆகிய முக்கிய விடயங்கள், கடன்கள் என்பவற்றைத் தீர்த்தவுடன் சிறந்தசீர் வரிசையுடனான திருமணஞ் செய்து அதன் பின்னர் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு திறன்சார் குடிபெயர்வில் சென்று குடியேறி விடுகின்றார்கள். அதன் பின்னர் இலங்கையில் ஈழத்தைப் பிரித்துக் கொடு, அங்கிருக்கும் எம் மக்களின் நிலையைப் பாருங்கள் என்றெல்லாம் உணர்ச்சிபூர்வமாகக் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். நான் இதை ஒரு குறையாகவோ பிழையாகவோ தெரிவிக்கவில்லை. சாதாரணமாக ஒருமனிதனுக்கு இருக்கக்கூடிய எதிர்பார்ப்புக்களும் உணர்வுகளும் தான். குடும்பம் நல்லாயிருக்க வேண்டும், நான் நல்லாயிருக்க வேண்டும் என்று எண்ணுவது பிழையென்று கூற முடியாது.

**கடனை மறக்கக் கூடாது**

ஆனால் இவைகளை விட எமக்கு இருக்கக் கூடிய மிகப்பெரிய கடன் ஒன்றும் உள்ளது என்பதை நாம் மறந்ததைத் தான் கூற வருகின்றேன். இலவசக் கல்வியை வழ்ங்கிய இந்த நாட்டுக்கும் இந்த மண்ணுக்கும் என்ன பிரதியுபகாரம் செய்தோம் என்ற கேள்விக்கு இவர்கள் விடை தேடிக் கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கின்றார்கள். அதனால் தான் பலர் பணத்தை அள்ளி இங்குள்ளவர்களுக்குக் கொடுத்துவிட்டு தமது கடமை முடிந்தது என்று இருந்து விடுகின்றார்கள்.

மருத்துவ பீடத்திற்குத் தெரிவான மாணவர்களும் தமது கற்கை நெறிகளை முடித்தவுடன் கொழும்பை நோக்கி நகர்ந்து விடுகின்றார்கள். வட– கிழக்கு மாகாணத்திற்கு வரப் பின் நிற்கின்றார்கள். மேற்படிப்பு படித்து விட்டு மேற்குநாடுகளில் குடியிருக்கச் சென்று விடுகின்றார்கள்.

வட–கிழக்கு மாகாணங்களின் நிலைபற்றி வெளியிலிருந்து கருத்துக் கூறுபவர்கள் ஆகக் குறைந்தது தமது சேவைகளை எங்களுக்கு வேண்டியவாறு தரமுன் வரவேண்டும். கல்வி கற்று முடிந்தபின் வெளிநாடுகளுக்கு ஓடிவிடுகின் றோம். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். எமது மாணவர்கள் பட்டப் படிப்புக்களை முடித்த பின்பு ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்காவது இங்கு கடமை புரிய முன்வர வேண்டும். இதனைச் சட்டமாக்கலாமா என்று பரிசீலித்துவருகின்றோம் – என்றார். (ந–5,101)

# அதிக மரங்களை நடும் அமைப்புக்கு நன்கொடை உதவியில் முன்னுரிமை

## வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக், 26

வடமாகாண மரநடுகை மாதமான கார்த்திகையில் அதிக எண்ணிக்கையிலான மரக்கன்றுகளை நடுகை செய்து பராமரிக்கும் பொது அமைப்புகளுக்கு பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து வழங்கப்படும் உதவிகளில் முன்னுரிமை வழங்கப்படும் என உத்தரவாதம் அளித்துள்ளார் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

வடமாகாண மரநடுகை மாதம் தொடர்பாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வடக்கு மாகாணத்தைப் பசுமையாக்கும் திட்டத்தின் ஒரு கட்டமாக வடமாகாண மரநடுகை மாதமான கார்த்திகையில் ஐந்து இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். நடுகை செய்தால் மட்டும் போதாது. குறிப்பிட்ட காலம் வரையில் கண்ணும் கருத்துமாக அவற்றைப் பராமரிக்கவும் வேண்டும். மிகவும் அத்தியாவசியமான இந்தப் பெரும் பணியில் பொது அமைப்புகளை நம்பித்தான் நாங்கள் இறங்கியுள்ளோம். பொதுமக்களின் பங்கேற்பு இல்லாத எந்தத் திட்டமும் வெற்றி பெறாது. கடந்த ஆண்டு மரநடுகை மாதத்தின் போது, கவனமாக நட்டுப் பராமரிப்போம் என்று உறுதிமொழி பெற்று பல ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு மரக் கன்றுகளை இலவசமாக வழங்கியிருந்தோம். அவற்றில் பெரும்பாலானவை இன்று செழித்து வளர்ந்திருக்கின்றன.

பொது அமைப்புகள் பொதுக் காணிகளிலோ அல்லது தனியார் காணிகளிலோ அதிக எண்ணிக்கையான மரங்களை நட்டுப் பராமரிப்பதற்கு முன்வர வேண்டும். அவற்றுக்குத் தேவையான மரக்கன்றுகளை நாம் இலவசமாக வழங்கு வதற்குத் தயாராக உள்ளோம். மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியாக, வாழ்வாதார மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென்று 6 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த நிதியில் இருந்தே சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் போன்ற பொதுஅமைப் புகளுக்கும், வாழ்வாதார உதவி தேவைப்படும் பொருளாதாரரீதியாகப் பின்தங்கிய தனிநபர்களுக்கும் உதவிகளைச் செய்துவருகிறோம். 2016ஆம் ஆண்டு எனக்கு ஒதுக்கப்பட உள்ள நன்கொடை நிதியில் கூடுதலான மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்கும் அமைப்புகளுக்கே முன்னுரிமை வழங்குவேன் என்ற உத்தரவாதத்தைத் தருகிறேன். மாகாணசபை உறுப்பினர்களிடமும் இதற்கு முன்னுரிமை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.– என்றார்

இந்த நிகழ்வில் பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், வடமாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், விந்தன் கனகரத்தினம், ச.சுகிர்தன், அ.பரஞ்சோதி, இ.ஆர்னல்ட், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் நிரஞ்சன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ந–10)

# அத்துமீறி இரவில் வீடு புகுந்த சிப்பாய்க்குப் பிணை அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 26

நெடுந்தீவில் இரவில் அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடற்படைச் சிப்பாய் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் குறித்த கடற்படைச் சிப்பாய் நள்ளிரவு நேரம் வீடு ஒன்றினுள் புகுந்துள்ளார். அங்கிருந்த பெண் கூச்சலிட்டதால் அயலவர்கள் அங்கு கூடியுள்ளனர். அதனால் குறித்த சிப்பாய் அங்கிருந்து தப்பியோடிவிட்டார். எனினும் அவர் அங்கிருந்து தப்பியோடியபோது அவரது அடையாள அட்டை உள்ளிட்ட பேர்ஸ் தவறி விழுந்து விட்டது.

அங்குநின்ற பொதுமக்கள் குறித்த அடையாள அட்டையை எடுத்து நெடுந்தீவுப் பொலிஸில் ஒப்படைத்து அது தொடர்பில் முறைப்பாடு செய்திருந்தனர். அதனடிப்படையில் குறித்த சிப்பாய் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கடந்த தவணை அவர் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தபோது கடற்படை அதிகாரிகள் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். குறித்த சிப்பாயைப் பிணையில் விடுவிக்குமாறு கோரப்பட்டது. அதன் பின்னர் குறித்த சிப்பாய் பிணையில் விடுவிக்கப் பட்டார். அவர் தொடர்பான விசாரணையைப் நெடுந்தீவுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளபோதும் கடற்படைப்படையினரும் அது தொடர்பில் விசாரிப்பதாகக் கூறி அவரைப் பொறுப்பேற்றுச் சென்றனர். அவர் தொடர்பான அடுத்த வழக்கு அடுத்த வருடம் ஜனவரி 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

அதேவேளை சிலதினங்களுக்கு முன்னர் வேலணையில் உள்ள கடற்படைச்சிப்பாய் உயிரை மாய்த்தமைக் குக் காரணம் அவர் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையே என்று அவரது பெற்றோரால் சந்தேகம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதனால் குறித்த படை முகாமின் உயரதிகாரி கைது செய்யப்பட்டு ஊர்காவற் றுறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந–4)

# வைத்தியசாலையில் குழப்பம் செய்தவர் கம்பி எண்ணுகிறார்

யாழ்.போதனா வைத்தியசாலையில் அவதூறான வார்த்தைப் பிரயோகம் செய்தவர்கள் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகம் அதிரடி நடவடிக்கை எடுத்ததால் அவர்களில் ஒருவர் தற்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார். தப்பியோடியவர்களைக் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்னர் நள்ளிரவு நேரம் வைத்தியசாலைக்குச் சென்ற 7 பேர் கொண்ட குழு அங்கு அவதூறான வார்த்தைகளால் தர்க்கப்பட்டுள்ளனர். அந்த நேரம் வைத்தியசாலைப் பணிப்பாளர் அவ்வழியாகச் சென்றுகொண்டிருந்த போது குறித்த குழுவினரின் அநாகரிகமான செயற்பாட்டைக் கண்டுவிட்டார். உடனடியாக அது பற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அதனால் சில நிமிடங்களில் பொலிஸ் வந்திறங்கியது. அதனால் குறித்த குழுவினர் தப்பியோட அவர்களில் ஒருவர் மட்டும் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். அவரை யாழ். நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப் பட்டது. தப்பியோடிய ஏனையவர்கள் இன்னும் சரணடையவில்லை. அவர்களைக் கைது செய்யப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்போது நாட்டின் பல பாகங்களில் கடும் மழை பெய்து வருகின்றது. அதனால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மழை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும் விட்டு வைக்கவில்லை. அவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை களுத்துறை உள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். அங்கு அவரது உத்தியோகபூர்வக் கார் சகதிக்குள் மாட்டிக் கொண்டது. அதையடுத்து அங்கிருந்தோர் காரைத் தள்ளி சகதிக்குள் இருந்து வெளியே எடுத்தனர். (ற)

# நிலக்கீழ் மாளிகை எனக்கானது அல்ல

## மகிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26

ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள இரகசிய நிலக்கீழ் மாளிகை தமது சொந்த தேவைக்காக அமைக்கப்பட்டதல்ல என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குறித்த கட்டடம், ஜனாதிபதி உள்ளிட்ட அரசின் முக்கியஸ்தர்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் போர்க் காலத்தில் பாதுகாப்புக் குழு கூட்டத்தையும் குறித்த நிலக்கீழ் மாளிகையிலேயே தாம் நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் நுட்பமான அதிநவீன முறையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட குறித்த மாளிகை தொடர்பில், அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பகிரங்கப் படுத்தியிருந்ததுடன், அதனை பார்வையிடக் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். (ற)



# நாடாளுமன்றத்தில் புத்திஜீவிகள் இல்லை

## ஜே.வி.பி. விமர்சனம்

கொழும்பு, ஒக்.26

தற்போதைய நாடாளுமன்றத்தில் புத்திஜீவிகள் யாரும் இல்லை என்று விமர்சித்துள்ளது மக்கள் விடுதலை முன்னணி.

தனியார் ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இவ்வாறு கடுமையாக விமர்சித்துள்ளார்.

அவர் மேலும் அதில் தெரிவித்துள்ளதாவது:-

முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிலுள்ள நூலகத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்ற நடைமுறைகள் தொடர்பான அறிவை வளர்த்துக் கொண்டார்கள்.

ஆனால் இன்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் நூலகம் இருக்கும் பக்கமே செல்வதில்லை. அதற்குப் பதிலாக மசாஜ் நிலையங்களில் தான் அதிகளவு நேரத்தைக் கழிக்கின்றார்கள்.

லக்ஷ்மன் கதிர்காமர், ரொனி டி மெல், ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, அனுர பண்டாரநாயக்க போன்ற புத்திஜீவிகள் மற்றும் நாடாளுமன்றத்தின் நடைமுறைகள் தொடர்பான அறிவைக்கொண்டிருந்தவர்களின் காலத்தில் - நாடாளுமன்றம் சிறந்து விளங்கியது - என்று அவர் தெரி வித்துள்ளார். (ற)



# பிள்ளையான் மீது பொய்க் குற்றச்சாட்டு!

## விமலவீர எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.26

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் - அவரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் இவர் ஜனாதிபதியை சந்தித்தபோது இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாண தேர்தல்களில் சுதந்திரக் கட்சி வெற்றிபெறுவதற்குப் பிள்ளையான் தரப்பு முக் கிய பங்காற்றியுள்ளது என்று குறிப்பிட்ட அவர், அந்தவகையில் பிள்ளையானைப் பாதுகாப்பது சுதந்திரக் கட்சியின் கடமை என்று அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், கடந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் நிலவிய விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தை முறியடிக்கவும் பிள்ளையான் தரப்பு பெரும் பங்காற்றியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலைக்குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்டுள்ள பிள்ளையானிடம், தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (ற)

# முஸ்லிம்கள் அச்சுறுத்தப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் யாசீன் ஜவாஹிர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஒக்.26

முல்லைத்தீவு முறிப்பில் முஸ்லிம் மக்களை அச்சுறுத்தப் படுவதை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் யாசீன் ஜவாஹிர்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த மக்கள் 1990 ஆண்டு நீண்ட இடப்பெயர்வின் பின்னர் தங்களது சொந்த இடத்தில் தற்போது குடியேறியுள்ளனர். இவர்கள் மீளக் குடியேறும்போது பல சவால்களை அங்கு எதிர்நோக்கியுள்ளனர். ஆனால், அரசியல்வாதிகள் சிலரது செயற்பாடுகள் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையே பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற மாற்றுப் பயங்கரவாதச் செயற்பாடாக உள்ளது.

முறிப்பு, நாகஞ்சோலை, கொத்தியா கும்பம் போன்ற பகுதிகள் 1982 ஆண்டு, 1984 ஆண்டு அரசால் பெமிற் வழங்கப்பட்டு; முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்டது. குடியேறிய அந்தப் பகுதி மக்கள் தங்களது சொந்தக் காணிகளில் மண்டியிருந்த பற்றைக் காடுகளையே அகற்றினர். பெரிய மரங்களை அழித்து, காடுகளை அவர்கள் அழிக்கவில்லை. இந்தக் குடியேற்றத்தின் பின்னால் ரிஷாத் பதியுதீனுக்குத் தொடர்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனை முற்றாக நான் மறுக்கின்றேன். குறித்த மக்கள் தமக்கு கிடைத்த பணத்திலேயே தங்களது- காணிகளை துப்புரவு செய்கின்றனர். தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவு சாகுலையக் கூடாது - என்றார். (ற-10)



# அவன்கார்ட் சம்பவம் தொடர்பான நிலைப்பாட்டை தெளிவுபடுத்துக

## சட்டமா அதிபர் திணைக்களத்தை கோருகின்றார் மைத்திரி குணரத்ன

கொழும்பு, ஒக்.26

அவன்கார்ட் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மனசாட்சியுடன் நடந்துகொண்டு தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான மைத்திரி குணரத்ன வலியுறுத்தியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அதிகாரிகள் அல்லாதவர்களிடம் தன்னியக்கத் துப்பாக்கிகள் காணப்படுமாயின், அது குறித்து விசாரணை செய்து உண்மையைக் கண்டறிய வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், வெற்று ரவைகளும் துப்பாக்கிகளும் வைத்திருந்த பலர் மீது சட்டமா அதிபர் திணைக்களம் வழக்குத் தாக்கல் செய்த சம்பவங்கள் கடந்த காலத்தில் பதிவாகி யுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

சாதாரண நபர்கள் மீது ஒரு வகையிலும், அதிகாரிகள் என்றால் வேறு வகையிலும், சட்டமா அதிபர் திணைக்களம் இருவேறு விடயங்களை கையாள்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டின் சட்டத்தின் பிரகாரம் துப்பாக்கி ரவைகள் மற்றும் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் காணப்பட்டாலும், குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் இதற்கு பிணை வழங்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** பிறரிடம் உதவி பெறுவதை தவிர்ப்பது நல் லது. தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப இலாபம் உண்டாகும். உடல் நலனில் அக்கறை செலுத்துவது அவசியம்.

**இடபம்:** குடும்பத்தினர் அனைவரும் பாசத்துடன் நடப்பர். தொழில் வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதா யம் கிடைக்கும். திடீர் செலவால், கடன் வாங்க நேரிடலாம்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் பன்மடங்கு கூடும். நண்பருக்கு தேவையான உதவி செய்து மகிழ் வீர்கள்.

**கடகம்:** சூழ்நிலை அறிந்து, பிறரிடம் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். வாகனப் பயணத்தில், மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பெண்கள், மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்கள்.

**சிங்கம்:** நண்பருடன் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில், திடீர் மாறு தல் செய்வீர்கள்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக் கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். மனை வியின் செயற்பாடு, வளர்ச்சிக்கு துணை நிற்கும்.

**துலாம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், புதிய முயற்சி வெற்றி பெறும். இலாபம் உயரும். வீட்டுத்தேவை, தாராள பொருள் செலவில் நிறைவேறும். பெற்றோரின் உடல் நலனில் அக்கறை தேவை.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் ஆதரவால்,நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர் பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள், குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.

**தனுசு:** பொறுப்புடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், அமோக இலாபம் உண் டாகும். உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். பெண்கள் ஆடம்பர விடயங்களில் நாட்டம் கொள்வர்.

**மகரம்:** நண்பருக்கு தேவையான உதவியை செய் வீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து மூலம், புதிதாக வரு மானம் வரும். விருந்து, விழாவில், அடிக்கடி பங்கேற்பீர்கள்.

**கும்பம்:** குடும்ப விடயத்தை, பிறரிடம் பேச வேண் டாம். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப இலாபம் உண்டாகும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதி கரிக்கும். வீட்டுப்பிராணிகளிடம் விழிப்பாக இருக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடு படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இடையூறு வில கும். இலாபம் உயரும். வீடு, வாகனத்தில், பராமரித்த செலவு உண்டாகும். பிள்ளைகள், படிப்பில் சிறந்து விளங்குவார்கள்.

# அப்பாவின் அதிரடி

## பாடசாலைக்கு தமதமாகச் செல்லும் குழந்தைகளும் வினோத காரணங்களும்

அமெரிக்காவின் உட்டா மாநிலத்தைச் சேர்ந்த சேத் கிங் ஐந்து பிள்ளைகளின் அப்பாவான இவர். தனது பிள்ளைகளில் எவரேனும் ஒருவருக்காக வாரம் ஒரு முறையாவது தாமதத்துக்கான காரணத்தை பாட சாலைக்குஎழுத வேண்டிய நிலை வந்தது. இதனால், பல முறை ஒரு சில காரணங்களையே எழுதிய சேத் காலப் போக்கில் இந்தமுறைகள் பிடிக்காமல் போனது. இவருடைய பதினைந்து முதல் மூன்று வயது வரை உள்ள பிள்ளைகள் அவ்வப்போது தூங்கிப்போவதாலும் அல் லது பள்ளிக்கு தயாரா வதில் மெத்தனமாக இருப்பதாலும், இந்த நிலைமை நீடித்து வந்தது. எனவே ஒருமுறை தனது மூத்த மகளுக்காக அவர் எழுதிய குறிப்பில் அவள் தூங்கிப்போனதற்கு காரணமாக அவள் தனது கனவில் உலகைக் காப்பாற்றும் வேலையில் ஈடுபட்டிருந்ததாகும் என்று குறிப்பிட்டிருந்தார் இவ்வாறு பல வினோதமான காரணங்களை தொடார்சியாக பதிவுசெய்து வந்துள்ளர் சேத். இதுபோல தனது பிள்ளைகளுக்காக எழுதுபவை மிகவும் வித்தியாசமான குறிப்புகளாக இருப்பதை உணர்ந்த சேத், இவற்றை பிரபலப்படுத்தும் நோக்கத்தில் தன்னுடைய இன்ஸ்டகிராம் பக்கத் திலும் வெளியிடத் தொடங்கியுள்ளார். இந்த முயற்சியால் தற்போது உலகெங்கிலுமுள்ள பெற்றோருக்கு சேத் தாமதத்துக்கான காரணம் சொல்வதில் முன் உதாரணமாகத் திகழ்கிறார் என்றும். இவரின் வித்தியாசமான காரணங் களுக்கு பலரும் நகைச்சுவையாக பதில் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

## பேஸ் புக்கில் பிடித்தவை...



### மிகக் கொடுமையான மூன்று

1.இளமையில் பசி 2.வறுமையில் கடன் 3.முதுமையில் தனிமை

**மனைவி:** இஞ்சேரப்பா என்ன இது என்ர போட்டோவ எப்பவும் உங்கட பேசுக்க வைசிருக்கிறியலே.
**கணவன்:** எந்தளவு பெரிய கரம் வந்தாலும் உன்ர போட்டேவப் பாத்தால் காணாமல் போயிடும் அதுதானடி.
மனைவி: அவ்வளவு பவர் எனக்கு இருக்குதாங்க?
**கணவன்:** ஓமடி.. ஒவ்வெருக்கால் பாக்கேக்கயும் இதவிடப் பெரிய கட்டடம் இருக்காதெண்டு மனசு சொல்லுதே.

..............................

**மகன்:** இன்று பூகோள ஆசிரியர் 'அமெரிக்கா எங்க இருக்குதெண்டு கேட்டவர் அம்மா
**அம்மா:** அடப் பாவமே! சின்ன வயசில என்னட்டயும் இதே கேள்வியத்தான் கேட்டவயள்! இன்னுமா தெடிக் கொண்டிருக்கினம்.

..............................

கல்யாணம் ஆனவனுக்கு அடி விழுதே என்ட கவலை..
கல்யாணம் ஆகாதவனுக்கு முடி விழுதே என்ட கவலை..

# பாம்புகளின் கிராமம்

“பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்” என்பது பழமொழி. ஆனால் அப்பேர்ப்பட்ட பாம்புகளையே விளையாட்டு பொருளாகப் பார்க்கும் கிராமம் தான் செட்பல். கிழக்காசிய நாடுகள் பலவும் பாம்புகளை உணவுகளாகப் பயன்படுத்தும் வேளையில் இன்றும் பாம்புகள் மீதான பயம் மனிதர்களுக்கு தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. அதன் காரணமாக தான் பாம்புகளை மனிதர்கள் தெய்வமாகவும், புனிதமாகவும் கருதி வணங்க தொடங்கினான். பல்வேறு இடங்களில் பாம்புகள் தொடர்பாக வித்தியாசமான வழிபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

அப்பேர்ப்பட்ட ஒரு கிராமம் தான் மத்திய பிரதேசத்தின் சோலப்பூர் மாவட் டத்தில் உள்ள செட்பல். இந்தக் கிராமத்தின் சித்தீஸ்வர் ஆலயத்தில் உள்ள தெய்வம் மிகவும் சக்திவாய்ந்ததாகக் கருதப்படுகிறது. மேலும், பாம்புக் கடி காயங்களைக் குணப்படுத்தும் சக்தி உடையது என்றும் கூறப்படுகிறது. பாம்பு கடி பாதிப்புக்கு உள்ளானவர்கள் சிகிச்சைக்காக இந்தக் கோயிலுக்கு அழைத்து வரப்படுகின்றனர். இதன் காரணமாகவே இங்கு சிவனின் மேல் ஏழு தலை நாகம் இருப்பது போன்ற சிலை பித்தளையால் அமைக் கப்பட் டுள்ளது. அது மட்டுமில்லாமல், இந்தக் கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளி லும் பாம்புகள் வசிப்பதற்கென தனியாக பரண் மேல் இடம் அமைத்துள்ளனர். மேலும், தங்கள் வீடுகளில் பாம்புகளில் ஓவியங்களையும் வரைந்து வைத்துள்ளனர். வீட்டில் நாம் சாப்பிட்டுகொண்டு இருந்தாலும்இ அருகிலேயே பாம்புகள் ஊர்ந்து செல் லும். அந்தளவுக்கு இங்குள்ள அனைத்து வீடுகளிலும் பாம்புகளின் நடமாட் டத்தை சகஜமாக பார்க்கமுடிகிறதாம். எனினும் இந்தக் கிராமத்தில் பாம்பு கடித்து சாவடைந்தவர்கள் என்று யாரும் இல்லை என்பது விந்தைதான்.





# தெலுங்கிலும் தத்தளிக்கும் விஜயின் கத்தி

விஜய் மற்றும் சமந்தா நடிப்பில் கடந்த ஆண்டு வெளிவந்த படம் கத்தி . இந்தப் படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கியிருந் தார். லைக்கா நிறுவனம் படத்தை தயாரித்து வெளியிட்டது. இந்தப்படம் குறும்பட இயக்குநர் ராஜசேகர் இயக்கிய தாகபூமி என்ற குறும்படத்தின் கதைத் தழுவல் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, படம் வெளிவருவதற்கு பெரிய இடைஞ்சலும் இருந்தது. தற்போது இந்தப் பிரச்சினை மறுபடியும் கிளம்பியுள்ளது. அதாவது, கத்தி படத்தை தெலுங்கில் ரீமேக் செய்ய ஏற் பாடு கள் நடைபெற்று வருகிறது. இதன் ரீமேக் கில் நடிகர் சிரஞ்சீவி நடிக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இந்தநிலையில் தஞ்சாவூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள திருக்காட்டுப்பள்ளி, இளங்காடு, விண்ணமங்கலம், கள்ள பெரம்பூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கையெழுத்திட்டு சிரஞ்சீவிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும், அதில் அவர் கத்தி படத்தின் தெலுங்கு ரீமேக்கில் நடிக்கக்கூடாது என கோரியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இதற்கு காரணம், மேலே கூறியுள்ளபடி ராஜசேகர் இயக்கிய தாகபூமி என்ற குறும்படத்தின் கதைதான் கத்தி. எனவே, தாங்கள் அதில் நடிக்கக்கூடாது என்று கூறியுள்ளதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ் - 2015



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி

செல்வி **ரவிக்குமார் தனுசாயனி**

அவர்கள் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பயிற்றுவித்த வகுப்பாசிரியர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் பாடசாலை அதிபரையும் வாழ்த்துவதோடு அவர் மென்மேலும் கல்வியில் பல சாதனைகளைப் படைத்து சிறப்புற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, மாமா குடும்பத்தினர், சித்திமார் மற்றும், உற்றார், உறவினர்கள்.

(64164)(13,15,16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப் பரிசில் பரீட்சை - 2015

யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை

செல்வி **சு.வேந்திரன் கோபிகா**

அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டி கல்வியில் மேலும் சிறப்புற வாழ்த்துவதோடு அவரைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

யா/இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை -2015



லோ.சஜிந்தன் 154



வே.சஞ்சிகா 154



இ.கௌதமன் 153



| | | | |
|---|---|---|---|
| தீ.தீபிகா | 150 | சு.அபிநயா | 128 |
| த.கிருசன் | 149 | சு.அர்ஜுன் | 125 |
| தீ.மஸ்மிதா | 147 | செ.அபிசாய் | 124 |
| ச.டன்ஸிரா | 145 | அ.மயூரிகா | 116 |
| ஜே.டினோஜன் | 145 | ர.ஷெனா | 108 |
| ஜெ.பிரதாஸ் | 144 | ச.சருஜா | 106 |
| ஜெ.லக்சனன் | 142 | ச.கஜனந்தி | 104 |
| உ.அபிலாஷ் | 133 | சி.மாபேல் | 100 |
| ஆ.பூஜா | 130 | த.மதுசாளினி | 100 |
| ர.கிருஷா | 129 | | |

| | | | |
|---|---|---|---|
| ஜெ.சுபாஸ்கர் | 99 | ஜெ.தர்சா | 85 |
| க.லஷ்சிதா | 99 | லோ.சஸ்மிதா | 83 |
| ச.சந்திஸானி | 98 | ர.பிரிஸ்சிகா | 82 |
| அ.தேனுஜா | 94 | கி.தமிதா | 79 |
| ஜெ.லதுசன் | 87 | க.சமிந்தன் | 79 |
| கே.சதுர்ந்திகன் | 87 | ச.டனுஸ்ரிகா | 75 |
| கீ.டிஷ்சிகா | 85 | ஜெ.ஜெராஸா | 72 |

*Best wishes*

2015 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களை வழிப்படுத்திய அதிபர், பகுதித்தலைவர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/ இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்.

(c 15999) (14,15)

பாடசாலைச்சமூகம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் கோகுலராசா - புவனேஸ்வரி தம்பதியின் புதல்வன்



செல்வன் **கோ.தீபிகன்**

2015 இல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவரது வெற்றிக்கு உறுதுணையாக விளங்கிய பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் எல்லோரையும் பாராட்டுவதோடு தீபிகனைப் பத்திரகாளி அம்பாள் அருளினால் கல்வியில் மென்மேலும் உயர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

88/2, பத்திரகாளி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(64165)(11,15,16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி **சசிகுமார் சாருஜா**
(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
182 புள்ளிகள்



செல்வன் **மலர்வண்ணன் அகரன்**
(யா/இந்து ஆரம்ப பாடசாலை)
175 புள்ளிகள்



செல்வன் **அன்ரன் பிரான்சிஸ் செரன் டிவோசன்**
(யா/அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி)
154 புள்ளிகள்

எமது பிரதேச சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்துள்ளார்கள். இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் கல்வியில் மேலும் பல சிறப்புகள் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

(64183) (13,15)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## 2015 தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில்



சித்தியடைந்த மாணவர்களான
இடமிருந்து வலம்

1. சுதர்சன் யதுர்ஷன் - 161
2. செல்வக்குமார் திலக்ஷன் - 158
3. ஜெயசீலன் யதுஷிகா - 171
4. சிவலோகநாதன் பவித்திரா -185
5. பகீரதன் லாசன்ஜா - 168
6. முகுந்தன் அபிவர்மன் - 162
7. தயாபரன் சாத்விகன் -152



இவர்களையும் இவர்களுக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்

மு/குமுழமுனை மகாவித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டை இழந்தது பிக்கப்: பயணித்த மூவர் படுகாயம்



கிளிநொச்சி,ஒக்.26

கிளிநொச்சிப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிக்கப் தடம் புரண்டதில் அதில் பயணித்த மூவர் படுகாயமடைந்தனர். நேற்று அதிகாலை 3 மணியளவில் வேகமாகப் பயணித்த பிக்கப் ரக வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, கிளிநொச்சிப் பகுதியில் வீதியோரம் நின்ற மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான வாகனம் தடம் புரண்டதோடு, குறித்த மரமும் முறிந்து வாகனத்தின் மீது சாய்ந்தது. இந்தச் சம்பவத்தின்போது வாகனத்தில் பயணித்த மூவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்படடுள்ளனர். சம்பவ இடத்துக்கு காலையில் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டதோடு, முறிந்து வீழ்ந்த மரத்தையும் அகற்றினர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-101)


**விவசாய பீட முன் கற்றோர் அவை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

The Alumni Association of Faculty of Agriculture University of Jaffna (AAFA- UJ)

ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்-2015

மேற்படி அவையின் ஆண்டுப்பொதுக் கூட்டத்திலும் புதிய நிர்வாக சபைத் தெரிவிலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு யாழ். பல்கலைக் கழக விவசாய பீடத்தில் பட்டப் படிப்பினை நிறைவு செய்த அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:** 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** மு.ப10.00 மணி
**இடம்:** யாழ்.பல்கலைக் கழக ஊழியர் அபிவிருத்தி நிலையம்

**க. சஞ்சயன்**
செயலாளர்


## ஆறாம் வகுப்புக்கான அனுமதிகள் கோரல்

கிளிநொச்சி,ஒக்.26

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியின் 2016 ஆம் ஆண்டின் 6ஆம் வகுப்புக்கான அனுமதிகள் கோரப்பட்டுள்ளன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களைப் பாடசாலை அலுவலகத்தில் பெற்று, எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர் ரி.வரதன் அறிவித்துள்ளார். (ஐ-ரி5)

## வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 13 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு

அச்சுவேலி,ஒக்.26

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் அங்கவீன முற்றோரில் மேலும் 13 பேருக்கு சுயதொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான ஊக்குவிப்பு நிதி உதவி வழங்கப்படவுள்ளன. சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான செயலகம் கொடுப்பனவுக்கான நிதியை கோப்பாய்ப் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுக்கு வழங்கியுள்ளது. அதனைப் பயனாளிகள் வந்து பெற்றுக்கொள்ளவும். இந்த நிதியைப் பயன்படுத்தி கோழி வளர்ப்பு, ஆடு, மாடு வளர்ப்பு, தையல் ஆகிய தொழில் முயற்சியை மேற்கொள்வதற்கு, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த சுயதொழில் முயற்சிக்கான கொடுப்பனவுகளை நா.தங்கராசா (பெரியபொக்கணை வாதரவத்தை), வள்ளி தெய்வேந்திரம் (ஆவரங்கால் மேற்கு), மா.புலேந்திரன் (சிவன்வீதி, ஆவரங்கால்), ந.அன்னபாக்கியம் (சிறுப்பிட்டி தெற்கு), ப.குமாரசாமி(புத்தூர் கிழக்கு), ந.லலிதா (இடைக்காடு, அச்சுவேலி), க.குணசீலன் (பழைய வீதி, கோப்பாய் தெற்கு), சா.ரஞ்சித்குமார் (உரும்பிராய் தெற்கு), க.இராசதுரை (வசந்தபுரம் இருபாலை), போல் தனஞ்செயன் (புதிய செம்மணி வீதி, இருபாலை), நா.புவனேஸ்வரி (நீர்வேலி மேற்கு), ஞா.தங்கப்பதுமை (வளலாய் கிழக்கு),ஞா.மரியநெற் (உரும்பிராய் கிழக்கு) ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். இந்தக் கொடுப்பனவுகளைச் சம்பந்தப்பட்டவர்கள் பிரதேச செயலக சமூக சேவை பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (ஐ-11)

## மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்

### மாற்றுத்திறனாளிகள் ஒன்றியத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

மாற்றுத்திறனாளிகளின் தேவைகள் கருதி சமூக சேவைகள் அமைச்சால் தேவையுடையோர்களுக்கு உரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். மட்டுப்படுத்தப்பட்டவர்களுக்கு மட்டும் வழங்கப்படுவதால் பாதிப்புற்றுள்ள ஏனையோர் இன்னொருவரின் உதவியை எதிர்பார்க்க வேண்டியுள்ளது என வடமாகாண மாற்றுத் திறனாளிகள் ஒன்றியத் தலைவர் வெ.சுப்பிரமணியம் தெரிவித்தார். வலி.மேற்கு அரச அலுவலர்களுக்கான இருநாள் பயிற்சிப் பட்டறை யாழ்.நகரில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட வளவாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் வெ.சுப்பிரமணியம் மேலும் தெரிவிக்கும்போது; ஒரு பிரதேச செயலர் பிரிவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மூவாயிரம் ரூபா கொடுப்பனவு 50 பேருக்கு மட்டுமே சமூக சேவைகள் அமைச்சு ஒதுக்குகின்றது. ஆனால், ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் 300க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அதிகரிக்கின்றபோது, சமூக சேவைகள் அமைச்சு குறைந்தது 100 பேருக்காவது இந்தக் கொடுப்பனவுகளை வழங்க முன்வர வேண்டும். மேலும், அரச வேலை வாய்ப்பில் மருத்துவரால் உறுதிப்படுத்தப்பட்ட மாற்றுத் திறனாளி அல்லது விசேட தேவை உடையவர்களுக்கு அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். இதனைப் பொறுப்பு வாய்ந்த திணைக்களத் தலைவர்கள், அமைச்சு செயலாளர்கள் உள்வாங்கி, நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார். வலி.மேற்கைச் சேர்ந்த 25 அலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர். (ஐ-50)


**வீடு வளவு விற்பனைக்கு**

இல.333, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் பரப்பு 3 குளி 7.55 விஸ்தீரணம் கொண்ட வீடுவளவு விற்பனைக்குண்டு.

(65570)(11,16,17) தொடர்பு: 076 702 3565



**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் (சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691



## சாவகச்சேரி பிரதேசசபை – கொடிகாமம்

## சபை நிதி வேலைத்திட்டத்திற்கான கேள்வி கோருதல்

01. தலைவர் பெறுகைக்குழு சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியிலில் (Black list) சேரத்துக் கொள்ளப்படாதவராகவும் அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள தகமையுடைய கேள்விதாரர்கள் **செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் (தொலைபேசி:** 021-3734825 மின்னஞ்சல் - chavakachcherips1@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை 26.10.2015 தொடக்கம் 09.11.2015 திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்** எனும் இடத்திலிருந்து **26.10.2015**ஆம் திகதியிலிருந்து **09.11.2015** வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**855/-** செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
05. விலைக் கேள்விகள் 11.11.2015ஆம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி இணைப்பிரதி ஆகியவற்றை பூரணப்படுத்தி **தலைவர் பிரதேச சபை பெறுகைக்குழு சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்** எனும் முகவரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விவரத்தினை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். 11.11.2015 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக் கேள்விகள் திறக்கப்படும். அந்நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
06. கேள்வி பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாக செலுத்தப்பட வேண்டும்

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (VAT நீங்கலாக) (மில்லியன்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | கைதடி நாவற்குழி தெற்கு பிரதான வீதியுடன் இணைக்கும் பாடசாலை வீதி புனரமைத்தல் | 0.546 | 01 மாதம் | C9 | 5500.00 |
| 02 | தலைமை அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் கொடிகாமம் | 0.600 | 01 மாதம் | C9 | 6000.00 |
| 03 | நாவற்குழி தெற்கு கோவில் வீதி புனரமைத்தல். | 0.367 | 01 மாதம் | C9 | 3700.00 |
| 04 | செம்பாடு கொற்றாங்கூடல் வீதி புனரமைத்தல் கைதடி. | 0.642 | 01 மாதம் | C9 | 6500.00 |
| 05 | கம நல சேவைத் திணைக்களம் முன் வீதி புனரமைத்தல் கைதடி. | 0.642 | 01 மாதம் | C9 | 6500.00 |
| 06. | வரணி இயற்றாலை கந்த சாமி கோவில் முன் வீதி. | 0.450 | 01 மாதம் | C9 | 4600.00 |

**திருமதி. தர்சினி தயானந்தன்.**
தலைவர்
பெறுகைக்குழு,
சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.

(10.15.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வருடங்களாகத் திருத்தப்படாத வீதி பிரதேச சபையிடம் மனு கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

வலி.தென்மேற்கு பிரான்பற்று கிராமத்துக்கு உட்பட்ட முல்லையடியாவத்தை வீதி கடந்த 50 வருடங்களுக்கு மேலாக மிகமோசமாக அழிவடைந்துள்ளது. இது தொடர்பில் அந்தப் பிரதேச மக்களால் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மிகவும் மோசமாக அழிவடைந்துள்ள பிரான்பற்று- முல்லையடி வீதி, யாவத்தை வீதி தொடர்பாக சுமார் 100 பேர் கையெழுத்திட்ட மனு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி சோ.ஜெயந்தாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- 1962 ஆம் ஆண்டு பண்டத்தரிப்பு பட்டின சபையின் நிர்வாகத்தின் கீழ் ஒரு தடவை மேற்படி வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டன. அதன் பின்னர் இன்று 2015 ஆம் ஆண்டு நிறைவடைகின்றபோதும், வீதி மோசமான நிலையில் உள்ளது. வீதி புனரமைப்பு மூலம் கடந்த 10 ஆண்டு காலத்தில் 10 இற்கும் மேற்பட்ட கடிதங்கள் மேற்படி வீதிப் புனரமைப்பு குறித்து வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். கடந்த காலங்களில் உள்ளூராட்சிச் சபை தொழில் நுட்ப அலுவலர்கள் மேற்படி வீதியின், நீள அகலத்தைக் குறித்து வரைபடம் மதிப்பீடு தயாரித்து நான்கு வருடங்கள் முடிவடைகின்றன. தற்போது இரவு வேளைகளில் அந்த வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்குக் கற்கள் வெளிக்கிளம்பியுள்ளன. மழை காலங்களில் போக்கு வரத்து முற்றாகச் செய்யமுடியாத அவல நிலையேற்படுகின்றது. எனவே வலி. தென்மேற்கில் பிரான்பற்று பின்தங்கிய பிரதேசம் என கைவிடப்படாது, முல்லையடி வீதியையும், அதனோடு இணைந்த யாவத்தை வீதியையும் மீள்புனரமைப்புச் செய்து, அந்தப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்திட வழியமைக்குமாறு கோரி- இந்தக் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகள் யாழ்.மாவட்ட அரச அதிபர், வலி.தென்மேற்கு பிரதேச செயலாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிராம அதிகாரி மற்றும் பண்டத்தரிப்பு உப அலுவலக பொறுப்பதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இதன் இணைப்பாளர் பொ.பரமசாமி தெரிவித்துள்ளார். (ஜ-50)

## மணிவிழாக் குழு தெரிவு

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் தற்போதய தீவக வலயக் கல்விப் பணிப்பாளருமான இ.குணநாதனின் அறுபதாவது வருடத்தை முன்னிட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் மணிவிழா நடைபெறவுள்ளது. இந்தக்குழுவின் தலைவராகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் இணை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளையும், உப தலைவராக அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் கு.இரவிச்சந்திரனும், இணைச் செயலாளர்களாக நீர்வேலி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் சி.தர்மரட்னம், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உபஅதிபர் ச.லலீசன் மற்றும் பொருளாளராக கிராம அலுவலர் சு.சண்முகவடிவேலும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஜ-ரி5)

## விஷப்பாம்பினால் கடியுண்ட முதியவர் வைத்தியசாலையில்

சாவகச்சேரி,ஒக்.26

டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்க வளவு துப்புரவுப் பணியில் ஈடுபட்ட முதியவர் விஷப் பாம்பினால் கடியுண்டார். இந்தச் சம்பவம் கடந்த 23 ஆம் திகதி கொடிகாமம் கண்டி வீதியில் இடம் பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த நடராசா நவரத்தினராஜா (வயது-63) என்பவரே பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை - மழை காலம் ஆரம்பித்த பின்னர் வளவு துப்புரவு செய்தல் மற்றும் வயல் தோட்ட வேலைகள் ஆகியவற்றில் ஈடுபட்ட பத்துக்கும் மேற்பட்டோர் பாம்புகளினால் கடியுண்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஜ-9)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்கத் தலைவரும், யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய ஆசிரியருமான

திருமதி கமலேஸ்வரி ஞானச்சந்திரன்

(B.A.PGDEME, MATHS TR, அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்கள் கடந்த 06.10.2015இல் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

குகன் குமுதினி
சிவபாதம் சித்திராதேவி } குடும்பத்தினர்



பாராட்டி வாழ்த்துகின்றோம்

சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்கத் தலைவரும், யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய ஆசிரியருமான

திருமதி கமலேஸ்வரி ஞானச்சந்திரன்

(B.A.PGDEME, MATHS TR, அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்கள் கடந்த 06.10.2015இல் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நல்லாசிரியர்களுக்கான "பிரதீபா பிரபா" விருதினைப் பெற்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



நித்திலா மகளிர் சங்கம்,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன்



மதியழகன் கிருசிகன்

அவர்கள் 2015 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தை அடைந்து சித்தியடைந்தமைக்காக பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-

சிவசம்பு அப்பப்பா, புனிதவதி அப்பம்மா, குகதாஸ் மாமா, சியாமளா அத்தையும் பிள்ளைகளும், மாறன் மாமா, மஞ்சு அத்தையும் பிள்ளைகளும், அன்பழகன் சித்தப்பா, தவச்செல்வி சித்தியும் பிள்ளைகளும்.

(64167)(11,15,17)



மணிவிழா நாயகியின் சேவை நலன் பாராட்டு



திருமதி ஜெயவதி வரதராசா

(உப அதிபர் SLTS -I)

ஆரம்பக்கல்வி - யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
உயர் கல்வி - யா/இராமநாதன் கல்லூரி

சேவை விபரம்

யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம் - 14.09.1979 - 01.02.1984
யா/ கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 02.02.1984 - 31.12.1985
வ/நெளுக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை - 02.02.1986 - 30.04.1986
கிளி/முகமாலை றோ.க.த. பாடசாலை - 01.05.1986 - 14.06.1992
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - 15.06.1992 - தற்போது வரை..

எமது பாடசாலையில் ஆசிரியராக, தர இணைப்பாளராக, உப அதிபராக பணியாற்றி 27.10.2015 இல் ஓய்வு பெறுகின்றார்

ஜெகத்தினில் ஜொலித்திடும் நல்லாசிரியராக நற்பணி புரிந்தீர்
உயர்ந்த சேவைதனை உவப்புடனே உவந்தளித்தீர்
வற்றாத நீரூற்றாய் அறிவினை வாரி வழங்கினீர்
திகட்டும் இன்முகத்தோடு இனிய மொழி பேசிடுவீர்
வளமான மாணவசமூகத்திற்கு வளமூட்டிய உத்தமியே
ரத்தினமாய் கல்விப்பணியினை கண்ணியமாய் ஆற்றிட்டீர்
தங்கமகளாய் அகவையது அறுபதினில் மிளிர்கின்றீர்
ராகங்களின் இனிமை போல் காலமெல்லாம் வாழ்க
சாதனை விருட்சமாய் புகழ் பெற்று நலமோடு வாழ்க.

என அன்போடு உம்மை
அழகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலைஅபிவிருத்திக்குழு, பழைய மாணவர்சங்கம்

(c 19606)(14,15)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும்

திரு திருமதி முரளிதாஸ் அபிராமி தம்பதிகளின் மகனுமாகிய

செல்வன் முரளிதாஸ் சஞ்சயன்

2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகள் பெற்று மாவட்ட மட்டத்தில்ஒன்பதாம் நிலையில் சித்தியடைந்தமைக்கு மனதாரப் பாராட்டுவதுடன் இவர் மென்மேலும் கல்வியில் பல சாதனைகள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தும்

கச்சாய்வீதி,
சாவகச்சேரி.

அப்பப்பா, பெரியப்பா குடும்பம்
அத்தைமார் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

முத்துஐயன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை சங்கத் தலைவர் சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-500)

# பட்ஜெட் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் குறித்து அறியத் தருக

## அறிக்கை கோருகிறார் ரணில்

கொழும்பு,ஒக்.26

நிவாரணங்களை வழங்குவதற் கான ஐக்கிய தேசிய முன்னணி நல்லாட்சி அரசின் கன்னி வரவு - செலவுத் திட்டத்தின் மூலமாக மக்களுக்கு வழங் கப்படவுள்ள நிவாரணங்கள் சம்பந்த மான முழுமையான விவர அறிக்கை யொன்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினால் கோரப்பட்டுள்ளது. நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க விடமிருந்தே இந்த விவர அறிக் கையை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கோரியுள்ளார். ஐக்கிய தேசிய முன்னணித் தேசிய அரசின் கன்னி வரவு - செலவுத் திட்டத்தில் மத்தியதர மற்றும் கீழ்மட்டத் தரத்திலுள்ள மக்களுக்கு அதிகபட்ச நிவாரணங் களை வழங்கக்கூடியவிதம் சம் பந்தப்பட்ட விடயங்கள், விவரங் களைச் சேகரிக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கு முன்னர் நிதியமைச்சுக்கு பணிப் புரை விடுத்திருந்தார். பிரதமரின் பணிப்புரைக்கு அமைவாக மக் களுக்கு வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நிவாரணங் கள் சம்பந்தப்பட்ட முழுமையான விவரங்கள் கொண்ட ஆவண மொன்று தற்போது நிதியமைச்சி னால் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நிதியமைச்சினால் பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் மக்களுக்கான நிவாரணங்கள் உள்ளடங்கியுள்ள ஆவணத்துக்கு மேலதிகமாக மக்களுக்கான நிவாரணங்கள் குறித்து தெரியப்படுத்துவதற்கு இந்தவார இறுதியில் வரவு- செல



வுத் திட்டத்தைத் தயாரிக்கும் நிதி யமைச்சின் அதிகாரிகள் அலரி மாளிகைக்கு அழைக்கப்படவுள் ளனர். (ஐ-22)

## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை கனகசபை



காரைநகர் இராசாந் தோட் டத்தைப் பிறப்பிடமாகவும் காரைநகர் விளானையை வசிப் பிடமாகவும் கொண்ட காசிப் பிள்ளை கனகசபை 23.10.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர் களான காசிப்பிள்ளை - அன்ன பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம்- பூரணம் தம்பதியரின் அன்பு மரு மகனும், சசிகலா (லண் டன்), லோகேஸ்வரி ஆகியோரது பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, பத்மநாதன், காலஞ்சென்ற சரஸ்வதி மற் றும் நவரத்தினம் ஆகியோரது அன்புச் சகோதரரும், சற்குணராசா வின் (லண்டன்), அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் சரஸ்வதி, சுப்பிரமணியம், காலஞ்சென்ற தவபாலன் மற்றும் சிவபாலன் ஆகியோரது அன்பு மைத்துனரும், கபிஷா, யசிந்தா, றஜிந் தன், சஜிந்தன் ஆகியோரது அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (27.10.2015) செவ் வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை நடை பெறுகின்றது.

தகவல்:
விளானை,களபூமி,காரைநகர். T.P : 077 433 6920 மனைவி, பிள்ளைகள்.
(65568)(11,15,17)

### திருமதி செல்வநாயகி (அம்மாப்பிள்ளை) இராசரத்தினம் (தம்பாபிள்ளை)



வீமன்காமம் வடக்கு தெல் லிப்பழையைச் சேர்ந்த திரு மதி செல்வநாயகி (அம்மாப் பிள்ளை) இராசரத்தினம் 22.10. 2015 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் (தம்பா பிள்ளை- (C.T.B) யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஜீவாநந்தி மற்றும் சிவா நந்தி (பிரான்ஸ்) ஜீவானந்தன் (கனடா), சிவாநந்தன் (பிரான்ஸ்) ,குகன் (அமரர்), ஆகியோரின் அன்புத் தாயா ரும் உதயகுமார், பிரபாகரன், நிர்மலா, வைதேகி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அரன், சாவ்யா, சாயகி, சாருஜன் , அனனியா (அமரர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற திருமதி செல்லம்மா சின்னத்துரை (சுதுமலை மேற்கு மானிப்பாய்) யின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் வானுலகு வழியனுப்பும் வைபவம் 01.11.2015 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
திருமதி வி. சிவாநந்தி (பிரான்ஸ்) 033 751 226 368
தி.ஜீவானந்தன் (கனடா) 001 416 548 8014
தி. சிவாநந்தன் (பிரான்ஸ்) 003 360 597 4125

தகவல்:
க.கலாசலிங்கம்
68, மணிக்கூட்டுவீதி
யாழ்ப்பாணம்
(64498)(12,15,17)

### 08 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா
(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர் J.P)
(திதி: 26.10.2015)

ஆண்டுகள் எட்டு நகர்ந்து
மறைந்திடினும்
ஆறுமோ எங்கள் துயர்
தினம் தினம் ஏங்குகின்றோம்
அன்புத் தெய்வமே!
விண்ணுலகம்
சென்றுவிடவில்லை- நீங்கள்
எம் மனங்களில் மறையாது
என்றும் வாழ்கின்றீர்கள்.

தோற்றம்: 14.11.1924
மறைவு: 25.10.2007

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.
(64247)(11,15)

# ஆலய நிர்வாகிகளுடன் இன்று கலந்துரையாடல்

இந்து ஆலய நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து ஏற்பாடு செய் யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், இந்து சமய ஆலயங்களின் பரிபாலனத்துக்கான கைநூல் மற்றும் ஆலயங்கள் தோறும் அறநெறிப் பாடசாலை உருவாக்கல், மேம் படுத்தல் போன்ற விடயங்கள் பேசப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (ஐ-ரி6)

## சங்காபிஷேகம்

வரணி, ஒக்.26

வரணி மாசேரி விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலயச் சங்காபிஷே கம் இன்று திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது. கொம்மாந்தறை ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ இ. பால சுப்பிரமணியக் குருக்கள் தலைமை யில் கிரியைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-122)

## துயர் பகிர்கின்றோம்

### கார்த்திகேசு மகாதேவன்



யாழ். ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்கானை - சிலாபம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் லண்டனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மகாதேவன் ஆகிய எமது பாசமான மாமாவின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேப்பங்குளம்,
வவுனியா.

மருமகன் விக்கி குடும்பத்தினர்
(விக்கி நயனந்தினி,பிள்ளைகள்)
075 077 3013

## ஐக்கிய நாடுகள் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி,ஒக்.26

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஐக்கிய நாடுகள் தின நிகழ்வுகள் இன்று திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.கழகத் தலைவர் லயன் பு.டினேஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஐ.நா.தினம் தொடர்பான சிறப்புச் சொற்பொழிவை ஓய்வுநிலை பிரதிக் கல் விப்பணிப்பாளர் பி.முத்துலிங்கம் ஆற்ற வுள்ளார். ஐ.நா.தினம் தொடர்பாக தென் மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களிடையே நடத்தப்பட்ட சித்திரம், பேச்சு, பொது அறிவு ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படுமென கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் நாகதம்பி



செம்பியன்பற்று தெற்கைப் பிறப் பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி புரம் நாகதம்பி நேற்று (2015.10.25) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லி புரம் - செல்லாச்சி தம்பதியின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை - தெய் வானைப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் துரைராஜலிங்கம் (அமெ ரிக்கா), வசந்தகுமாரி(ஜேர்மனி), விஜயகுமாரி (ஆசிரியை - யா/கொக் குவில் ஸ்ரீ இராமகிருஸ்ணா வித்தியா சாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசலட்சுமி (அமெரிக்கா), குகனேஸ்வரன்(ஜேர்மனி), சிவபாலன்(பொன்னரசி நகையகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருள்ராஜ், காலஞ் சென்ற மதனராஜ், பகீரதி, காயத்திரி, கார்த்திகா, கார்மிளா, சபார்த்தினி, சாரங்கன், சாருயன் ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வின், ஆகாஷ், துவாரகா, பாரதி, குணாளன், சரண், ஆர்த்திகா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.10.26) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமகிருஸ்ணா ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்: ஐ.சிவபாலன் (மருமகன்)
(பொன்னரசி நகையகம்)
077 706 6427
(65567)(14,15)

## மாதாந்த முழுநிலா கருத்தாடல் நிகழ்வு

வவுனியா,ஒக்.26

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடத்தும் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாநிதி தமிழ் மணி அகளங்கன் தலைமையில் நடை பெறும் நிகழ்வில் சிறப்பு சொற் பொழிவும் இடம்பெறும். (ஐ)

## தாபரிப்பு பெற்றோருக்கு உதவி வழங்கும் நிகழ்வு

சாவகச்சேரி,ஒக்.26

யாழ்.மாவட்ட வாழ்வின் எழுச்சி பிரிவினர் பெற்றோரை இழந்துள்ள பாடசாலை மாணவர்களைப் பராமரிக் கும் தாபரிப்பு பெற்றோருக்கு உதவி வழங்கும் நிகழ்வு இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ள யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுக ளிலிருந்தும் தாபரிப்பு பெற்றோர் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓர் அலைபேசியில் தனித்தனியாக வாட்ஸ்–அப்

ஓர் அலைபேசியில் இரண்டு இலக்கங்களுக்குத் தனித்தனியாக வாட்ஸ்– அப் பயன்படுத்தும் விதமாக புதிய செயலி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. திசா (Disa) என்ற இந்த செயலியின் மூலம், உங்கள் அலைபேசியில் உள்ள இரண்டு இலக்கங்களுக்கும், தனித் தனியாக வாட்ஸ்– அப் பயன்படுத்திக் கொள்ள லாம். இதற்கான வழிமுறைகள் மிக எளியவை. திசா செயலியை https://play.google.com/store/apps/details?id=com.disa&hl=en என்ற இணைப்பின் மூலம் உங்களது அலைபேசியில் பதிவிறக்கம் செய்து இன்ஸ்ரோல் செய்து கொள்ளுங்கள்.

அதில் '+' என்ற தெரிவை அழுத்தி, உங்களது மற்றொரு இலக்கத்தை (அதாவது வாட்ஸ்– அப் பயன்படுத்தாத எண்) '+91' என குறியீட்டோடு கொடுக்கவும் (உதாரணம்: அலைபேசி இலக்கம்) அடுத்து Verify செய்வதற்கான கட்டம் வரும். இதைத் தாண்டினால் ஒரே நேரத்தில் இரண்டு எண்களுக்கு தனித்தனியாக வாட்ஸ்–அப் பயன்படுத்த உங்கள் அலைபேசி தயாராகிவிடும். ஆனால் தற்போது திசா செயலியில் உள்ள வாட்ஸ்–அப் மூலம் செய்திகளை அனுப்ப மட்டுமே முடியும். வாட்ஸ்–அப் அழைப்புகள் (WhatsApp call) செய்ய முடியாது. அதே போல அன்ரோயிட தொடுபேசிகளில் மட்டுமே தற்போது இந்தச் செயலி வேலை செய்யும்.


# சனிக் கிரகத்தின் நிலாவில் கடல்

சனிக் கிரகத்தை சுற்றி வரும் நிலாவில் கடல் இருந்தது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க விண்வெளி மையமான நாசா, சனிக் கிரகத்தை ஆய்வு செய்யக் கேசினி என்ற விண்கலத்தை அனுப்பியிருந்தது. தனது பயணத்தில் சனியைச் சுற்றி வரும் நிலாக்களில் ஒன்றான என்சிலடுஸை படம் எடுத்து அனுப்பியுள்ளது. அந்தப் படத்தில் காணப்பட்ட வரிகளும், பள்ளங்களும், பூமியைச் சுற்றி வரும் நிலாவில் இருப்பதைப் போன்று உள்ளது. மேலும் அந்தப் படத்தை உற்று நோக்கியதில் ஏற்கனவே கடல் இருந்தது தெரியவந்துள்ளதாக நாசா அறிவித்துள்ளது. இதுகுறித்து கார்னெல் பல்கலைக்கழகத்தில் உள்ள கேசினி திட்டத்தில் பணியாற்றும் பால் ஹெல்பென்ஸ்டீய்ன் கூறுகையில், கடல் இருப்பதால் ஏற்கனவே அங்கு உயிர்கள் வாழ்ந்திருக்கலாம், எனினும் உடனடியாக எந்த முடிவுக்கும் வரமுடியாது.அடுத்த இரண்டு வாரங்களில் கேசினி விண்கலம், என்சிலடுசுக்கு அருகே செல்லும்போது இன் னும் அதிகளவான படங்களை அனுப்பிவைக்கும். இதிலிருந்து மேலும் பல ஆச்சரியங்கள் வெளிப்படலாம் எனத் தெரிவித்துள்ளார்.

# கனிணியின் பாதுகாப்பு அரண்

பயர்வால் என்பது ஒரு நமது கணினிக்கும், இணையத்துக்கும் இடையே அரணாக உள்ள பகுதியாகும். பயர்வால் பொதுவாக மென்பொருளாகவோ அல்லது வன்பொருளாவோ அல்லது இரண்டும் சேர்ந்ததாகவோ இருக்கும். அதாவது நமது கணினியை தாக்கவரும் ஒரு திட்டத்தைத் தடுக்கும் ஒரு வன்பொருள் அல்லது மென்பொருள் திட்டம் ஆகும். பயர்வால், நமது கணினியில் நுழைந்து, தனிநபர் தகவல்களைத் திருடும் ஹேக்கர்களிடமிருந்து நமது கணினியைப் பாதுகாக்கிறது. அதுமட்டுமின்றி இப்போது கணினிகளில் பயன்படுத்தும் அனைத்து அப்ரேட்டிங் சிஸ்ரங்களிலும் பயர்வால் ஒன்றைக் கொண்டுள்ளன.

விண்டாஸ் அப்ரேட்டிங் சிஸ்ரங்களிலும் மைக்ரோசொப்ட் நிறுவனம் பயர்வால் ஒன்றைத் தந்து, அதனை அவ்வப்போது தானாகவே புதுப்பித்து வருகிறது. ஆனாலும் விண்டோஸ் இயங்கும் கண்னிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு தேவைப்படுகிறது. ஏனென்றால், உலகெங்கும் விண்டோஸ் இயங்கும் கணினிகள் தான் ஹேக்கர்களின் இலக்குகளாக உள்ளன. 90 வீதத்துக்கும் மேலான கணனிகளில், விண்டோஸ் இயங்குவதே காரணம். நமக்குத் தெரியாமல், நாம் உணராமல், நமது கணினி இயங்குகையில், உள்ளே நுழைந்திடும் ஹேக்கர்களின் முயற்சியை முறியடிப்பதும், தடுப்பதுமே பயர்வால் ஒன்றின் செயற்பாடு. இது கணினி உள்ளேயே இருந்து கொண்டு இந்த பணியில் ஈடுபடுவதால், இதனை உள்நிலைப் பாதுகாப்பு (என அழைக்கின்றனர். அத்துடன், கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்களை மற்ற கணினிகளுக்கு செல்லவிடாமல் தடுக்கும் பணியையும் மேற்கொள்கின்றன.




# எம்.ஐ கிறீன் மிளகாய் உற்பத்தியில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

## உற்பத்திகளுக்கான விதைகள் தருவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

குடாநாட்டு விவசாயிகள் எம்.ஐ. கிறீன் இன மிளகாய் இனத்தைப் பயிரிடுவதிலேயே அதிக ஆர்வம் காட்டியுள்ளனர்.

இதற்காக யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளின் வசதி கருதி ஒரு தொகுதி எம்.ஐ. கிறீன் இன மிளகாய் விதைகளைத் தருவித்துள்ளது. தற்போது இந்த மிளகாய் விதைகள் சங்கத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. எம்.ஐ. கிறீன் இன மிளகாய்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் சங்கத்துடன் தொடர்புகொண்டு விதைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்துள்ளார். குடாநாட்டு விவசாயிகள் இந்த எம்.ஐ.கிறீன் இன மிளகாய் இனத்தைப் பயிரிடுவதிலேயே அதிக ஆர்வம் காட்டியுள்ளதால், இந்த மிளகாய் இன விதைகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்தே சங்கம் ஒரு தொகுதி விதைகளைத் தருவித்தும் உள்ளது.ஏற்கனவே சங்கம் இந்த எம்.ஐ.கிறீன் மிளகாய் இன விதைகளைக் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு போதியளவு விநியோகித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ–17)

# தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆடுகளின் களவு அதிகரிப்பு

சாவகச்சேரி,ஒக்.26

மேய்ச்சலுக்காகக் கட்டப்படும் ஆடுகள் பட்டப்பகலில் களவு போகும் சம்பவங்கள் தென்மராட்சிப் பிரதேசத்தில் தினமும் இடம்பெற்றுவருவதாகப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். காலபோக நெற்செய்கை மற்றும் தோட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அந்தந்தப் பிரிவு கமக்கார அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பொதுமக்கள் மேய்ச்சலுக்காக கால்நடைகளைக் கட்டி வளர்க்கின்றனர். இந்த நிலையில் ஓட்டோவில் வருவோர், ஓட்டோவை நிறுத்திக் கயிற்றை அறுத்து ஆடுகளை கடத்துகின்றனர். தனன் களப்புப் பகுதியில் வேலி அடைப்பதற்காக வெட்டிய குழைகளைத் தின்று கொண்டிருந்த ஆட்டை, ஓட்டோவில் வந்தவர்கள் கடத்திச் சென்றுள்ளனர். அதே போன்று மட்டுவில் வடக்குப் பகுதியில் வீதியோரத்தில் கட்டப்பட்டிருந்த குட்டி போட்ட ஆட்டை ஓட்டோவில்வந்தவர்கள் கடத்திச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆடுகள் திருட்டுத் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. (ஐ–9)

# துர்நாற்றத்துடன் புத்தூர் பொதுச் சந்தை

யாழ்ப்பாணம்,ஒக்.26

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட புத்தூர் பொதுச் சந்தைக்குச் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். சந்தையைச் சுற்றி வளர்ந்துள்ள பாதீனியச் செடிக்குள் இறைச்சிக் கடையின் கழிவுகளும், பழுதடைந்த கடல் உணவுப் பொருள்களும் வீசப்படுவதால் சந்தைக்குச் செல்லமுடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது. இது தொடர்பாக புத்தூரில் உள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குப் பல தடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# சாவகச்சேரி பிரதேச சபையால் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

சாவகச்சேரி,ஒக்.26

சாவகச்சேரி பிரதேச சபையினர் சபை நிதியிலிருந்து நான்கு வீதிகள் புனரமைப்பு உட்பட ஐந்து வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சபை இயங்கிய காலத்தில் இந்த வேலைகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்த போதிலும் சபை கலைக்கப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் இந்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றன. கைதடி – நாவற்குழி தெற்கு பிரதான வீதியுடன் பாடசாலை வீதியை இணைத்தல், நாவற்குழி தெற்கு கோயில் வீதி, கைதடி செம்பாடு கொற்றாவ கூடல் வீதி, கைதடி கமநல



சேவைகள் நிலைய முன் வீதி, வரணி இயற்றாலை கந்தசாமி கோயில் வீதி ஆகியவை புனரமைப்புடன் பிரதேச சபை தலைமை அலுவலக வாகனத்தரிப் பிடத்துக்கான நிர்மாண வேலைகளும் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ–9)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணி பொது நூலகத்தால் போட்டிகள்

வரணி,ஒக்.26

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகளை வரணி பொது நூலகம் அண்மையில் நடத்தியுள்ளது. சிறார்களுக்கான கதை கூறல் நிகழ்வு, நடமாடும் நூலகக் கண்காட்சி சேவை, கருத்தரங்குகள் மக்களுக்கு வாசிப்புத் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் மற்றும் நூலக வளாகம் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்தல் போன்ற நிகழ்வுகள் கடந்தசில வாரங் களாக இடம்பெற்றதாக நூலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம் பாடசாலை மாணவர்களுக்கு இன்று திங்கட்கிழமை கதை கூறல் போட்டியும், நாளை செவ்வாய்க்கிழமை கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி,பொது அறிவுப்போட்டிஆகியனவும்நாளை மறுதினம் புதன்கிழமை கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி என்பனவும் இடம்பெறவுள்ளன.

மேலும் இந்தப் பிரதேசத்தில் இயங்கும் முன்பள்ளி மாணவர்களுக்கான அபிநய நடனம், கதை கூறல் நிகழ்வு, பேச்சுப் போட்டி என்பன எதிர்வரும் 30 ஆம் திகதியும், வாசகர்களுக்கான பொது அறிவுப் போட்டி 31 ஆம் திக்தியும் இடம்பெறும் என நூலகர் பொ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ–122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிகுண்டு மிரட்டலால் 17 பாடசாலைகள் பூட்டு!

## கலிபோர்னியாவில் பரபரப்பு

நியூயோர்க், ஒக்.26
கலிபோர்னியாவின் பெயர்பீல்ட் நகரில் வெடிகுண்டு அச்சுறுத்தல் காரணமாக 17 பாடசாலைகள் பூட்டப்பட்டுள்ளன.
குறித்த பகுதியில் உள்ள 3 பாடசாலைகளுக்கு துப்பாக்கி மற்றும் வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நாம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். அனைத்துத் தரப்பிலும் எதனையும் எதிர்கொள்ளத் தயராக உள்ளோம் என்று பெயர்பீல்ட் நகர பொலிஸ் திணைக்கள தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்றில் ஆணொருவர் தனது காதலியையும் பிணைக் கைதி ஒருவரையும் கொலை செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளார். அதையடுத்து பாடசாலைகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ற)

# 14 யானைகள் விஷம் வைத்து தந்தங்களுக்காகக் கொலை

## சிம்பாப்வேயில் கொடூரம்



லண்டன், ஒக்.26
சிம்பாப்வேயின் வன விலங்குக் காப்பகங்களில் 14 யானைகள் உயிரிழந்துள்ளன. அவை விஷம் வைத்துக் கொல்லப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
ஹுவாங் தேசிய பூங்காவில் 11 யானைகளும், மடுசடோனா தேசிய பூங்காவில் 3 யானைகளும் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. அவை ஒரே மாதிரியாக சயனைட் வைத்துக் கொல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இறந்த யானைகளில் 4 யானைகளில் தந்தங்கள் இருக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. தந்தங்களுக்காகவே யானைகள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.
2013ஆம் ஆண்டு 300 யானைகள் வரையில் சயனைட் விஷம் வைத்துக் கொல்லப்பட்டிருந்தன. தற்போது ஆபிரிக்காவில் தற்போது 4 லட்சம் யானைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.
புள்ளிவிவரங்களின் அடிப்படையில் 15 நிமிடங்களுக்கு ஒரு யானை கொல்லப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)





மெக்ஸிக்கோவின் பசுபிக் கடலோரத்தை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பட்ரிசியா
அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுறாவளியால் கெலிமா மா
கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளியால் கடற்கரைப் பகுதிகளில் இருந்தவி
ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியை பார்வையிட்டார் பிரேஸில் ஜனாதிபதி



லண்டன், ஒக்.26
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தென் பிரேஸில் பகுதிகளை அந்த நாட்டு ஜனாதிபதி டில்மா ரூசெவ் நேற்றுமுன்தினம் ஹெலிக்கொப்டரில் சென்று பார்வையிட்டுள்ளார்.
இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அவர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தந்த மாநில அரசுகளுடன் இணைந்து பணியாற்றவுள்ளதாக உறுதியளித்துள்ளார்.
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பொருள்களை வழங்கும் நடவடிக்கைகளை மாநில அரசுகளோடு மத்திய அரசும் இணைந்து முன்னெடுத்து வருவதாக டில்மா ரூசெவ் தெரிவித்தார்.
தென் பிரேஸிலின் சில பகுதிகளை ஹெலிக்கொப்டர் மூலம் அவர் பார்வையிட்டிருந்தபோதும், சீரற்ற காலநிலை காரணமாக சன்டா கத்தரீனா மாநிலத்துக்குச் செல்லமுடியாமல் போனது.
கடந்த வெள்ளிக்கிழமை தென் பிரேஸிலின் ரியோ கிராண்ட் மாநிலத்தின் 66 மாநகரங்களில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. (ற)


# ஆப்கனுடனான
# தலிபானியர்க

## பாகிஸ்தான் பிரதமர்

வொஷிங்டன், ஒக்.26
ஆப்கனுடனான அமைதிப் பேச்சுக்காக தலிபானியர்களை எங்களால் கொலை செய்ய முடியாது என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர், வொஷிங்டனில் உள்ள அமெரிக்க சமாதான கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
பயங்கரவாதத்தை முற்றிலுமாக அகற்ற வேண்டும் என அமெரிக்க கேட்டுக் கொண்டபோதிலும், பாகிஸ்தான் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பது-பாகிஸ்தான் மீது

# இருபது ஆண்டுகளின் பின்னர் கரடி வேட்டைக்கு அனுமதி

நியூயோர்க், ஒக்.26
புளோரிடாவின் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் கரடிகளை வேட்டையாடுவதற்கு கடந்த சனிக்கிழமை முதல் அனுமதி வழங்கியுள்ளது. கடந்த 20 வருடகாலங்களில் கரடிகளை வேட்டையாடுவதற்கு புளோரிடா அரசு அனுமதியளித்துள்ள முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.
இதன்படி நேற்று கரடிகளை வேட்டையாடுவதற்கான 3 ஆயிரத்து 200 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, வேட்டைக்காரர் ஒருவர் ஒரு கரடியை மட்டுமே வேட்டையாட முடியும் எனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.
விலங்குகள் வேட்டையாடப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் சுமார் 320 கரடிகள் வேட்டையாடப்பட்டதும், தற்போது வழங்கியுள்ள அனுமதியை விரைவில் இரத்துச் செய்யும் என கூறப்பட்டது. ஆயினும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட சனிக்கிழமை மாத்திரம் சுமார் 400 கரடிகள் வேட்டையாடப்பட்டுள்ளன என்று ஆர்லாண்டோ சென்டினல் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஆயினும் வேட்டையாடப்பட்ட கரடிகளின் எண்ணிக்கையை புளோரிடாவின் மீன்பிடி மற்றும் வனவிலங்கு பாதுகாப்புச் ஆணையகம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. (ற)



# ஆங்கிலத்தில்
# நவாஸுக்கு எ

இஸ்லாமாபாத், ஒக்.26
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெ
நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொ
சபையில், உரையாற்றிய நவாஸ்
நிகழ்த்தினார் என்றும் இது நீதிம
சயிட் கானி என்பவர் வழக்கு தொ
அவர் தனது மனுவில், உருது
மொழியாக தாமதமின்றி
செப்ரெம்பர் 8ஆம் திகதி
உத்தரவிட்டுள்ளது. ஆனால்
நவாஸ் ஷெரீப், ஆங்கிலத்தில் உ
குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அ
கீழ் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீது
என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள
அதேவேளை, இந்த விவகாரத்தி
நவாஸ் ஷெரீப் சீர்குலைத்துவிட்டா
வழக்கு தொடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ரிசியா சூறாவளி கடந்தது. அதன்போது சிறு சேதங்கள் ஏற்பட்டன என்று ...மா மாநில நெடுஞ்சாலை பெரிதும் சேதமடைந்துள்ளது. மணிக்கு 165 ...ந்தவிடுதிகள் மற்றும் கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. உயிழப்புக்கள் (ற)

# மாலைதீவு துணை ஜனாதிபதி சதிக் குற்றச்சாட்டில் கைது!

லண்டன், ஒக்.26
மாலைதீவு ஜனாதிபதியை கொலை செய்யச் சதித் திட்டம் தீட்டிய குற்றச்சாட்டின் கீழ் அந்த நாட்டின் துணை ஜனாதிபதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட துணை ஜனாதிபதி அஹமட் அதீப், தேசத் துரோகச் செயலில் ஈடுபட்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியாவுக்கு ஹஜ் யாத்திரை சென்ற மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் அப்துல் கயூம் மற்றும் அவரது துணைவியார் மாலைதீவுக்கு திரும்பும் வழியில் அவர்கள் பயணித்து வந்த கப்பல் வெடிப்புக்குள்ளாகியது.

குறித்த சம்பவத்தை அடுத்தே தற்போது துணை ஜனாதிபதி கைது செய்யப்பட்டுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் ஏற்கனவே மாலைதீவு பாதுகாப்பு அமைச்சரும் கைது செய்யப்பட்டிருந்தார். (ற)



# ...ான அமைதிப் பேச்சுக்காக ...ர்களை கொல்ல முடியாது

## ...ர் தெரிவிப்பு

[illegible] பலருக்கும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

அத்துடன் ஷெரீப்பின் உரைக்கு அங்கு பெரும் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்போது அங்கிருந்த ஒருவர் பாகிஸ்தானியர்களை விடுதலை செய்யுங்கள். ஷெரீப், ஒசாமா பின்லேடனின் நண்பன் என ஷெரீப்புக்கு எதிராக முழக்க மிட்டுள்ளார்.

தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கையில் பாகிஸ்தானுக்கு உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்கா



உறுதி அளித்திருந்தது. இருந்தும் ஒருபுறம் அமைதிப் பேச்சுக்குத் தயார் எனவும், மறுபுறம் தலிபான்களை பாதுகாக்கும் வகையில் ஷெரீப் பேசி வருகின்றார் என்று அமெரிக்க நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# கியூபா மற்றும் தென்னாபிரிக்க தலைவர்கள் சந்தித்துப் பேச்சு



லண்டன், ஒக்.26
நாடுகளிடையே இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் கியூபா ஜனாதிபதி ராவுல் கெஸ்ரோ, தென்னாபிரிக்க துணை ஜனாதிபதி சிரில் ரம போஷாவை சந்தித்துக் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடினார்.

உத்தியோகப்பூர்வ பயணமாக கியூபா சென்றுள்ள ரமபோஷா, பிரிட்டோரியா மற்றும் ஹவானா ஆகிய நாடுகள் குறித்த தமது பொதுவான கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேம் பகுதியில் இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையே தொடர்ந்து வரும் மதப் போராட்டம் தீவிரமடைந்து வருகின்ற நிலையிலேயே இந்த பயணம் இடம் பெற்றுள்ளது. (ற)

# ஸ்கொட்லாந்தில் பனிப் பொழிவு ஆரம்பம்

லண்டன் ஒக்.26
வட ஸ்கொட்லாந்தின் சில பகுதிகளில் பனிப்பொழிவுடனான காலநிலை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தற்பொழுது, அங்கு குளிர் காலநிலை அதிகரித்துள்ளதுடன், பல இடங்களில் [illegible] இலைகளும் உதிர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை வேளையில் அதிக இடங்களில், பனி [illegible] நிலம் வெள்ளை நிறத்தில் காட்சியளித்ததாகக் கூறப்படுகின்றது. அதேவேளை, மாலை மற்றும் இரவு நேரங்களில் [illegible] பனி மேலும் [illegible] நம்புவதா[illegible] [illegible]லை அவதா[illegible] [illegible]யதி வெளி[illegible] [illegible]ரும் நாள்க[illegible] [illegible]நிலை தொட[illegible] [illegible] என்றும் [illegible]படுகின்றது.

# ...தில் பேசியதால் ...த எதிராக மனு

...ஸ் ஷெரீப்புக்கு எதிராக அந்த நாட்டில் ...த தொடரப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் ...நவாஸ் ஷெரீப், ஆங்கிலத்தில் உரை ...ு நீதிமன்ற அவமதிப்பு என்றும் கூறி ...கு தொடர்ந்துள்ளார்.

...உருது மொழியை அரசு அலுவல் ...றி பயன்படுத்த வேண்டும் என்று ...தி பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் ...ல். அதை மீறும் வகையில், ஐ.நாவில் ...த்தில் உரை நிகழ்த்தியுள்ளார் என்று ...வே, அரசியல் சாசனப் பிரிவு 204இன் ...ப் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் ...பட்டுள்ளது.

...காரத்தில் உயர் நீதிமன்ற மாண்பை ...துவிட்டார் என்று கூறி வேறொருவரும் (ற)

# ஊர்வலத்தில் குண்டு வெடிப்பு: 22 பேர் சாவு: பலர் படுகாயம்

## பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத், ஒக்.26
தெற்கு பாகிஸ்தானில் நடைபெற்ற முஹர்ரம் கொண்டாட்ட ஊர்வலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் சுமார் 22 பேர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜகோபாபாத் நகரில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களுள் ஐந்து குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலில், காயமடைந்த 40 பேர் ஜக்கோபாபாத் மா[illegible] வைத்தியசாலையில் [illegible]காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

ஷியா முஸ்லிம்களின் புனித நிகழ்வான அஷுரா பண்டிகையின்போது மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். அந்தவகையில், கடந்த வியாழக்கிழமை, பலோசிஸ்டான் மாகாணத்தில் மசூதி ஒன்றை இலக்கு வைத்து இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

[illegible] இனத்தவரான ஷியா முஸ்லிம்கள் மீது பெரும்பான்மை இனத்தவர்களான சுனி பிரிவினர் நடத்தி வரும் தாக்குதல்களில் கடந்த ஆண்டுகளில் ஆயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமுவேல் இரத்தினஜீவன் ஹே. ஹூல்
# மிச்சிகன் மாநில பல்கலைக்கழகம்
# ஆங்கிலத்தை மீட்டுக்கொள்வோம்



ஆங்கிலத்தைக்கற்கவேண்டியகாரணங்கள் பல. ஐம்பத்தாறு நாடுகளில் அதே அரசமொழியும் உயர் கல்வி மொழியும் ஆகும். இருநூறு கோடி மக்கள் ஆங்கிலத்தை ஒழுங்காக உபயோகிக்கின்றனர். வர்த்தகத்தில் பிரதான மொழி ஆங்கிலமே. வெளி உலகில் தொழில் புரிவதற்கும் அது அத்தியாவசியம். ஆங்கிலம் தெரிந்தவர்கள் அதிகம் உழைக்கின்றார்கள். விஞ்ஞானம் இயங்கும் பாசை ஆங்கிலமே. பல திரைப்படங்கள், புத்தகங்கள், இசைநாடாக்கள் ஆங்கிலத்திலேயே உள்ளன. இணையத்தளங்களில் 50 வீதம் ஆங்கிலத்தில். ஆங்கில அறிவு எமது இனம், மொழிக்கு அப்பால் உத்தியோக சந்தர்ப்பங்களை உண்டாக்கும். ஆங்கிலத் தரத்தின் படி நாடுகளை அட்டவணைப்படுத்தி உள்ளார்கள். மிக உயர்ந்த திறமை, உயர்ந்த திறமை, சராசரித்திறமை, குறைந்த திறமை, மிகக் குறைந்த திறமை என்று நாடுகள் நிரல் படுத்தப்பட்டுள்ளன. அதன்படி இலங்கையராகிய நாம் மிக குறைந்த தரத்திலுள்ளோம். இந்தியா சராசரித்திறமையில் உள்ளது. மலேசியா, சிங்கப்பூர் உயர்ந்த திறமையில் உள்ளன. ஆனால் ஒரு காலத்தில் எமது பாடசாலைகளில் பிறப்பிக்கப்பட்ட ஞானிகள் உலகத்திலேயே மிகப் பெயர் போன ஆசிரியர்களாகப் போயிருக்கின்றார்கள். உதாரணம், கணநாத் ஒபெயசேகர பிரின்ஸ்டனுக்கும்;, ஸ்டான்லிதம்பையாஹாவேடுக்கும், வலனட்டைன் டானியல் கொலம்பியாவுக்கும் பேராசிரியராகச் சென்றுள்ளனர். இது ஆங்கிலம் இல்லாமல் அடுத்த சந்ததிக்கு நடக்க சாத்தியம் குறைவு. ஆனால் நாம் திரும்பி எமது பழைய நிலையை அடைய சரியான கொள்கைகள் இருந்ததால் முடியும். அதற்குத் தடைகள் என்ன?

தவறுகள் செய்ய வெட்கப்பட்டு ஆங்கிலம் பேசாமல் இருப்பதும் அதற்கு வேண்டிய முதுகெலும்பு இல்லாமையுமே. அப்படி பேசுவதற்கு நாம் எமக்குள் ஆங்கிலம் பேசினால் எமது நண்பரே அதைத் தடுத்து நிறுத்தவர். உடனே வெட்கத்தில் நாம் பேசுவதை நிறுத்திவிடுவோம். அவர்களும் ஆங்கிலம் பழக மாட்டார்கள் எம்மையும் பழக விடமாட்டார்கள். சுதந்திரம் கிடைத்து 67 வருடங்களில் என்ன நடந்தது? இந்த வீழ்ச்சிகது ஒரு பிரதான காரணம் எமதுகலாசாரத்தில்பாசைபிழைவிடலாம் என்பதே. ஆனால் ஆங்கிலத்தில் மொழித்திறமை எங்கள் மரியாதையையும் தரத்தையும் அதிகரிக்கும். அன்னிய பாசையில் பிழை விடுவதற்கு வெட்கப்படத்தேவை இல்லை. ஆனால் உதவிஇருக்கும்போது அதைஉபயோகிக்காது பிழை பிழையாக எழுதி வெளியிடுவதற்கு ஒரு சாட்டும் இல்லை. இப்படி ஆங்கிலம் விழுந்தத்துக்கு இன்னொரு காரணம் எமது தாய்மொழி கொள்கைகள். அந்தக் கொள்கைகளுக்கு நல்ல காரணம் இருந்தாலும் அவற்றால் வந்த கேடுகள் பல. இவற்றில் தாய்மொழி கற்கை ஒரு பெரிய இடத்தை எடுக்கிறது. கு. நேசையா என்ற கல்வித்துறையை சேர்ந்தவர் தாய்ப்பாசையை படித்துக்கொண்டு மூன்று பாடங்களை என்றாலும் ஆங்கிலத்தில் கற்க வேண்டுமென்று வாதாடினார். அவருடைய ஆலோசனையை கேட்டு இருந்தால் இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டோம்.

இப்போது என்ன செய்யலாம்?

**1. திறமை வாய்ந்த ஆசிரியர்கள்:**
நாம் பெரிய பெரிய கட்டடங்களை எம் பாடசாலைகளில் கட்டுகிறோம் ஆனால் வேண்டியது திறமை மிக்க ஆசிரியர்கள். திறமையான ஆசிரியர்களை எடுக்க அவர்களது சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் எல்லா ஆசிரியர்களும் சமமாக திறமை வாய்ந்தவர்கள் இல்லை. சம்பளத்தை திறமை பார்த்து வித்தியாசமாகக் கொடுக்க வேண்டும். எமது பாடத்திட்டங்களையும் மாற்றி அமைக்க வேண்டும். வாசிப்பு, எழுத்து இரண்டையும் கூட்ட வேண்டும். ஒரு வாரத்துக்கு ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவருக்கு 16 மணித்தியாலங்கள் வகுப்பில் வேலை இருக்க வேண்டும். பட்டப்படிப்பு 4 வருடமாக இருந்தால் ஆசிரியர்களின் திறமை அதிகரிக்கும். ஆங்கிலம் படிப்பிக்கும் போது பாசைக்குப் பின்னர்; உள்ள விஞ்ஞானத்தையும் சட்டங்களையும் மேல் காட்டியவாறு படிப்பித்து மாணவருக்கு வசனங்களை பகுக்க தெரிவிக்க வேண்டும்.

**2. பாடத்தொகுப்பை மாற்ற வேண்டும்:**
அனைத்து மாணவரும் அதே தரமானவர்கள் அல்ல. கெட்டிக்காரர், கெட்டித்தனம் குறைந்தவர்கள் அதே பாடத்தைப் படிக்கும்போது கெட்டிக்காரர் நஷ்டப்படுவார்கள். ஆகவே சிங்கப்பூர், அமெரிக்கா போல் அதிகம் படிக்கக் கூடியவர்களுக்கும், அதிகமாக வேலை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களுக்கும் நாம் கூடப் படிக்கக் கொடுக்க வேண்டும். இதற்கு எமது சட்டத்தில் ஒரு தடையும் இல்லை.

**3. கூடிய ஆங்கிலத்தில் படிப்பு:**
இரண்டு, மூன்று பாடங்களையாவது ஆங்கிலத்தில் கற்று தாய்மொழியையும் ஆங்கிலத்தையும் பேணலாம்.

**4. நல்ல புத்தகங்கள்**
இவற்றை நடைமுறைப்படுத்த நல்ல ஆங்கில புத்தகங்கள் வேண்டும். ஆனால் இசுறுபாயவில் அடிக்கப்படும் ஆங்கில புத்தகங்கள் பெரிய பிழைகளை கொண்டன. இசுறுபாய ஆங்கில புத்தகத்தை மாணவரிடம் கொடுத்தால் அவர்களுக்கு தெரிந்த ஆங்கிலமும் போய்விடும். இந்த நிலையை திருத்துவதற்கு புத்தகங்கள் எழுதுவது தரமானவர்களிடமே கையளிக்கப்பட வேண்டும். அதுவும் மேற்கத்தேய நாடுகளில் போல முதல், மாதிரி–அத்தியாயங்கள் எழுதப்பட்டு அவை பாட நிபுணரால் திருப்தியாக விமர்சிக்கப்பட்ட பின்னரே ஒப்பந்தங்கள் எழுதப்பட வேண்டும்.
இது எங்களால் முடியாவிடின் இந்தியாவிலிருந்து ஆங்கிலத்தில் புத்தகங்களை வாங்க வேண்டும். இது இலங்கையில் எழுதுவதை விட மலிவாக இருக்கலாம்.

**5. மாணவருக்கு முதுகெலும்புடன் இயங்க கற்பித்தல்**
முதுகெலும்பை வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் தமது முதுகெலும்பைக் காட்டித் தாமும் நியாயமாகஇருக்கவேண்டும். அதேநேரத்தில் ஆசிரியர்கள் நேரத்துக்கு வந்து போய் தங்களதுவேலையைச்செம்மையாகச்செய்துபதில் சொல்லக் கூடியவராக இருக்க வேண்டும்.

**6. பெரியோர் முன்மாதிரியாக இருக்க வேண்டும்:**
பெரியோர் மட்டுமல்லகடவுள் கூட செய்வதை ஏன் மாணவர்கள் செய்யக்கூடாது? எப்படி நாம் மாணவர்களை வேறுவிதமாக நடக்கச் சொல்லலாம்? கெட்டவர்களை காட்டிகொடுப்பது தமிழ் சமுதாயத்துக்கு அவமானம் என்று மூடி மறைத்து ஒரு புற்றுநோய் போல் பரவ விட்டுவிட்டுள்ளோம். கெட்ட மூத்தவர்களின் பெயரைக் கூறி நாம் அவர்களை அவமானப்படுத்த வேண்டும். இதுவே மாணவருக்குச் சரியான முன்மாதிரி. இதுவே அவர்களுக்கு ஒரு முதுகெலும்பைக் கொடுக்கும். முதுகெலும்பிருந்தால் தான் அவர்கள் எமது கலாசாரத்தில் ஊண்டியும், வெளியே வந்து உலகக் கலாசாரத்தில் தங்கள் தங்கள் இடங்களை துணிச்சலுடன் எடுத்து தமிழரை மகிமைப் படுத்துவார்கள். இதுவே எம்மை நோக்கும் கலாசார சவால். நாம் தயாரா?

## சீன இயந்திர பொறியியல் நிறுவனத்தால் புலமைப்பரிசில்கள் அன்பளிப்பு

சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் தமது நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நடவடிக்கையின் ஓர் அங்கமாக யட்டகம்பிட்டிய வி:த்தியாலயத்துக்கு புலமைப்பரிசில்களை வழங்கி வைத்துள்ளது. கடந்த பல பத்து வருடங்களுக்கு முன்னர் பிரதேச ஆய்வாளரான பாஹியன் என்ற சீனத் தேரர் ஒருவர் அந்தப் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் அவரது பெயரான பாஹியன்கல என்ற பெயர் அந்த கிராமத்துக்கு வந்துள்ளது. குறித்த பகுதியில் தற்போது சீன அரசு வீட்டுத் திட்டமொன்றை மேற்கொண்டு அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்தத் தேரரது பலநினைவுச்சின்னங்கள் அந்தக்கிராமத்தில் காணப்படுவதனால் யட்டகம்பிட்டி வித்தியாலயத்துக்கு ஒரு கட்டடத்தை அமைத்து அன்பளிப்புச் செய்துள்ளதுடன் இது இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள நீண்டகால உறவை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இலங்கை சீனாவுக்கு இடையிலுள்ள தொடர்ச்சியான உறவை நினைவுகூரும் விதமாக சீன அரசின் கீழுள்ள சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் யட்டகம்பிட்டி வித்தியாலய வளாகத்துக்குள் ஞாபகப் பலகையொன்றும் அமைக்கப்பட்டு திரைநீக்கம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வுக்கு அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டதுடன். அந்தப் பாடசாலையின் அதிபர் இந்திரஜித் ஜனக்க சேனாதீர உள்ளிட்ட ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் முன்னாள் கல்விப் பணிப்பாளர் கே.டி. கருணாரத்ன பாடசாலையின் முன்னாள் ஆசிரியரான ஏ.உதம்யாவல ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர் குழுவினால் கடந்த இறுதித் தவணையின்போது சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களில் மூன்று சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் ச்சியேன் ஹாஓஜுன், எமது நிறுவனம் உலகம் முழுவதும் நன்மதிப்புப் பெற்ற ஒரு நிறுவனமாகும். எமது நிறுவனம் தற்போது சர்வதேச ரீதியாக பல நாடுகளில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. எனினும் நீண்டகால உறவைப் பேணும் நாடு என்ற வகையில் இலங்கை ஒரு முக்கிய நாடாகும். இதனால் இலங்கையின் மின்சாரம் மற்றும் நீர்வளங்கள் மேம்பாடு தொடர்பில் பல்வேறு விதங்களில் கூடுதலான பங்களிப்பை நாம் வழங்கிநாடு என்ற ரீதி ... தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யட்டகம்பிட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் அதிபர் கூறுகையில், இவ்வாறான அடிப்படை வசதிகள் குறைந்த மற்றும் குறைந்த வருமானம் பெறும் பாடசாலைகளுக்கு உதவிகளை வழங்குவது குறித்து சீன இயந்திர பொறியியல் கூட்டுத் தாபனத்துக்கு தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கு முழுவதும் உதயன் வெளிவர வேண்டும்

எங்கள் தமிழீழ தாயகத்தில் வெளிவரும் தேசிய நாளிதழ்களில் உதயன் பத்திரிகையும் ஒன்றாகும். அது தாயகம் எங்கும் வடக்கு - கிழக்கு எங்கும் எட்டு மாவட்டங்களிலும் வெளிவரவேண்டும். ஒரே நேரத்தில் எட்டு மாவட்டங்களிலும் உதயன் வெளி வந்தால் தாயகத்தின் தேசிய இதழ் என்ற மதிப்பை உதயன் பெறும். ஜனநாயக வழியில் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமைகளைப் பெறுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிக்கிறது. முதலில் வடக்கு - கிழக்கை இணைத்து ஒரே அரசாக மாற்றி விட்டு அதற்கு தமிழர் அரசு என்று பெயர் சூட்டிய பின் தமிழர் தரப்பு அதிகாரங்களைப் பெறுவதற்கான பேச்சுக்களைத் தொடங்க வேண்டும். இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின்படி இணைந்த இலங்கையில் தமிழர் அரசு அமைத்து வாழவேண்டும். அல்லது பிரிந்து சென்று தமிழர் அரசு அமைக்க வேண்டும். உதயன் பத்திரிகை இத்தகைய காய் நகர்த்தலில் முக்கிய பங்கு வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

*கு.ரகுபாலன் ,சுவிற்ஸர்லாந்து*

# பண்டத்தரிப்பு வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறையால் பாதிப்பு

பண்டத்தரிப்பு காடாப்புலம் பிரதேச வைத்தியசாலை அண்மைக் காலமாகத் துரித வளர்ச்சியடைந்து வருவது மிகச் சிறப்பானது. இந்தத் துரித வளர்ச்சிக்குத் துணைபுரிந்து வரும் மருத்துவர், தாதியர், சிற்றூழியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். இந்த வைத்தியசாலையின் வளர்ச்சியில் மறைமுகமாக விருந்து பணி செய்து வரும் பொது மக்களை நாம் மறந்து விட முடியாது. அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். அந்த வகையில் மாதகல் பிரதான வீதியிலிருந்து நோயாளர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவும், திரும்பி வரவும் அளிக்கப்படும் ஓட்டோ வாகன வசதியை வேறெங்கும் காணமுடியாது.




தற்போது வெளிநோயாளர் பிரிவில் அனுபவமிக்க தாதியர் பற்றாக்குறை நிலவி வருவதை இந்த வாசகர் கடிதம் மூலம் தெரியப்படுத்த விரும்புகிறேன். இந்தக் குறையால் நோயாளர் தமக்குரிய சிகிச்சையைப் பெற நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவலநிலை உருவாகியுள்ளது. தற்போது பணிபுரியும் வைத்தியர் பேரின்பநாயகமே தாதியர் இல்லாத சூழ்நிலையில் தாதியரின் பணிகளான தடுப்பூசி போடுதல் மற்றும் ஏற்பூசி மருந்தேற்றல் ஆகிய அரிய பணியைத் தாமே செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது. நீண்ட காலமாக நிலவி வரும் இந்தக் குறையால், குழந்தைகளும், பெண்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் மற்றும் பாடசாலை மாணவர்களும் சிகிச்சை பெறுவதில் வெகு சிரமத்தை எதிர்கொள்ளுகின்றனர். ஆகையால், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாகாண அமைச்சர் ஆகியோர் இந்தப் பிரதேச வைத்தியசாலையின் அவல நிலையைப் புரிந்துகொண்டு, தாதியர் பற்றாக் குறையை நீக்க ஆவன செய்யும் படி இந்த வாசகர் கடிதம் மூலம் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.


*வண.ஜெ.தேவஅருட்செல்வம் ,*
*மாதகல்.*

# ஆலயத்துக்குச் செல்ல தடையாக இருக்கும் வீதி

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' இது பழ மொழி. தற்போது ஆலயம் தொழுவது சாலவும் தொல்லையாகி விட்டது. நமது கிராமத்தில் சிறப்புற பல கோயில்கள் அங்கே ஆன்மிகச் சொற் பொழிவுகள், நேரம் தவறாது கிரியைகள் எனப்பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றமை வரவேற்கத்தக்கது. இவற்றில் கலந்து கொள்ளும் அடியார்கள் ஒரு சிலரே. காரணம் ஆலயம் செல்லும் பாதை குண்டும் குழியுமாக, தற்போது மழைநீரும் தேங்கி இருப்பதால் சிரமத்தை எதிர் கொள்கிறோம். மாலையானதும் இருண்ட பிரதேசமாய் காட்சி தரும் எமது கிராமத்துக்கு எப்போது ஒளி பிறக்கும். பகல் பொழுதிலே பல குற்றச் செயல் கள் நடக்கும் காலம் இது. மின்சாரம் வசதி இல்லாது நடமாடுவது என்பது சாதாரண விடயம் அல்ல. ஆலயத்தில் நடக்கும் பல சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள விரும்பும் சிறுவர். பெண்பிள்ளைகள் மற்றும் வயோதிபர் பாதை ஒழுங்கின்மையாலும் போதிய வெளிச்சம் இன்மையாலும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள முடியாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். வருடங்கள் கடந்த நிலையில் கோயில் நிர்வாகமோ வீதிப் புனமைப்பினரோ அலட்சியமாக இருப்பது வருந்தத்தக்கது. ஊடகங்கள் மூலமாக இதை தாழ்மையுடன் அறியத்தர விரும்புகிறேன்.

*கல்வயல் வாசகி.*

## கேலிச் சித்திரம்



*நன்றி: ஞாயிறு லங்காதீப*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச வேலை...!

போராட்டம் போராட்டம் என்று என்னென்னத்துக்கோ வெல்லாம் போராடி போராட்டப் பட்டியலில் இடம் பிடித்துள்ளது "வேலையற்ற பட்டதாரிகள்" போராட்டம். பட்டத்துடன் வெளியேறும் மாணவர்கள் அடுத்த கட்டமாக தொழிலைத் தேடுகின்றனர். அண்மைக்காலமாக வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் விரைவில் அரச வேலைவாய்ப்பை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். இந்தப் போராட்டத்தில் வடமாகாணத்திலுள்ள வேலையில்லா உள்வாரி, வெளிவாரி, தேசிய உயர் தொழில்நுட்பப் பட்டதாரிகள் கலந்துகொண்டனர். பல தடவைகள் இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்ட போதிலும், இதுவரை சாதகமான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. ஒவ்வொரு ஆர்ப்பாட்டங்களின் போதும் நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மக்கள் பிரதிநிதிகளிடம் மனுக்களும் கையளிக்கப்படுகின்றன. யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக தொடர்ச்சியாக இரவு பகலாக இரண்டு நாள்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் வட மாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் முன்னெடுக் கப்பட்டிருந்தது. ஆனாலும் முன்னேற்றங்கள் இல்லை.

"அரச வேலை". எதற்காக அரச வேலை என்று சிலரிடம் பேச்சுக்கொடுத்துப் பார்த்தபோது காரணங்கள் வெளிப்பட்டன. "சமூகத்தில் கௌரவம்", "ஓய்வூதியம்", "வேலை குறைவு" இப்படிப் பல. அப்படியென்றால் தனியார் துறையில் வேலை செய்பவர்களுக்கு சமூக அந்தஸ்து இல்லையா? தனியார் துறையில் செய்யும் தொழிலுக்குச் சம்பளம். சும்மா இருந்து சம்பளம் வாங்க முடியாது. அதனால் தான் "அரச வேலை" என்று அலறுகின்றனரோ தெரியவில்லை.

இறுதியாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது வட மாகாண அமைச்சுக்களின் கீழ் வேலையற்ற பட்டதாரிகளை சேவையில் இணைத்துக்கொள்வதற்காகப் புதிதாக ஆளணி வெற்றிடங்கள் உருவாக்கப்படவுள்ளதாகவும் அதற்கு ஒரு மாதகால அவகாசம் தேவை எனவும் மேலும், குறித்த பிரச்சினை தொடர்பில் மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று தீர்வு பெற்றுத்தருவதாகவும் வடமாகாண சபை அமைச்சர்கள் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து இரண்டு நாள் ஆர்ப்பாட்டம் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளினால் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1478 புதிய ஆளணி வெற்றிடங்கள் வடமாகாண அமைச்சரவையின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான அனுமதியை பெற முகாமைத்துவ சேவைப் பிரிவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் மற்றும் வடக்கு மாகாணத்திலுள்ள வேலை யற்ற பட்டதாரிகளின் விவரம் உத்தியோகபூர்வமாக வடமாகாண சபையில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் வடமாகாண' அமைச்சர்களினால் வேலையற்ற பட்டதாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"கடந்த அரசால் தேசிய ரீதியில் 2012 மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பட்டம்பெற்ற 5ஆயிரத்து 500 பட்டதாரிகளை அரசவேலை வாய்ப்பில் உள்ளீர்ப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அத்தகைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் எந்தவித வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் புதிய அரசு தற்போது ஆட்சி அமைத்துள்ளது. இந்நிலையில் தேசிய ரீதியில் காணப்படும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளை புதிய அரசு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்பது வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கை.

பொதுவில் கேட்டால் வேலையற்ற பட்டதாரிகள் அரச வேலைகளுக்காகக் காத்திருக்காமல் தனியார் துறைக்குள் கிடைக்கும் வேலைகளைப் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும். தனியார் துறையில் சாதித்த எத்தனையோ பட்டதாரிகள் நம்மிடையே உள்ளனர். அவர்கள் பிறருக்கு தொழில் கொடுப்பவர்களாகவும் மாறியுள்ளனர். பாராட்டத்தக்க விடயம்.

இந்தப் பிரச்சினை வடமாகாணத்தில் மட்டும் இல்லை. நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுக்கொண்டுதான் உள்ளது. மத்திய மாகாணத்திலுள்ள வேலையில்லா பட்டதாரிகள் கண்டியில் ஒன்றுகூடிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்தப் போராட்டத்தில் "அரசு தமது நூறுநாள் வேலைத் திட்டத்தில் வாக்களித்ததன் பிரகாரம் வேலையில்லா பட்ட தாரிகளுக்குப் பொருத்தமான வேலை வாய்ப்பை உடன் பெற்றுத் தர வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து கோரி சுமார் 1500 பட்டதாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கிலும் அதே நிலைதான். அண்மையில் மூன்று நாள்களாகத் தொடர்ந்த மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் உணவுதவிர்ப்புப் போராட்டம் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டின் உறுதி மொழியையடுத்து கைவிடப்பட்டிருந்தது. எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குள் மாகாணசபையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைய திணைக்களங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என முதலமைச்சர் அளித்த உறுதிவழங்கியுள்ள நிலையில் வேலை வாய்ப்பு கிடைக்கும் வரையில் ஞாபகமூட்டலுக்காக ஒவ்வொரு மாதமும் உணவுதவிர்ப்புப் போராட்டம் ஏற் பாடு செய்யவுள்ளார்கள் கிழக்கு வேலையற்ற பட்டதாரிகள்.

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்குச் செலவிடும் நேரத்தில் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டால் கூட வருமானம் கிடைக்கும். வேலையற்ற பட்டதாரிகள் என்ற பெயருடன் வாழ்பவர்களோடு ஒன்றாகப் பாடசாலையில் படித்தவர்கள் தனியார் துறைக்குள் சென்று உழைக்கத் தொடங்கியிருப்பார்கள். அவர்களோடு பார்க்கையில் பட்டத்தை வைத்து போராட்டம் செய்வது மட்டும்தான் வேலையற்ற பட்டதாரிகள் சொத்து.

கிடைக்கும் நேரம் கிடைக்கட்டும்
என்று களமிறங்குங்கள் ஏதும்
ஒரு துறையில். சாதியுங்கள்.
தூங்கிக் கிடந்தால் சிலந்தி
வலைகூட சீனப்பெருஞ்
சுவர்தான்...!

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944

விளம்பரம் : 021-493 1111

விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com

விளம்பரம்: advt@uthayan.com

## விசாரணைப் பொறிமுறை; இக்கட்டான நிலையில் அரசு

ஐ.நா. சாசனம் 1945 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டதன் 70 ஆவது வருடாந்த தினம், அண்மையில் நியூயோர்க்கில்பல்வேறுநிகழ்ச்சிகளோடும்உறுப்புநாடுகளின்தலைவர்கள், அதிபர்கள் மற்றும் பிரதிநிதிகளின் பங்களிப்போடும் கொண்டாடப்பட்டு நிறைவுற்றது.

நியூயோர்க்கில் இடம்பெற்ற நிகழ்வுகளில், உலகத் தலைவர்கள் பலராலும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக மரியாதையோடும் மதிப்போடும் நடத்தப்பட்டு நாடு திரும்பியிருந்தார்.

முன்பு ஜனாதிபதி மைத்திரி பிரிட்டனுக்கு சென்ற சமயம் இங்கிலாந்து மகாராணி அவரை கையுறைகள் இன்றி கைகுலுக்கி வரவேற்றமையும், பிரதமர் டேவிட் கமரூன் தமது அலுவலகத்துக்கு வருகை தந்த எமது ஜனாதிபதியின் கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கே, சென்று வரவேற்றமையும் இங்கு எதிர்த்தரப்பினரால் பரிகாசமாக நையாண்டி செய்யப்பட்டிருந்தது. இந்த முறை ஐ.நாவில் உலகத் தலைவர்களின் மத்தியில் அவருக்குக்கிடைத்த மதிப்பும்மரியாதையும்முன்புநையாண்டி செய்தவர்களை வாயடைக்கச் செய்துள்ளது.

அவருக்குக் கிடைத்த மதிப்பு இலங்கை நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்த மதிப்பு என்பதை அவர்கள் இப்போது உணர்ந்திருப்பார்கள் என்று கருதலாம். இந்தச் சந்தர்ப்பத்தில், ஐ.நாவில் இலங்கை இணைந்து கொண்ட 60 ஆவது வருடாந்த தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

அதையொட்டி நடைபெற்ற நிகழ்வுகளில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் என்பவர்களுடன் இலங்கையிலுள்ள ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி மற்றும் வெளி நாட்டு பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஐநாவையும் அதன் விழுமியங்களையும் துற்றி மதிக்காமல் செயற்பட்டிருந்ததுடன், அதன் செயலாளர் நாயகத்துக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளையே காற்றில் பறக்க விட்டிருந்த முன்னைய ஆட்சியாளர்களுக்கு அந்த நிகழ்வு மகிழ்ச்சியளிப்பதாக இருந்திருக்க முடியாது.

அவர்களதுஆட்சிக்காலத்தில்நிகழ்ந்துள்ளபோர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் சபை தொடர்ச்சியாக நடவடிக்கைகளை முன் னெடுத்து வந்திருப்பதே அதற்குக் காரணம்.

கடைசியாக, மனித உரிமைகள் சபை வெளியிட்டுள்ள புலனாய்வு அறிக்கை, அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணையாளர் வழங்கிய பரிந்துரைகள், பின்னர் இப்போதைய இலங்கை அரசின் அனுசரணையுடன் அந்தச் சபையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானம் என்பவை அவர்களை திகில் கொள்ளச் செய்துள்ளன. அதனால் என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் திணறுகிறார்கள்.

இந்த நிலைமையிலேயே, முன்னைய அரசினால் கண்துடைப்புக்காக நிறுவப்பட்ட பரணகம மற்றும் உடலகம ஆணைக்குழுக்களின் அறிக்கைகளிலும் அவர்களை மிரளச் செய்யும் அம்சங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. இந்த அறிக்கைகள் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக பரணகம அறிக்கையில் வெள்ளைக் கொடி மற்றும் சனல் - 4 ஆவணப்படங்கள் தொடர்பாக விசாரணைக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மனித உரிமைகள் சபையின் அறிக்கையில் கடும் தொனியில் தெரிவிக்கப்பட்டுள்ளவையை விட இலங்கையின் முன்னாள் ஆட்சிகால சம்பவங்கள் குறித்து பாரதூரமான அம்சங்கள் பரணகம அறிக்கையில் இருப்பதாக, சில அமைச்சர்களே சுட்டிக்காட்டி உள்ளனர்.

ஊழல், இலஞ்சம், நிர்வாகச் சீர்கேடு, பணமோசடி என்று குற்றச்சாட்டுக்களும் விசாரணைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையில், மனித உரிமைகள் சபை தீர்மானத்தின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. விசாரணைகளை முன்னெடுப்பதற்கான பொறிமுறை குறித்து அரசுத்தரப்பில் கூறப்படும் விளக்கங்களுக்கும் எதிர்த்தரப்பு மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளியிடும் வியாக்கியானங்களுக்கும் மிகப் பெரியளவில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

அரசுஉருவாக்கப்போகும்பொறிமுறை,நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்புக்கும் விடப்பட வேண்டும் என்று சில எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் சகல கட்சிகளையும்இணைத்து ஒரு பொதுவானதீர்மானத்துக்கு அல்லது உடன்பாட்டை உருவாக்கலாம் என்பது ஜனாதிபதியின் விருப்பமாகத் தெரிகிறது. அந்த வகையிலேயே சர்வகட்சி மாநாடொன்றை அவர் நடத்தியுள்ளார். அவ்வாறான மாநாடுகளைத் தொடர்ந்து நடத்தி ஒரு முடிவை எட்ட அவர் விரும்புவது பயனளிக்குமா என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மேற்கொள்ளப்பட உள்ள விசாரணைப் பொறிமுறை உள்நாட்டில் சகல தரப்பினரதும் உடன்பாட்டைப் பெற்ற தாகவும் இருக்க வேண்டும். சர்வதேசம், குறிப்பாக மனித உரிமை சபை தீர்மானத்தின் அம்சங்களையும் நிறைவு செய்வதாக அமையவேண்டும்.

அது இக்கட்டான நிலைமைதான் -- இந்தச் சிக்கலை எவ்வாறு அரசும் தலைவர்களும் தீர்க்கப்போகிறார்கள் என்பதில்தான் அரசின் எதிர்காலம் தங்கியிருக்கப் போகின்றது போல் தெரிகின்றது.

# எப்போது தீர்க்கப்படும் மீனவர்களது பிரச்சினை?

**வந்தியத்தேவர்**

அத்து மீறி மீன்பிடித்தல் தொடர்பான பிரச்சினைக்கான பிரதான கதாபாத்திரங்களாக விளங்குவது இலங்கையின் வடபகுதித் தமிழ் மீனவரும் இந்தியாவைச் சேர்ந்த தமிழக மீனவர்களுமே என்பது தான் இது. இரு நாட்டு அரசுகளின் மௌனத்துக்குக் காரணம் என்பது மறுப்பதற்கில்லை. இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமன்றி இந்தியத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண இந்திய மத்திய அரசு முன்வருவதில்லை. தமிழ்நாட்டுக்கு கர்நாடக அரசு வழங்க வேண்டிய (45DMC) தண்ணீரை வழங்குவதற்கு கர்நாடக அரசு மறுத்து வருகிறது. தமிழக அரசு இது தொடர்பாக மத்திய அரசுடன் தொடர்புகளைக்கொண்டபோதும் மத்திய அரசு இதில் மெத்தனமாகவே உள்ளது. பாவம்தமிழகஅரசுதண்ணீர் கேட்டுக் கடிதம் எழுதுவதற்கு மேலாக எதையும் செய்யமுடியாத இந்தியக் குடியரசின் ஒரு மாநிலம். தமிழகத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் மத்திய அரசின் புறக்கணிப்புஅதற்குஉண்டு. தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் பா.ஜ.க. போன்ற மத்திய அரசின் கிளைக் கட்சிகளும் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளில் தலையிட்டு ஒரு முடிவை எடுக்க மத்திய அரசை வலியுறுத்த முடியாத நிலை.






தற்போது தமிழ் நாட்டுக்கு ஒரு சொட்டுத் தண்ணீரையும் வழங்கக் கூட முடியாதெனவும் தடுப்பு அணை ஒன்றைக் கட்டவுள்ளதாகவும் கர்நாடக அரசு அறிவித்துள்ளது. இதனால் விளைச்சல் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் தமிழக விவசாயிகள் தற்கொலை செய்யுமளவுக்குப் பாதிப்பும் விரக்தியும் கொண்டுள்ளதாக ஊதும் சங்கொலிகள் மோடியின் காதுகளில் புகவில்லைப் போலும். தமிழ்நாட்டுக்கான நதிநீர் விடயத்தில் பிரதமர் மோடி முன்னைய ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியையே பின்பற்றி வருவதாக தமிழகம் குற்றஞ்சாட்டுகிறது.

இந்திய விவசாயிகளைப் போன்றே வடபகுதி மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினைகளும் நீண்ட காலமானதே. இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கச்சதீவை இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் தாரைவார்த்துக் கொடுத்ததே மீனவர்கள் பிரச்சினைக்குக் காரணம் என தமிழக அரசியல்வாதிகள் கூறுகிறார்கள். அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் மு.கருணாநிதி. கச்சதீவு தாரைவார்க்கப்பட்டதை கண்டும் காணாது இருந்தவர். இன்று தமிழக மீனவர்களுக்காகப் பரிந்துரைப்பதுதான் வேடிக்கை. கச்சதீவை மீட்டே தீருவேன் என்று வந்தவர் தான் ஜெயலலிதா. ஒரு குடம் தண்ணீர் கேட்டு டில்லிக்குக் கடிதம் எழுது வதைத் தவிர, வேறு எதுவும் செய்ய முடியாத அவர் கச்சதீவை மீட்பேன் என்பது கணக்கில் எடுக்கவேண்டிய ஒன்றல்ல. தமிழக அரசியல்வாதிகள் தேர்தலுக்காக மீனவர் பிரச்சினையை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாமே தவிர. தங்களால் தீர்வு காணமுடியாத ஒன்று இது என்பதை ஏற்றுக் கொண்டு தானாக வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது இரு நாட்டு அரசுகளுக் குமானதே. இந்தியா இதில் இலங்கைக்கு எந்த ஓர் அழுத்தத்தையும் கொடுக்க முடியாது. இந்தியாவுக்குத் தொல்லை கொடுக்கும் சீனா பாகிஸ்தான் அரசுகள் இலங்கையுடன் நல்லுறவுகளைக் கொண்டிருப்பது இந்தியப் பூகோள நலனுக்கு இலங்கையில் சிநேகபூர்வ உறவுகள் முக்கியம் என்பதால் மீனவர் பிரச்சினையை இழுத்தடிப்பது அதற்கு அவசியமாகும். தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட வன்முறைகளுக்கு இந்தியா மறைமுக ஆதரவை வழங்கியது இதனாலேயே. இது இருநாட்டு மீனவர்களுக்குமான வாழ்வாதாரப் பிரச்சினை. இரு அரசுகளுமே தமிழர் விரோதப் போக்கைக் கொண்டுள்ளவை. ஆட்சியில் மோடியும் மைத்திரியும் என்பதால் தமக்கு நல்ல தீர்வுகள் பல கிடைக்கலாம் எனத் தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டபோதும், அது சாத்தியப்படு வதற்கான அறிகுறிகள் இருதரப் பிலும் காணப்படுவதாக இல்லை என்பதே உண்மை.





இரு நாட்டு மீனவர்கள் மத்தியிலும்கூட ஓர் உருப்படியான கருத்துக்கள் முன் வைக்கப்படவில்லை. அத்துமீறும் மீனவர்களைக் கொல்வதும் அவர்களது மீன்களையும் வலைகளையும் பறித்தெடுப்பதும் படகுகளையும் மீனவர்களையும் பிடித்து வந்து சிறைக்குள் போடுவதுமே பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழி என்று கடற்படையினர் நம்புவதை இலங்கை அரசும் இந்திய அரசும் நம்புவதுபோல் தெரிகிறது. அத்துமீறுபவர்கள், சுடப்படுவார்கள் என்று இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டதை அப்படியே ஆகட்டும் மன்னா என்று ஏற்றுக்கொண்டது போலிருந்தது. இந்தியப் பிரதமர் மோடியினதும் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜினதும் மௌனம்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டாதிருக்க இந்தியக் கரையோர காவற்படை தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கரையோரக் காவற்படை என்பதால் அவர்கள் கடற்கரையோரமாக நங்கூரமிட்டுக் கொண்டால் மீனவர்கள் தவறுதலாக எல்லையைத் தாண்டவும் கூடும். இலங்கை இந்தியக் கடற்படைகளின் கூட்டு ரோந்து, மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தவிர்க்க உதவும். இப்போது எல்லை தாண்டும் மீனவர்களின் வலைகளை அறுத்தெறிய இந்திய அரசே கேட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகிறது. பானையை எடுக்க ஆட்டுத்தலையை வெட்டிய மாதன முத்தாவின் யோசனை போன்றுள்ளது. ஓர் அரசின் கருத்துஇதுவிடயத்தில் இரு நாட்டு மீனவர்களின் பிரதிநிதிகள் மட்டுமன்றி துறைசார் நிபுணர்களதும் புத்திஜீவிகளதும் கருத்துக்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசியல் வாதிகளின் செயற்பாடுகள் தங்களதும் தங்களது நலன் சார்ந்ததாகவே இருக்கும் என்பதால் அவர்களின் கருத்துக்கள் ஆழமாக அவதானிக்கப்பட வேண்டும். இரு நாடுகளையும் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான ஓர் இன மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை தொப்புள்கொடி உறவுகள் என்று கூறிக் கொண்டிருந்தால் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பதல்ல. பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மக்கள் கலந்து கொண்டு இரு பகுதி மீனவர்களும் பாதிக்கப்படாத வகையில் தகுதியான தீர்மானங்களைக் கண்டறிதல் வேண்டும். அரசுகள் இரண்டும் மீனவர் பிரச்சினைக்குச் சரியான தீர்வொன்றை எட்டுமா என்பது கேள்வியாகவே தொடரும் நிலையில் மீனவ சமூகம் வெறும் போராட்டங்களையும் கடிதங்களையும் மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தால் அது காலத்துடன் கரைந்து கொண்டேயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழ் மக்களின் அவமானம் "கருணா"

மு. ஈழத்தமிழ்மணி

**2004** ஆம் ஆண்டு தமிழினத்தின் போராட்ட வரலாற்றில் மிகப் பெரிய துரோகம் நிகழப்பெற்ற ஆண்டாகும். அந்தத் துரோகமானது சிங்கள தேசத்துக்குப் பெரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு சூத்திரதாரியென இன்றைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவைத் தமிழர் தரப்பு எண்ணியிருந்தது.

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத்தின் கட்டளைத் தளபதி என அழைக்கப்பட்ட மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த கருணாஅம்மான் என அழைக்கப்பட்டு வரும், விநாயகமூர்த்தி முரளிதரனின் துரோகச் செயல்களும், அவர் மேற்கொண்டிருந்த படுகொலைகளும் உலகத் தமிழர்களால் மறக்க முடியாததும், மன்னிக்க முடியாததும் ஆகும்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களால் ஒதுக்கப்பட்டவரான முரளிதரன் பத்தாண்டுகள் காலத்தில் அவரது அரசியல் செயற்பாடுகளைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழினத்தால் வெறுக்கப்பட்ட, அருவருக்கப்பட்ட



ஒரு பிரகிருதியாக வேறுபடுத்திப் பார்க்கின்றனர். மகிந்த அரசால் ஆசீர்வதிக்கப்பட்டு தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார். கருணா அம்மானின் துரோகமும், ஈனச்செயல்களும் அவரது அரசியல் வாழ்வுக்கு முடிவுரை எழுதுகின்ற காலம் மகிந்தவின் வீழ்ச்சியோடு தொடங்கி விட்டது.

கருணா அம்மான் அரசினது அடிவருடியாக மாறியது மட்டுமல்லாமல் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கவும் துணை போனவர். விடுதலைப் புலிகளிடமிருந்து தந்திரமாக வெளியேறிய கருணா 5ஆயிரம் புலிப்போராளிகள் தன்னோடு உள்ளனர் என்று கதை விட்டிருந்தார். சகோதரத்துவப் படுகொலைகளை ஈவிரக்கமின்றிக் கிழக்கு மாகாணத்தில் இவர் செய்து முடித்தார்.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்த 5 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல்களையும், இடையூறுகளையும் செய்து வந்தார். தான் ஏன் விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து வந்தேன் என்பதற்கு, தமிழ்மக்கள் நம்ப முடியாதவாறு பல்வேறு கதைகளை ஊடகங்கள் மூலம் வெளியிட்டுக் கொண்டிருந்தார். ஒருவாறு நாட்டிலிருந்து தப்பி வெளிநாடு சென்றிருந்தார். புலம்பெயர் தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்பால் மீண்டும் நாடு திரும்பினார்.

அரசுடன் சேர்ந்து தமிழினத் துரோகத்தனத்தை தொடர்ந்தும் தனது வாழ்நாள் முழுவதும் அரங்கேற்ற முடிவு செய்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேச்சையாகவோ, சிங்கள தேசியக் கட்சி சார்பிலோ வேட்பாளராக நின்று போட்டியிட்டு வெற்றியீட்டக் கூடிய சக்தியற்ற ஒருவராக கருணா இருந்த நிலையில் மகிந்தவின் தீவிர விசுவாசியாக உருவெடுத்தார்.

"மகிந்த சரணம் கச்சாமி, துரோகமே சரணம் கச்சாமி நாடாளுமன்ற பதவி வேண்டும் சரணம் கச்சாமி" என எண்ணியவாறு மகிந்தவுக்கு அடிமையானார்.



தமிழினத்தின் போராட்டத்தை அழிக்க தேசியப் பட்டியல்ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும், விடுதலைப்புலிகளையும் அழித்தொழித்த பின்பு பிரதியமைச்சர் பதவியையும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் பதவியையும் பெற்றுக் கொண்டார்.

கருணா அம்மானைப் பாதுகாத்து கொழும்பு வரை அழைத்துச் சென்றவர் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரான அலிசாஹிர் மௌலானா என்பவர் என்பதை, அப்போது கிழக்கு மாகாணத் தமிழ்மக்கள் அறிந்து கொண்டனர். அவரது ஆதரவும், உபசரிப்புமே கருணா அம்மானை சிங்கள அரசியலுக்குள் மூழ்குவதற்குக் காரணமாயிருந்தன.

மகிந்தவின் தீவிர விசுவாசியாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட கருணா அம்மான் தமிழ் மக்கள் மத்தியில் நிரந்தரமான இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. தமிழ் மக்களும் அதற்கான அங்கீகாரத்தை வழங்க மறுத்தனர் என்பதே உண்மையாகும். 2012 இல் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் கருணா அம்மானின் சகோதரி போட்டியிட்ட போது, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் அவருக்குச் சொற்ப வாக்குகளை மட்டுமே வழங்கியிருந்தனர். மக்கள் அவரை முற்றுமுழுதாக நிராகரித்திருந்தனர்.

பிரதியமைச்சராகக் கொழும்பில் நடைபெற்றதொரு களியாட்ட நிகழ்வின்போது, தனது செயலாளருடன் சேர்ந்து நடனமாடிய சம்பவம் தமிழ் மக்களை விசனத்துக்குள்ளாக்கியது. களியாட்டங்களிலும், ஆடம்பரங்களிலும் அதிகம் பிரியம் கொண்டவர், தனது பதவிக்காலத்தைக் கொழும்பிலேயே கழித்தவராவார். மட்டக்களப்பு மாவட்டத்தில் சொல்லும் படியான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவில்லை. கருணாவைப் பிள்ளையான் பெரிதளவில் அரசியலில் முன்னிலைப்படுத்த விரும்பவேயில்லை. இருவருக்கும் எப்போதுமே மட்டக்களப்பு மாவட்டத்தில் முறுகல் நிலை காணப்பட்டது.

கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகியபோது பிள்ளையான், இனியபாரதி எனச் சிலரும் இவருடன் சேர்ந்து விலகியிருந்தனர். தமிழினத்தை ஏமாற்றித் தனது அரசியல் பிழைப்பைப் பிள்ளையான் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றார். தற்போது யோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் முக்கிய சூத்திரதாரியாக இருக்கலாமெனச் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கருணாவின் வீழ்ச்சியானது மகிந்தவின் தோல்வியுடன் ஆரம்பமாகியது. தனது ஆதரவுத் தளத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவை கருணாவுக்கும் தேவையாக இருந்தது. பிள்ளையானின் ஓரளவு ஆதரவையேனும் வைத்துக் கொள்ளாதவர் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பமின்றி தேசியப் பட்டியலூடாக வரவே முயன்று கொண்டிருந்தார். சுதந்திரக் கட்சியில் ஒற்றுமையின்மை, போட்டிகள், நெருக்கடிகள் ஒன்றாக இருந்தமையால் மைத்திரி-மகிந்த அணியினர் கருணாவைக் கணக்கிலெடுக்கவில்லை. மகிந்தவுடனா? மைத்திரியுடனா? என்ற கேள்வியோடு மகிந்தவுடனே ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மகிந்தவுக்கே அடிமையானார்.

தேசியப்பட்டியலூடாக மீண்டும் மூன்றாவது தடவையாக நுழைந்து விட வேண்டும் என்ற அவாவில் அதற்கான காய்களை நகர்த்தினார். மகிந்த அணியினரும் தேசியப் பட்டியலுக்குள் கருணாவைச் சேர்ப்பதற்கு முடிவு செய்தனர். தேர்தலும் முடிந்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலூடாக நியமிக்கப்படக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரங்கள் வெளிவந்தபோது, கருணாவின் பெயர் இருக்கவில்லை. கருணா அம்மான் திட்டினார், துவண்டார். இனிமேல் அரசியலில் இடமில்லை. மகிந்த இப்படித் துரோகம் செய்து விட்டாரே எனக் கொதித்தார்.

ஊடகவியலாளர்களைக் கூட்டித் தனது நிலைப்பாட்டை எடுத்துக்கூறி ஒப்பாரி வைத்தார். ஐயகோ நான் யாரிடம் போய் சொல்லுவேன் எனக்கு இப்படி ஒரு கொடுமையா இது நீதியா மகிந்த, சுசில், அநுரா ஆகியோர் இப்படித் துரோகம் செய்யலாமா என புலம்பினார். ஒரேயடியாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கருணாவை தூக்கி எறிந்துவிட்டது. தான் செய்த துரோகத்தனங்களையும் கழுத்தறுப்புக்களையும் நாகூசாமல் வெட்கமில்லாமல் ஊடகவியலாளர் கண்முன் ஒப்புவித்தார்.

இறுதிப் போரின் போது மகிந்த அரசுக்கு விடுதலைப்புலிகளையும், போராட்டத்தையும், ஓரளவு மக்களையும் அழித்தொழிப்பதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்து கொடுத்து துரோகத்தனத்துக்குப் பரிசாக பல வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டார். உண்மைகளைத் தானாகவே முன்வந்து வெளிப்படுத்தியிருந்தார்.

பொதுத்தேர்தலுக்கு முன்னர் ஜூலை மாதம் அளவில் உயிருடன் கைது செய்யப்பட்டே பிரபாகரன் மகிந்த ராஜபக்சவிடம் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் பிரபாகரனை மகிந்த கடுமையாகத் தாக்கியதாகவும் மகிந்தவின் ஆட்சியிலிருந்த இரண்டு முக்கிய அமைச்சர்கள் இருவர் தன்னிடம் அப்போது கூறியதாகவும் இது பற்றி மகிந்தவிடம் தான் கேட்டதாகவும் தன்னைப் பார்த்து சிறிதாக புன்முறுவல் செய்துவிட்டு வேறு விடயத்தை பேசினார் எனக் கூறிய கருணா பிரபாகரனைக் கைது செய்தவிடயம் நூற்றுக்கு நூறுவீதம் உண்மைதான் என உறுதிப்படுத்தித் தெரிவித்திருந்தார். சிங்கள ஊடகமொன்றுக்கு தனது புழுகைக் கூறி பெருமைப்பட்டிருந்தார்.

ஓகஸ்ட் மாதம் இதே கருணா இந்தியா புதிய தலைமுறை தொலைக் காட்சிக்குப் பேட்டியளித்தபோது வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரில் பிரபாகரன் தனது கைத்துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டாரெனவும் அவரது மனைவி, மகள் ஆகியோர் இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார். அத்துடன் பொட்டம்மானும் குண்டுகளை வெடிக்கவைத்துத் தன்னைத் தானே அழித்துக் கொண்டதாகவும் மேலும் தெரிவித்திருந்தார்.

கருணா கூறியவைகளிலிருந்து தமிழ் மக்கள் அவரின் துரோகத்தனத்தையும் இரட்டை வேடங்களையும் புரிந்து கொள்வதோடு மனநோயாளி ஒருவர் கூறுவதுபோல் பிரபாகரன் பற்றிய விடயங்கள் இருப்பதாகவுமே கருதுகின்றனர். தனக்கு தேசியப்பட்டியலூடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்காத நிலையில் தனது எண்ணத்துக்கு அமைந்தாற்பேசவும், தேர்தலுக்குமுன் ஒரு கருத்தையும் தமிழ்மக்கள் மத்தியிலும் ஊடகங்கள் மத்தியிலும் கூறிப் புலம்புகின்ற நிலைக்குத் தரம் குறைந்த ஓர் அரசியல்வாதியாகிவிட்டார்.

கருணா அம்மானை எப்படி விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் இருந்து பிரித்தது பற்றிய முழுவிவரங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அலி சாஹிர் மௌலான சிலோன் ருடே பத்திரிகைக்கு பேட்டி அளித்திருந்தார். கருணா அம்மானுடன் நட்புறவுகளை வளர்த்து அரசியல் ரீதியில் ஒன்றாகிவிட்டதாகக் கூறினார். ஒரு பயணப் பெட்டி நிறைய விடுதலைப் புலிகளின் முகாம்கள் அமைந்துள்ள வரைபடங்களையும் எடுத்துக்கொண்டு வந்ததாகவும் கருணாவையும் அவரது குழுவினரையும் தனது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றதாகவும் தம்புள்ளவில் இராப்போசனம் அருந்தியதாகவும் தெரிவித்திருந்தார்.



கருணாவின் காட்டிக்கொடுப்புக்கள் துரோக்கத்தனங்கள் தமிழினத்தின் போராட்டத்தை எப்படி அழித்தது என்பதும் மைத்திரி நல்லாட்சியில் ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டிருந்தாலும் இதற்குப் பின்புலமாக இருந்தவரான இன்றைய பிரதமரான ரணிலும் மகிந்த ஆட்சியில் முக்கிய அமைச்சர்பதவியை வகித்து மகிந்தவுக்கே சவால் விட்டு ஒரு அப்பத்துடன் கதையை முடித்துவிட்டு இன்று ஜனாதிபதியாக பதவியிலிருப்பவரான மைத்திரிபால சிறிசேனவும் அப்போது மகிந்த ஆட்சியிலிருந்தபோதும் கருணா அம்மான் வேண்டப்பட்டவராகவேயிருந்தார். ஆனால் இன்று தூக்கி எறியப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களின் அவமானச் சின்னமாகவே கருணா என்ற நாமம் இருக்கும் என்ற உண்மை யாவருக்கும் புரியும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 400 | 700 | 500 | 500 |
| நண்டு | 300 | 400 | 250 | 300 | – | 450 |
| கணவாய் | 500 | 600 | 500 | 500 | – | – |
| பாரை | 100 | 300 | 400 | 400 | 400 | 350 |
| சுறா | 400 | 500 | – | 500 | 400 | 450 |
| சீலா | 250 | 300 | 300 | 300 | 250 | 250 |
| விளை | 400 | 400 | 300 | 300 | 300 | 300 |
| முரல் | 250 | 250 | 250 | 250 | 200 | – |
| கும்பிளா | 250 | 250 | 250 | 400 | 150 | 150 |
| கிழாக்கன் | 350 | 800 | – | 300 | – | – |
| ஒரா | 300 | 250 | 300 | 300 | – | 200 |
| திரளி | 200 | 200 | 100 | 250 | 100 | – |
| நகரை | 150 | 200 | 60 | 250 | – | – |
| சூடை | 150 | 100 | 50 | 80 | 50 | 50 |
| ஒட்டி | 200 | 150 | 200 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 200 | 150 | 280 | – | 100 |
| பாலை | 300 | 200 | 250 | 350 | – | – |
| வாளை | 100 | 100 | 250 | 200 | 100 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 200 | 100 | 250 | – | 150 |

# பெண்களுக்கு உகந்த பப்பாசிப்பழம்



தாய்ப்பால் புகட்டும் பெண்கள் தினமும் பப்பாசிப் பழம் சாப்பிடுவதன் மூலம் பால் பெருகும்.நரம்பு வலியால் அவதிப்படுகிறவர்கள் பப்பாசி இலையை கொதித்த நீரில் அவித்தோ, தீயில் சுட்டோ வலியுள்ள பகுதியில் வைத்தால், வலி குறைந்துவிடும்.பெண்கள் பப்பாசிப்பழம் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால் பெண்களின் உடலுக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் அதில் இருக்கின்றன. குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால், பப்பாசிப் பழம் சாப்பிடுகிறவர்களுக்கு மார்பக புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக் குறைவு. 100 கிராம் பப்பாசியில் கிட்டத்தட்ட 2500 விற்றமின் 'ஏ' சத்து இருக்கிறது. அதனால் பப்பாசிப்பழம் சாப்பிட்டால், பார்வை சக்தி அதிகரிக்கும். பழுத்த பப்பாசியின் தசைப் பகுதியை எடுத்து பிசைந்து, முகத்தில் பூசி அரை மணி நேரம் வைத்திருந்து முகத்தை கழுவுங்கள். சரும சுருக்கம், படை போன்றவை நீங்கி, முகம் பளபளப்பாகும். பப்பாசிப் பழத்தை ஆண்கள் தினமும் சாப்பிட்டால் அவர்களது தாம்பத்திய சக்தி அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு. ஓய்வற்ற உழைப்பு, மனஅழுத்தம்நிறைந்த வேலை, உடற்பயிற்சியின்மை போன்றவைகளால் கழுத்து வலி, முதுகுவலி,முதுகு சவ்வு தேய்தல்போன்ற பாதிப்புக்களால் நிறைய பேர் அவதிப்படுகிறார்கள்.

அந்தப் பாதிப்புக்களைக் கட்டுப்படுத் தும் சக்தி, பப்பாசிப் பழத்துக்கு இருக்கும். அதனால் வலியும், நோயுமின்றி வாழ விரும்புகிறவர்கள் பப்பாசிப் பழத்தைத் தினமும் சாப்பிட வேண்டும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 60 | 60 | 40 | 60 | 30 |
| கத்தரி | 100 | 90 | 100 | 100 | 60–100 | 120 | 80 | 60 |
| கரட் | 70 | 70 | 60–140 | 80 | 80–100 | 160 | 100 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 60 | 100–120 | 140 | 100 | 100 |
| பாகல் | 160 | 180 | 240 | 180 | 180–200 | 120 | 110 | 160 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 50 | 80 | 60 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 110 | 110 | 130 | 130 | 150 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 120 | 140 | 100 | 120 | 100 | 110 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 | 40 | 80 | 50 | 50 |
| தக்காளி | 100 | 80 | 100 | 100 | 100–120 | 120 | 80 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 80 | 80 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 40 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 150 | 400 | 300 | 320 | 450 | 250 | 280 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 | 80 | 60 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 120 | 100 | 60 |
| வெண்டி | 100 | 70 | 120 | 100 | 80–100 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 140–160 | 180 | 160 | 140 |
| லீக்ஸ் | 100 | 70 | 80 | 80 | 70–80 | 60 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 55 | 50 | 60 | 50–60 | 55–60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 100 –120 | 90–120 | 100 | 100–120 |
| தேசிக்காய் | 400 | 300 | 300–400 | 250 | 300–360 | 600 | 200 | 370 |
| வல்லாரை | 25 | 10 | 10 | 10 | 30 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 120 | 200 | 200 | 120 | 150 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 140 | 100 | 120 | 60 | 120–130 | 180–200 | 120 | 70 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### நம்பிக்கை வையுங்கள்

யாருடைய நம்பிக்கையையும் கலைக்க முயலாதீர்கள். முடியுமானால் அந்த மனிதனுக்கு அவன் கொண்ட நம்பிக்கைக்கும் மேலாக இன்னொன்றைக் கொடுங்கள்.

நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு சூட்சுமத் தன்மையை அடைகிறது.

மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கிறான். தனக்குத்தானே அமைத்துக்கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

## நாளை

**ஐப்பசி-10**
**செவ்வாய்க்கிழமை**
**27.10.2015**

**திதி:**
பூரணை:மு.இ.6.20வரை
**நட்சத்திரம் :**
அச்சுவினி பி.இ 12.59 வரை
**சுபநேரம்:**
10.33–12.03 வரை
**இராகு காலம்:**
03.03–4.33வரை
(பூரணை விரதம்)

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | 4 | 3 | | | | | 1 |
| | 7 | 5 | | | | 9 | 8 | |
| 3 | 6 | | | | | | | |
| | | | | 9 | 3 | | 1 | |
| 7 | | | 5 | | 8 | | | 6 |
| | 5 | | 7 | 4 | | | | |
| | | | | | | | 4 | 7 |
| | 1 | 7 | | | | 6 | 9 | |
| 8 | | | | | 7 | 1 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 9 | 1 | 3 | 8 | 5 | 7 | 2 |
| 5 | 3 | 7 | 6 | 2 | 9 | 1 | 4 | 8 |
| 8 | 2 | 1 | 5 | 4 | 7 | 6 | 9 | 3 |
| 2 | 9 | 4 | 8 | 1 | 6 | 7 | 3 | 5 |
| 1 | 8 | 5 | 9 | 7 | 3 | 4 | 2 | 6 |
| 3 | 7 | 6 | 4 | 5 | 2 | 8 | 1 | 9 |
| 7 | 5 | 3 | 2 | 6 | 1 | 9 | 8 | 4 |
| 6 | 1 | 8 | 3 | 9 | 4 | 2 | 5 | 7 |
| 9 | 4 | 2 | 7 | 8 | 5 | 3 | 6 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடி சோதிடம்

*(நேற்றைய தொடர்ச்சி)*

**விதி 8:**
ஒரு கிரகம் ஸ்தான பலம் பெற்று இருந்தாலும், அந்தக் கிரகம் நின்ற வீட்டுக்கு 1,5,9,3,7,11,2,12 ஆகிய இடங்களில் வேறு கிரகங்கள் இல்லா விட்டால், அந்தக் கிரகம் தனது முழுப் பலனைத் தர இயலாமல் குறைந்த பலனே தரும்.

**விதி 9:**
ஒரு கிரகம் நீச்சம் பெற்று இருந்தாலும், அதற்கு 2,12,7,5 ஆகிய இடங்களில் நட்புக் கிரகங்கள் இருக்குமேயானால், அந்த நீச்சம் பெற்ற கிரகம் ஓரளவேனும் நன்மையான பலனையே தரும்.

**விதி 10:**
ஒரு சாதகத்தில் ராகு, கேது அச்சுக்கள், அந்த ஜாதகத்தை இரு பாகமாகப் பிரிக்கும். அப்படிப் பிரிக்கும்போது அச்சுக்கு மறுபுறத்தில் சனி இருந்தால் அந்த சாதகன் வெளிநாட்டில் வேலை பார்ப்பான் எனக் கூறலாம். அதேபோன்று பெண் சாதகத்தில் அச்சுக்கு ஒருபுறம் செவ்வாய் இருந்து மறுபுறம் சுக்கிரன் இருந்தால் அந்தப் பெண் விதவை ஆவாள் என முடிவு செய்யலாம். பெண் சாதகத்தில் செவ்வாய் கணவனையும் சகோதர னையும் குறிக்கும்.

**விதி 11:**
ஒரு சாதகத்தில் நீச்சம் பெற்ற கிரகம்கூட சாதகமான பலனைத் தரமுடியும். (இங்கு கிரகம் எனக் குறிப்பிடுவது அனைத்தும் காரகக் கிரகங் களையே குறிக்கும்) உதாரணமாக குருவானவர் நீச்சம் பெற்று மகரத்தில் இருக்கிறார். அவருக்கு 2,12,7,5இல் கிரகம் இல்லாமல் இருந்து, குருவுடன் சூரியன் சேர்ந்து இருந்தால் குருவின் நீச்சத்துக்குப் பங்கம் ஏற்படுகிறது. அப்போது அவர் நன்மையான பலனையே தருவார்.

**விதி 12:**
ஒரு நீச்ச கிரகம் பரிவர்த்தனை அடையும்போது தனது சொந்த வீட்டுக்குச் செல்லும். அப்போது நீச்ச பங்கம் ஏற்படும். செவ்வாய் கடகத்தில் நீச்சம் பெற்று நின்று, சந்திரன் விருச்சிகத்தில் நீச்சம் பெற்று பரிவர்த்தனை பெறுகிறது. இந்தப் பரிவர்த்தனையின்போது நீச்ச பங்கம் ஏற்படுகிறது.

**விதி 13:**
ஒரு கிரகம் சூரியனுடன் சேர்ந்து அஸ்தமனம் அடைந்து பரிவர்த்தனை பெற்று இருந்தால், அந்தப் பரிவர்த்தனை மூலம் தனது வீட்டுக்குச் செல்லும்போது அஸ்தமன தோஷம் நீங்குகிறது. குறிப்பாக மேடத்தில் சூரியன் 10 பாகையிலிருந்து குரு 12 பாகையில் இருந்தால் அஸ்த மனம். அதேசமயம், செவ்வாய், தனுசு அல்லது மீனத்தில் நின்றால் அந்தத் தோசம் நிவர்த்தி அடைகிறது.

**விதி 14:**
ஒரு சாதகத்தை எடுத்துக்கொண்டால், அது ஆண் சாதகமாக இருந்தால், குருவை முதலாகக்கொண்டு வரிசைப்படுத்தியும் பெண் சாதகமாக இருந்தால், சுக்கிரனை முதலாகக் கொண்டு வரிசைப்படுத்தியும் எழுதிக்கொள்ள வேண்டும்.

**விதி 15:**
பொதுவாக, கிரகங்கள் இடமிருந்து வலமாக வருவதுதான் வழக்கம். ஆனால் வக்கிரம் அடையும் கிரகம் ராகு, கேதுவைப்போல் பின்னோக்கி, அதாவது தான் இருக்கும் வீட்டுக்கு 12ஆம் வீட்டை நோக்கி நகரும்.

**விதி 16:**
நாடி சோதிட முறைப்படி, காரக கிரகத்துக்கு அடுத்து நட்பு கிரகம் நின்றாலும் பகை கிரகம் நின்றாலும் தங்களது காரக குணங் களை, காரக கிரகத்தின் மேல் படியவைப்பார்கள். உதாரண மாக ஒரு வீட்டில் (பெண் ஜாதகம்) சுக்கிரன் வக்கிரமாக இருந்து, அதற்கு அடுத்து புதன் இருந்தால், (புதன் நண்பனைக் குறிக்கும் கிரகம்) அது காதலைக் குறிக்கும் கிரகமாகும். அந்தப் பெண் காதல் வயப்படுவாள் என முடிவு செய்யலாம்.

**விதி 17:**
ஓர் உச்ச கிரகம் பரிவர்த்தனை அடைந்து, ஒரு பகைக் கிரகத்தின் மத்தியில் சிக்கினால், சுப பலம் முழுவதையும் இழக்கும். உதாரணமாக, சனி துலாவில் உச்சம் பெற்று, சுக்கிரன் மகரத்தில் செவ் வாய், கேதுவுடன் இருந்தால், உச்சம் பெற்ற சனி பரிவர்த்தனை மூலம் மகரத்துக்குச் செல்லும்போது பகைக்கிரகத்தின் மத்தியில் சிக்கித் தனது பலத்தை இழக்கிறது.

**விதி 18:**
ஒரு காரக கிரகம், எந்தத் திசையில் இருக்கிறதோ, அதே திசையில் உள்ள கிரகங்களை காரகக் கிர கத்தோடு இணைத்துப் பலன் சொல்ல வேண்டும்.

**கிரககாரத்துவங்கள்:**
சூரியன்: தந்தை, மகன், வலது கண், அரசு, அமைச்சர், ஆத்மா, புகழ், கீர்த்தி, மாநகரம், நிர் வாகப் பொறுப்பில் உள்ளவர், சிவன், அரசியல்வாதி, வீட்டின் வலது ஜன்னல், சந்தன மரம், தேக்கு, பொன் ஆபரணம், மண், அணுத் தொழில், அறுவை சிகிச்சை நிபுணர், துப்பறிதல், தந்தையின் தொழில்.

**சந்திரன்:** மனம், ஆழம், அறிவு, தாய், மாமியார், திரவப் பொருள், பயணம், உணவுப்பொருள், இடது கண், இடமாற்றம், கற்பனை, பால், நதி, கள்ளக் காதல், வீட்டின் இடப்புற ஜன்னல், துர்நடத்தை, குளிர்ச்சி, தாய்மாமன் மனைவி, சோதிடம், அரிசி வியாபாரம், பழ வியாபாரம், கவிதை, ஓவியம், நீர் தொடர்பான தொழில், பார்வதி.

**செவ்வாய்:** சகோதரன், கணவன், பழி வாங்குதல், மனவலிமை, காவல்துறை, இராணுவம், வெட்டுக் காயம், வீரம், பூமி, குருதி, பல், முருகன், எதிரிகள், கூர் மையான ஆயுதம், திருமணம், விவசாயம், அடுப்பு, மின் கருவி, பாறை, வீட்டு உத்திரம், தீயணைப்புத் துறை, செங்கல் சூளை, தாதுப் பொருள்கள், பொறி யியல் துறை, சுரங்கத்துறை, அறுவை சிகிச்சை.

(தொடரும்)

# பெண்ணைப் பற்றிய உண்மைகள்



அன்பு, அறிவு, ஆற்றல் இவையனைத்தையும் ஒருங் கிணைத்து தன்னுள் அடக்கி இந்த அகிலத்தையே ஆட்டிப் படைக்கின்ற மாபெரும் சக்தியே பெண்கள். கடவுள் பெண்ணைப் படைத்துக் கொண்டிருந்தார். ஒரு வார காலம் ஆகியும் படைத்து முடிக்கவில்லை. வானத்தில் இருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு தேவதை கடவுளிடம் கேட்டது. ஒரு பெண்ணைப் படைக்க நீங்கள் ஏன் இவ்வளவு நாள்கள் எடுத்துக் கொள்கிறீர்கள்?. அதற்கு கடவுள், நீ என்ன இவளை சாமானியப் படைப்பு என்று கருதி விட்டாயா? இவள் உடம்பில் நான் முன்னூறுக்கும் மாறுபட்ட பாகங்களைப் பொருத்த வேண்டும். வெறும் தண்ணீரைக் குடித்துக் கொண்டும், வீட்டில் எல்லோரும் சாப்பிட்ட பின் மிச்சம் மீதியை சாப்பிட்டுக் கொண்டும் உயிர் வாழ்பவளாக இருக்க வேண்டும். ஒரே சமயத்தில் மூன்று நான்கு குழந்தைகளை மடியில் தவழ விட்டுக் கொள்பவளாக இருக்க வேண்டும். அவளின் ஒரே ஒரு பாச முத்தத்தினால் குழந்தை களின் அழுகை, ஆத்திரம், ஆங்காரம், கோபம், பிடிவாதம் போன்று எல்லா விதமான உணர்வு களுக்கும் வடிகாலாக இருக்க வேண்டும். ஆனால் இவை அத்தனையையும் செய்வதற்கு அவளுக்கு இரண்டே இரண்டு கைகள் மட்டும் தான் இருக்க வேண்டும் என்றார். கடவுள் சொல்லிக் கொண்டே போக தேவதை ஆச்சரியத்தினால் விழியை விரித்துப் பார்த்தது. உடனே கடவுள் சொன்னார், என்ன இதற்கே மலைத்து விட்டாயா? இன்னும் கேள் இவளைப் பற்றி என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார். அவள் ஒரு நாளுக்கு 18 மணி நேரம் கூட தொடர்ந்து உழைப்பாள். இவள் பார்வைக்கு மிருதுவானவள். ஆனால் மனதளவில் வலிமையானவள். இவளது எதையும் தாங்கும் சக்தியை உன்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது.சிந்திக்கும் ஆற் றல், எல்லா விடயங்களையும் தீர அலசி பார்க்கும் தன்மை, அவற்றுக்காக, தேவைப்படும்போது வாதிட்டு வெற்றி பெறும் திறனையும் கொண்டவள். இதற்குள் தேவதை கடவுள் படைத்துக் கொண்டிருந்த பெண் உருவத்தின் கன்னத்தில் வழிந்த ஈரத்தைக் கவனித் தது. தொட்டுப் பார்த்து விட்டு பதறியது. கடவுளே, இங்கு பாருங்கள் ஈரக் கசிவு, மெது வாகப் படை யுங்கள். கடவுள் சிரித்துக் கொண்டே தொடர்ந் தார். அது ஈரக் கசிவு இல்லை தேவ தையே, அது தான் பெண் ணின் கண்ணீர்த் துளி. அந்தக் கண்ணீர்த் துளி தான் அவளது ஒட்டு மொத்த உணர்ச்சிகளின் வெளிப்பாடு. அவளது சுகம், துக்கம், ஏக்கம், ஏமாற்றம், தனிமை, துயரம், அன்பு, பெருமை அத்தனையையும் அந்த கண்ணீர்த் துளிதான் வெளிப்படுத்துகிறது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த தேவதைக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். கட்வுள் மேலும் தொடர்ந்தார். பெண்ணால் மட் டும் தான் அழ வேண்டிய நேரத்தில் கூட அழகாய் சிரிக்கவும் பாடவும் முடியும். அவளால் மட்டுமே நெருக் கடியான பரபரப்பான சூழ்நிலையிலும் சிரிக்க முடியும். அவளால் மட்டுமே சந்தோஷம் பொங்கும் வேளையில் கண்ணீர் சிந்த முடியும். அவளால் மட்டுமே மற்றவர்கள் சாப்பிடுவதற்காக தான் பட்டினி கிடக்க முடியும். அவளால் மட்டுமே ஒரு சின்ன அணைப்பு, ஒரு குட்டி முத்தம் கொடுத்து ரணமாகிய உள் ளங்களுக்கு மருந்திட முடியும். அவளால் மட்டுமே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரது சுகதுக்கங்களிலும் பங்கு கொண்டு சந்தோசத்தை இரட்டிப்பாக்கி, துயரங் களைப் பாதியாக்க முடியும். தனது குழந்தைகளின் சாத னைகளுக்கு ஆனந்தக் கண்ணீர் வடித்து மேலும் ஊக்கப்படுத்த முடியும். ஐயோ,என்னால் இந்த இழப்பைத் தாங்க முடியவில்லையே என்று உடைந்து கொண்டிருக்கும் போதே, தன்னைத் திடப்படுத்திக் கொண்டு அவளால் வாழ்க்கையை எதிர்நோக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்டைக்காரன்



செங்காடு என்ற மலைப் பகுதியில் வீரா என்ற ஒரு கழுதைப்புலி வசித்து வந்தது. காட்டு ஆண் விலங்கு கூட்டத்திலே,தான் அதிவீரன் என்று தனது மனைவி ராணியிடம் எப்பொழுதும் அது கூறும். விலங்குகள் வேட்டைக்குச் சென்று திரும்பும் போது எல்லாம், தனது மனைவியிடம் வீரா "அனைத்து வேட்டை விலங்குகள் மத்தியில், நான் தான் துணிச்சலாகச் செயற்பட்ட ஒரேயொரு வேட்டை விலங்கு" என்றும் கூறும். அன்றும் அப்படித்தான், "இன்று என்ன நடந்தது தெரியுமா? நான் தனி ஒருவனாக நின்று விரட்டி, விரட்டி சிறுத்தைப் புலியையும், யானையையும் ஓடவைத்தேன் என்றது. மற்ற விலங்குகள் எல்லாம் தொடை நடுங்கிகளாக இருக்கின்றன" என்று பெருமை பேசியது. "நான் எனது முன்னங்கால்களை வேகமாகத் தூக்கி முன்னோக்கிக் கொண்டு சென்றபோது சிங்கம் கூட எனது வேகத்தைப் பார்த்து பயந்து ஓடிவிட்டது, நான் வேட்டை விலங்குகளில் மிகச் துணிச்சலான வேட்டைக்காரன்" என்றது. அதைக்கேட்ட அவனது மனைவி ராணி "அப்படியா? ஏனைய ஆண் விலங்குகள் யாரும் இன்று வீட்டுக்கு வேட்டையாடி இறைச்சி எடுத்துக்கொண்டு செல்லவில்லை என்று சொல்லுங்கள்" என்றது. "அது எப்படி அப்படியே விட முடியும். நான் வேட்டையாடியதில் நமது குடும்பத்துக்குப் போக மீதி இறைச்சியை மற்ற விலங்குகளுக்கு பிரித்துக் கொடுத்து விட்டேன். பாவம் கூட்டத்தோடு, குட்டிகளோடு சாப்பிட்டு மகிழ்ச்சியாக வாழட்டும்" என்றது பெருந் தன்மையுடன். ஒரு நாள் பக்கத்துக் காட்டு விலங்குகளுடன் பகை உண்டானது. காட்டில் உள்ள அனைத்து ஆண் விலங்கு களுடனும் பகைவர்களை விரட்டிக் கொண்டு காட்டுக்குள் சென்றது வீரா. மாலை களைப்பாக வீடு திரும்பிய உடன், "நான் தனி ஆளாக நின்று எதிரிகளை விரட்டி ஓட வைத்தேன், மற்ற விலங்குகள் எல்லாம் சும்மாவே நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தன. எனவே காடு முழுவதும் எனது புகழ் பரவி இருக்கும். என்னுடைய ஆவேசத்தைப் பார்த்துக் காடே நடுங்கி விட்டது. நான் வீரர்களில் துணிச்சலான மாவீரன், இதைப் பற்றி என்ன நினைக்கும் ராணி' என்றது? என்ன? என்னை போய் கேட்கிறீர்கள்; காடே உங்களது புகழ் பரவி இருக்கிறது என்று சொல்கிறீர்கள் நான் சொல்ல என்ன இருக்கிறது என்றது ராணி பெருமையாக. தனது கணவன் வீரா செய்த வீர சாகசங்களை நினைத்து பெருமிதம் கொண்டது ராணி. ஒரு நாள் பக்கத்துக் காட்டில் உள்ள ஓடையில் சுவை மிக்க புதிய வகை மீன் குஞ்சுகள் இருக்கின்றன என்று கேள்விப்பட்டது சாமா என்ற பெண் கழுதைப்புலி. இதைக் கேட்டதும் தங்களது குட்டிகளை அங்கு கூட்டிச் செல்ல விருப்பப்பட்டது. அனைத்துப் பெண் கழுதைப்புலிகளும். ஆண் கழுதைப் புலிகள் எல்லாம் புதிய உறைவிடம் தேடிச் சென்றிருந்தமையால் அவற்றைத் தொந்தரவு செய்ய விரும்பாத சாமா கழுதைப்புலி ஒரு முடிவு செய்தது. அதன்படி "யாராவது ஒரே ஒரு வீர ஆண் புலி மட்டும் நம்முடன் வரட்டும், காவலுக்கு அழைத்துச் செல்வோம்" என்று ஆலோசனை கூறியது சாமா. உடனே ராணி முன் வந்து "அப்படி என்றால் ஆண் கூட்டத்திலேயே மிகப்பெரிய வீரன் எனது கணவன் வீரா தான். அவரையே காவலுக்கு அழைத்துச் செல்வோம்" என்று கூறியது. மற்ற பெண் கழுதைப்புலிகள் இதை ஒத்துக் கொள்ளவே. ராணி வீராவிடம் சென்று இதைக் கூறியது. "ஆமாம் தேவைப்படும் போது மட்டும் இந்த வீராவின் வீரம் உங்களுக்கு ஞாபகம் வந்துவிட்டது. மற்ற நாள்களில் என்னையும் எனது வீரத்தையும் இந்தக் காடு மறந்து விடுகிறது"- என்று அலுத்துக் கொண்டே கிளம்பியது. வீராவின் துணையுடன் பக்கத்துக் காட்டுக்குச் சென்றன பெண் கழுதைப் புலிகள் கூட்டம். பெண் கழுதைப் புலி கூட்டம் நடுவே வீரா மட்டும் தனியே வருவதைக் கண்ட பக்கத்துக் காட்டு சிங்கக் கூட்டம், கழுதைப்புலி கூட்டத்தை சுற்றி வளைத்தது. பகைவர்கள் சுற்றி வளைத் ததைக் கண்ட வீரா, பெண்கள் கூட்டத்தை நோக்கி விரைவாக மரங்களுக்குப் பின் சென்று மறைந்து கொள்ளுமாறு கட்டளையிட்டது. தானும் ஒரு மரத்துக்குப் பின் சென்று மறைந்து கொள்ள முயன்றது. இதைக் கண்ட சிங்கக் கூட்டம் நகைத்தது. பெண் கழுதைப் புலிகளுக்கும் சிரிப்பையும் ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. சிங்க ராஜா கழுதைப் புலி கூட்டத்தில் இருந்து ஒரு பெண் கழுதைப்புலியை நோக்கி "உனது பெயர் என்ன?" என்று வினவியது. அது வீராவின் மனைவி கழுதைப்புலி. எனவே, தனது பெயரைக் கூறியது. "அப்படியா? எங்களது கூட்டத்திலும் பெண்களுக்கு ராணி என்று பெயர் வைப்பது உண்டு. எனவே எங்களது இனப் பெண்களின் பெயரை வைத்துள்ள உன்னைக்கொல்லஎனக்குமனம்வரவில்லை, தப்பித்துப் போய்விடு" என்று கூறியது. இதைக் கேட்ட ஏனைய பெண் கழுதைப் புலிகளும் தங்களது பெயர் ராணி என்று கூறித் தப்பித்துக் கொண்டன. ராஜாசிங்கத்துக்கு ஒரே வியப்பு,"எங்களது காட்டில் ஒவ்வொரு பெண் விலங்குகளுக்கும் வேறு வேறு பெயர் வைப்பது வழக்கம். ஆனால், உங்களது காட்டில் உள்ள அனைத்து பெண் விலங்குகளுக்கும் ராணி என்ற ஒரே பெயரையே வைத்துள்ளனர்"என்றது வியப்பாக. கடைசியாக வீராவை நோக்கி "உனது பெயர் என்ன?" என்றது சிங்க ராஜா. "எனது பெயரும் ராணி தான்" என்றது வீரா. இதைக் கேட்ட சிங்க ராஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது. "பெண்கள் அனைவருக்கும் தான் ராணி என்று பெயர் வைத்துள்ளனர், ஆண்களுக்குமா?" என்றது கோபமாக. உடனே வீரா "நான் ஆண் கழுதைப் புலி இல்லை. நான் பார்க்கத் தான் ஆண்போல்தோற்றம் அளிக்கிறேன். ஆனால் உண்மையில் பெண்" என்றது. இதைக் கேட்ட அதனது மனைவி ஓடி வந்து, "இல்லை சிங்க ராஜா உண்மையில் இவர் தான் எனது கணவர். காடெல்லாம் புகழ் பரவிய வீரர்களில் துணிச்சலான மாவீரன் வீரா" என்றது. உடனே சிங்கராஜாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது. உயிர் பயத்தில் உளறிய வீராவை நோக்கி "உன்னைக் கொன்றால் எனக்கு இழுக்கு, ஓடிப் போ" என்று விரட்டி விட்டது.

அன்று முதல் காடு வந்த வீரா தன்னை வீரன், மாவீரன் என்று சொல்வதில்லை. குகையில் இருந்து வெளிப்பட்டாலே மற்ற பெண் புலிகள் நகைத்தன. வெளியே தலை காட்ட முடியவில்லை. தனது மனைவி ராணியிடம் இனித் தான் வீரர்களில் துணிச்சலான மாவீரன் வீரா இல்லை, வேட்டை மிருகங்களில் துணிச்சலான வேட்டைக்காரன் இல்லை, சாதாரண ஒரு கழுதைப் புலிதான் என்று கூறியது வீரா.






# நாளைய உலகின் நாயகர்கள் நீங்கள்...

(கடந்த சனிக்கிழமை வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)

நாளை உலகின் நாயகர்கள் நீங்கள்... குறித்து முன்னைய பகுதியில் பார்த்தோம். அவை குறித்து இன்றைய பகுதியில் மேற்கொண்டும் பார்ப்போம்.

16. வெவ்வேறு திட்டங்களைத் தூக்கியெறிந்துவிட்டு ஒரே இலக்கைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். அதில் வரும் சிக்கல்களை ஆராய வேண்டும். அதை வரிசைப்படுத்தி ஒவ்வொன்றாகத் தீர்க்க முயல வேண்டும்.

17. ஒவ்வொரு நாளும் பல தடவை வெற்றி பெறுவேன் என்ற சிந்தனையைப் பல தடவைகள் சொல்ல வேண்டும்.

18. பிறர் நம்மை என்னவாக எண்ண வேண்டு மென நினைக்கிறோமோ அதை நாம் முதலில் எண்ண வேண்டும்.

19. வெற்றி என்பது தானாக வராது. மற்றவருக்கு உதவுவதாலும் வரும். வெற்றி என்பது கொடுப்பது, பின் அடைவது இது விளையாட்டல்ல நிஜம். வெற்றிபெறவைப் பவன் பின் தானும் வெற்றி பெறுவான். வாழ்க்கையில் வெற்றிபெற விரும்புகிறாயா முதலில் பாராட்டக் கற்றுக்கொள்.

20. பாராட்டுகின்ற பழக்கமுள்ளவன் ஒரு போதும் தோல்வியடையமாட்டான். அவனை மற்றவர்கள் தோளில் சுமந்து சென்று வெற்றி மேடையில் அமர வைப்பர்.

21. எண்ணங்களோடு உங்களை இணைத்துக் கொள்ளாதீர்கள். உணர்வுகளுக்கான நேரம் வரும், நேரம் போகும். எதிர்மறை எண்ணங்களோடு உங்களை இணைத் தால் அதற்கு அடிமையாவது நிச்சயம்.

22. உங்களைச் சுற்றிப்பாருங்கள். உலகம் முழுவதையும் புரிந்து கொள்ள வேண்டியதைப் புகட்டும். பல்கலைக்கழகம் சுற்றியிருப் பதை உணர்வீர்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஆழமான விடயம் ஒன்றைப் புரிய வைக்கிறது.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாத் தீர்மானத்தில் ஆபத்தான பல விடயங்கள்

## கூறுகிறார் மகிந்த

கொழும்பு, ஒக்.26
ஜெனிவா, ஐ. நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தில் மிக ஆபத்தான பல விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அபாராமயவில் மதத் தலைவர்களை சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன் போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை குறித்த தீர்மானத்தில் மூன்று பந்திகள் மிகவும் ஆபத்தான வையாக காணப்படுகின்றன.

தீர்மானத்தின் 6 ஆம் பந்தியில் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்க நீதிமன்ற பொறி முறை உருவாக்கப்படுவதற்கு அரசு இணங்கியுள்ளது. வெளிநாட்டு நீதிபதிகள் வழக்குரைஞர்களை இந்த நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைமையில் உள்வாங்குவது என இணங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒரு முறைமை அமைக்கப்பட்டால் தற்போதைய முறைமைக்கு புறம்பாக மற்றுமொரு குற்றவியல் விசாரணைப் பொறிமுறைமை இலங்கையில் உருவாக்கப்படும். தீர்மானத்தின் 4ஆம்பந்தியில்வெளிநாட்டுநிதியை பெற்றுக் கொண்டு விசாரணை நடத்துவதற்கு அரசு இணங்கியுள்ளது.

இதனடிப்படையில்இலங்கைத் தீர்மானத்திற்கு அனு சரணை வழங்கிய நாடுகளே நிதி உதவி வழங்கும்.வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டு புதிய நீதி விசாரணைப் பொறிமுறைமை எமது நாட்டு நீதிமன்றக் கட்டமைப்பை அவமரியாதை செய்வதாகவே கருதப் பட வேண்டும்.

ஐ. நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானம் குறித்து மக்களுக்கும் நாடாளுமன்றுக்கும் அறிவிக்காது இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. போர் வீரர்களை தண்டிக்கும் நோக்கில் நாட்டின் சட்டங்கள் மாற்றிய மைக்கப்படு கின்றது.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த போர் வீரர்களை தண்டிப்பதே அரசின் நோக்கமாக அமைந்துள்ளது- என்றார். (வ)

## சிறுவர்களின் பாதுகாப்புக்கு விசேட ஜனாதிபதி செயலணி



கொழும்பு, ஒக்.26
சிறுவர்களின் பாதுகாப்புக்காக விசேட ஜனாதிபதி செயலணி யொன்றை ஸ்தாபிக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று அத்தனகல்ல - ஊருபொல மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சிறார்களின் பாதுகாப்பு மற்றும் பொறுப்பு தொடர்பில் சமூகத்தில் பரவலாக விவாத நிலை தோன்றியுள்ளது. எனவே, அரசு, அதற்கான பங்களிப்பை வழங்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (வ)

## பருத்தித்துறையில் முதியவரின் சடலம் மீட்பு

மாங்குளம் ஒக். 26
பருத்தித்துறை கொட்டடிப்பிள்ளையார் கோவிலடியில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த கந்தையா சின்னராசா (வயது -65) என்பவரின் சடலமே நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளது. இவர் மட்டுவிலிலிருந்துதனது உறவினர்களைபிரிந்து பருத்தித்துறை, கொட்டடிப் பிள்ளையார் கோவிலடியில் வசித்து வந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (கு-422)

## மட்டு. இந்து ஆலயங்கள் இரண்டின் மீது தாக்குதல்



மட்டக்களப்பு, ஒக். 26
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள் இரண்டு கடந்த வெள்ளிக்கிழமை சேதமாக்கப் பட்டுள்ளன. இதன்போது ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த வழிபாட்டு விக்கிரகங்களும் உடைமைகளும் வீதியில் வீசப்பட்டுள்ளன.

மட்டக்களப்புக்கு தெற்கேயுள்ள குருக்கள்மடம் கிருஷ்ணன் கோயில் மற்றும் மட்டக்களப்பு -பொலநறுவ வீதியிலுள்ள வாகனேரி இத்தியடி வழிப் பிள்ளையார் ஆலயம் ஆகிய வழிபாட்டுத் தலங்கள் மீதே இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

வாகனேரி இத்தியடி வழிப் பிள்ளையார் ஆலயம் சில மாதங்களுக்கு முன்பும்இதுபோன்றதாக்குதலுக்குள்ளானதாக உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளனர். குருக்கள்மடம் கிருஷ்ணன் கோயில் மீது தாக்குதல் நடத்திய நபர்களினால் ஆலயத்திலுள்ள நவக்கிரகங்கள் உட்பட 13 விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு வீதியில் வீசப்பட்டுள்ளன.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக ஆலய நிர்வாகங்களினால் பொலிஸில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து மோப்ப நாய்களின் உதவியுடனும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ள போதிலும் சந்தேக நபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

குறித்த ஆலயங்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் நேரில் சென்று பார்வையிட்டு சம்பவங்கள் தொடர்பாக ஆலய நிர்வாகங்களிடம் கேட்டறிந்து கொண்டனர்.

சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் கே. துரைராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், எந்தவொரு வழிபாட்டுத் தலமாக இருந்தாலும் இது போன்ற தாக்குதல்கள் கண்டிக்கத்தக்கது. இந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை பொலிஸார் அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்-என்றார். (வ-10)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக அங்கத்தவரான
**தேவசிகாமணி, உதயகுமாரி சோமசீலன்**
ஆகியோரின் சிறிய தாயும் எமது கழக மகளிர்
அங்கத்தவருமான

**செல்வி சரஸ்வதி கந்தசாமி**

(ஓய்வுபெற்ற உப அதிபர், பெரியபுலம் மகாவித்தியாலயம்) அவர்கள் 25.10.2015 அன்று காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்
வளர்மதி நிறை வாழ்வகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்

பிறப்பு 07.01.1932 இறப்பு 26.10.1999

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு இன்று (26.10.2015) திங்கட்கிழமை சிறிபாஸ்கரன் ஞாபகார்த்த மண்டபத்தில் (R.D.S.மண்டபம்)பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

திருமதி பாலாம்பிகை சிறிபாஸ்கரன் (மனைவி)

## மரண அறிவித்தல்கள்

### தம்பாப்பிள்ளை சின்னையா



நெடுங்கேணி நாவலர் வீதியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை சின்னையா அவர்கள் 25.10.2015 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசம்பு-யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சசிகரன் (ஜேர்மனி), சசிகுமார், சசிவரதன் (சிற்றி மல்ரி சென்ரர்), சசீந்திரன் (தபாலக ஊழியர்), சகீதா (அபி கொமினிக்கேசன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தமலர், வசந்தா, குகப்பிரியா , சுலோசனா, தெய்வேந்திரன் (அப்பன்) ஆகியோரின் அன்பு மாமனும், அபிஷன், சபிஷன், பவிசன், அறிவு, அருண்கதிர், திரிஷிகா, வபிசன், அபினுகா, அபிசாந், அபிநாத் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2015) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெடுங்கேணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் தட்சணாமூர்த்தி



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் 46, குமாரசாமி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தட்சணா மூர்த்தி (இறைவரி திணைக்கள வரிமதிப்பீட்டாளர், யாழ் பல்கலைக் கழக பகுதி நேர விரிவுரையாளர்) அவர்கள் நேற்று (25.10.2015) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் சந்திர லீலாவின் கணவரும், காலஞ்சென்ற நீலாய தாட்சி, மற்றும் சாம்பசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கண்ணன், மைதிலி, தாரணி, ரூபன், ஆகியோரின் அன்புத் தந்தையும் சுபேந்திரன், சுவேனி, கிரிஸ்சாந் ஆகியோரின் மாமனாரும், சுமித்தா, கோகுல், யதுல், யுவால், ஈஸ்வரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னரின் பூதவுடல் இன்று (26.10.2015) திங்கட்கிழமை யாழ் பிரதான வீதியில் உள்ள வைற் கவுஸில் காலை 9.00 மணிமுதல் 9.30 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அன்னாரின் விருப்பத்திற்கேற்ப யாழ் மருத்துவ பீடத்திற்கு கையளிக்கப்படும்.

தகவல் : குடும்பத்தினர்

### செல்வி சரஸ்வதி கந்தசாமி



(முன்னாள் கணித ஆசிரியை, ஓய்வுபெற்ற உப அதிபர்- யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயம் )

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் சம்பியன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற பிரதி அதிபர் செல்வி சரஸ்வதி கந்தசாமி நேற்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் கந்தசாமி-இரத்தினபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், திருமதி ருக்மணிஅம்மாளின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவஞானராஜா சிங்கராயரின் (முன்னாள் உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) அன்பு மைத்துனியும், தேவசிகா மணி (பொறியியலாளர், சிங்கப்பூர்), உதயகுமாரி சோமசீலன் (கனடா), காலஞ்சென்ற கோகிலா சிவநாதன் ஆகியோரின் சிறிய தாயும், கேசினி சோமசிலனின் பேர்த்தியும், திருமதி அனுசியா தேவசிகாமணி, சோமசீலன், சிவநாதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2015) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தனிகை"
சம்பியன் ஒழுங்கை,
கோக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
சி. தேவசிகாமணி (பெறாமகன்)
077 6271529, 021 2215321

# கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்று கொழும்பில் சந்திப்பு

கொழும்பு, ஒக்.26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒன்றுகூடல் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஜெனிவா தீர்மானம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவ ஆக்கிரமிப்பின் கீழுள்ள காணிகளை விடுவித்தல், மீள் குடியேற்றம், வடக்கு–கிழக்குப்பிரதேசங்களில்இராணுவப்பிரசன்னத்தைக் குறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப் பட்டுள்ளது.

அத்துடன்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஒரு ஒழுங்காக கட்டமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு வடிவத்தை எடுப்பதற்கு இடையூறாக உள்ள விடயங்கள் தொடர்பாகவும் பேசப்பட்டது. இது தொடர்பாக ஆக்கபூர்வ மான முடிவொன்றை எடுப்பதையிட்டு கலந்துரையாடுவதெனவும், தமிழரசுக் கட்சியிடம் கூட்டமைப்பின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாப்பு குறித்த தமிழரசுக் கட்சியின் யோசனைகள் தொடர்பாகவும் எதிர்வரும் 29ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூடி பேசுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி மாநாட்டின்போது ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக கட்சிகள் சமர்ப்பிக்கவுள்ள யோசனைகள் தொடர்பாககூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் கட்சிகள் தனித்தனியே தமது யோசனைகளை சமர்ப்பிப்பதெனவும் அதற்கு முன்னதாக அவ்யோசனைகளை 29ம் திகதி நடைபெறவுள்ள கூட்டமைப்பின் தலைவர்களின் சந்திப்பில் முன்வைத்து அது தொடர்பாக ஆராய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது என கூட்டமைப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# இலவச சிமெந்துப் பக்கெற்றுக்கள் யாழ்ப்பாணத்திலும் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக், 26

நாடளாவிய ரீதியில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் திட்டத்தில், பூரணப்படுத்தப்படாத வீடுகளுக்காக வழங்கப்படும் பத்து சீமெந்துப் பக்கெற்றுக்கள் வழங்கும் திட்டத்தில் யாழ்ப்பாணத்திலும் 1000 வீடுகள் உள்வாங்கப்படவுள்ளன.

இது தொடர்பில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் எம்.ரவீந்திரன் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணத்திலும் பூச்சு வேலைகள் முடிக்கப்படாத வீடுகளின் உரிமையாளர்கள் 1000 பேருக்கு இலவசமாக 10 சீமெந்துப் பக்கெற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகள் தெரிவிற்கான விண்ணப்பப்படிவங்கள் அந்தந்த கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக குடும்பங்களை தெரிவு செய்யும் பணிகள் மாவட்ட செயலகத்தினால் நடத்தப்பட்டு தகவல்கள் தற்போது வீடமைப்பு அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

குறித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பயனாளிகளின் வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்திய பின்னர் சீமெந்துப் பக்கெற்றுக்கள் வழங்கப்படும். இந்தப் பணிகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் நடைபெறும். அதன் பின்னர் நவம்பர் முதல் வாரத்தில் சீமெந்துப் பக்கெற்றுக்கள் வழங்கப்படும்– என்றார். (வ–10)

# பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## சிவில் அமைப்புகள் அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.26

இராணுவத்துக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ள பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும் அதனடிப்படையில்உண்மைகளைக் கண்டறியுமாறும் சிவில் அமைப்புகள் அரசிடம் வலியுறுத்தியுள்ளன.

பரணகம ஆணைக்குழுவின் பரிந்துரைகளைமூன்றுமாதங்களுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங் கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மற்றும் ஐ.நாவுக்கும், சர்வதேசத்துக்கும் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்கலாநிதிபிரதீபாமஹானாம ஹேவா மற்றும் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோரேஇவ்வாறுவலியுறுத்தியுள்ளனர்.

அரசால் வெளியிடப்பட்டுள்ள பரணகமமற்றும்உடலகமஆணைக்குழுக்களின்அறிக்கைகள்தொடர்பில் வினவியபோதே அவர்கள் மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்டனர்.

காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட மக்ஸ்வல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு, 178 பக்கங்களைக்கொண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது. போரில், அரசபடைகளுக்குஎதிராக சுமத்தப்பட்டுள்ள நம்பகமான குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அரசபடையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள்உண்மையானவையே என்றும், அவைகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்என்றும் இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சனல் 4 வெளியிட்ட போர்தவிர்ப்பு வலயம், இலங்கையின் கொலைக் களங்கள் என்ற ஆவணப்படம் மற்றும் வெள்ளைக்கொடி விவகாரம் என்பன தொடர்பிலும் விசாரணை நடத்தவேண்டும் என்றும் ஆணைக் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் ஆளும் மற்றும் எதிர்க் கட்சியினர் பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருந்தனர். பலர் அறிக்கையை வரவேற்றதுடன், சிலர் எதிர்ப்பையும் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், இது தொடர்பில் இலங்கைமனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹானாம ஹேவாவிடம் வினவியபோது,

பரணகம ஆணைக்குழு இரு தரப்புகள் தொடர்பிலும் சமநிலையுடன் தகவல்களை வெளியிட்டுள்ளது. இதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த ஆணைக் குழுவானது இருதரப்புகளிலும் குற்றவாளிகளை இனங்கண்டுள்ளது. எனவே, இவர்களுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நடவடிக்கைகளை முன் கொண்டு செல்ல முடியும்.

பரணகம ஆணைக்குழுவின் அறிக்கையை மூன்று மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும். அதாவது, நவம்பர் முதல் பெப்ரவரி ஆகிய மாதங்களுக்குள்ளாகும். உள்ளகப் பொறிமுறையாக இதை நாம் செயற்படுத்த முடியும். இதனூடாக ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் எமக்குத் தொடர்ந்தும் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும்– என்றார்.

இதேவேளை, இது தொடர்பில் மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவிடம் வினவியபோது,

பரணகம ஆணைக்குழு அறிக்கை முன்வைக்கப்பட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது. விசேடமாகபரணகம ஆணைக்குழுவானது இலங்கைக்கு எதிரான போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து அதிகளவில் குறிப்பிட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. அந்தக் குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மை குறித்து அதற்கு உறுதி வழங்கமுடியாது.

இருப்பினும், பார்வைக்கு உண்மையொன்று இருப்பதாகக் குறிப்பிடுகின்றது. அவ்வாறாயின் அது குறித்து விசாரணை நடத்தவேண்டும். விசாரணையொன்று அவசியம் என அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த விசாரணைகளில் சில சந்தர்ப்பங்களில் சர்வதேசத்தின் பங்களிப்பு கட்டாயமானதாகவுள்ளது. இல்லாவிட்டால் செய்ய முடியாது. இதற்கமைய சர்வதேசத்தின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பரணகம ஆணைக்குழு பரிந்துரைகளை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அடுத்ததாக, சர்வதேச மட்டத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பவற்றை நிறைவேற்றும் பொறுப்புஎமக்குள்ளது. வெளிவிவகாரஅமைச்சர்வழங்கியவாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் – என்றார். (வ–சி)


**விற்பனைக்கு**

அத்திவார கண்டக்கல் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு : 077 375 4040

**விற்பனைக்கு**

கடைப்பாவனைக்குரிய முதிரை மரத்திலான (L) வடிவிலான கவுண்டர் மேசை விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6184616

**சிறுநீரகம் தேவை**

சிறுநீரக நோயாளி ஒருவருக்கு O+ இரத்தவகையைச் சேர்ந்த 40 வயதுக்குட்பட்டவர்களின் சிறுநீரகம் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(65572)(13.10) தொடர்பு: 071 828 8017

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

திகதி 2015-10-25 | வெற்றி வாரம் 1894 | ஊதா

வெற்றி இலக்கங்கள் 03 11 21 24

செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி ரூ.3,804,400/-

Galaxy Star

வெற்றி வாரம் 002 | திகதி 2015-10-25

10 08 18 20 21

அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ.2,200,240/-


# லசந்த கொலை குறித்து விசாரிக்கும் புலனாய்வு அதிகாரிக்கு அச்சுறுத்தல்

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ள குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரி பி.எஸ். திசேராவிற்கு சாவுஅச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த 21ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தான் சென்று கொண்டிருக்கையில் தன்னை தொலைபேசியில் தொடர்புகொண்ட நபர் ஒருவர் லசந்தவின் சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள முயல்கின்றாயா என சிங்கள மொழியில் கேட்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டதாக திசேரா தெரிவித்துள்ளார்.


முதலில் தான் அந்த அச்சுறுத்தலை அலட் சியம் செய்தபோதிலும் பின்னர் அந்த அழைப்பை மேற்கொண்டது யார் என விசாரிக்க முற்பட்டதாகவும், அதன்பின்னர்தான்குறிப்பிட்டதொலைபேசி சேவை வழங்குநர் ஊடாக தனக்கு அச்சுறுத்தல் விடுத்தவர் தொடர்பான விவரங்களை பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

என்னிடம் தற்போது சிலமுக்கிய தகவல்கள் உள்ளன. இது எனது விசாரணை களிற்கு உதவியாக அமையும் எனவும் திசேரா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இதுவரையில் லசந்த படுகொலை குறித்த உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை எனவும், அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (வ)

# யோசித குறித்த விசாரணை அறிக்கையை மூடி மறைக்கிறது பாதுகாப்பு அமைச்சு

## கொழும்பு ஊடகம் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது மகனான, கடற்படை அதிகாரி லெப். யோசிதராஜபக்ச, தொடர்பான விசாரணை அறிக்கையை பாதுகாப்பு அமைச்சு மூடிமறைப்பதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

கடற்படையில் இருந்தபோது, லெப்.யோசித ராஜபக்ச, கடற்படையின் விதிமுறைகளை மீறியதாக குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.


மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது, அவரது பாதுகாப்பு அதிகாரியாக யோசித ராஜபக்ச பணியாற்றியிருந்தார். இதுதொடர்பாக கடற்படையின், ரியர் அட்மிரல் வெட்ட வா தலைமையிலான குழு விசாரணைகளை நடத்தி, அது தொடர்பான அறிக்கையை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்திருந்தது. எனினும், இந்த அறிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. யோசித ராஜபக்ச தொடர்பான விசாரணை அறிக்கை பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளதை, கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் இந்திகடிசில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கருத்தை அறிய, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சியை தொடர்பு கொண்ட போது, தாம் வெளிநாடு செல்லவுள்ளதாகவும், நாடு திரும்பியதும் இது குறித்துப் பதிலளிப்பதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகத்திடம் தெரிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைக் கொடி சம்பவம் மகிந்த அரசின் பெரும் தவறு

***மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளர் தெரிவிப்பு***



கொழும்பு, ஒக்.26

வெள்ளைக் கொடி சம்பவமானது, கடந்த அரசு இழைத்த வரலாற்றுத் தவறாகும் என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

சரணடைவதற்காக வெள்ளைக் கொடி ஏந்தி வந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களை மகிந்த அரசு சுட்டுக் கொலை செய்திருக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் பிரட் அடம்ஸ் கூறியுள்ளதாவது:-

வெள்ளைக் கொடி சம்பவம் இடம் பெற்றிருக்காவிட்டால் போர்க்குற்ற விடயங்களில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். போர்க் குற்ற விசாரணைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் உட்படுத்தப் பட்டிருப்பர்.

தமிழீழ விடுதலைப் புலித் தலைமைகளுக்கு எதிராக விசாரணை நடத்தப்ப டுவதனையே நாம் விரும்புகின்றோம். விசாரண கைள் நடத்தப்பட்டிருந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பல செயற்பாடுகளை வெளிக் கொண்டு வந்திருக்க முடியும்.

மாறாக அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை கொலை செய்ய எடுத்த தீர் மானம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஒட்டு மொத்த நாட்டையும் விசாரணைக்கு உட்படுத்த முடியாது. போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் ஒவ்வொரு படைச் சிப்பாய்க்கு எதிராகவும் வழக்குத் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட முடியாது.

அவ்வாறு விசாரணை நடத்தினால், அந்த விசாரணைகள் முடிவுக்குக் கொண்டு வரப்படாது. பக்கச்சார்பாக செயற்படவில்லை. புலிகளுக்கு எதிராக கருத்து வெளியிட்டமை குறித்து புலம்பெயர் தமிழர்கள் எம்மை அச்சுறுத்தினர். எம்மை திட்டினார் கள். அதேபோன்று அரசுத்தரப்பும் எம்மை திட்டியது. எம்மை விமர்சனம் செய்தது.

இலங்கைக்கு எதிரான ஐ. நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திற்கு ஆதரவளிக்குமாறு முன்னாள் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக் கோரினார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# ஜே.வி.பியின் குற்றச்சாட்டை மறுக்கிறார் வீரவன்ச எம்.பி.

கொழும்பு, ஒக்.26

டுபாயில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் பேணப்பட்டு வரும்வங்கிக்கணக்குகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

இது தொடர்பில் தூது சொல்வதற்காக, டுபாய்க்கு செல்ல முயன்றதாக கூறப்படும் குற்றச்சாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மறுத்துள்ளார்.

இரண்டு கடவுச்சீட்டுக்களை கொண்டிருந்த குற்றச்சாட்டின் பேரில் வீரவன்ச, கடந்த வாரம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

பின்னர் நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். எனினும் தம்மைப்பற்றி பொய்யான குற்றச் சாட்டுக்களை ஜே.வி.பியினரே பரப்புவதாக வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.


ஜே.வி.பியின் தலைமைத்துவம் குட்டையை குழப்பிவிட்டு அதில் மீன்பிடிக்க முனைகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜே.வி.பியினால் நடத்தப்படும் இணையத் தளம் ஒன்றில் வீரவன்ச, இத்தாலி சென்று அங்கிருந்து டுபாய்க்கு செல்ல முனைந்ததாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் டுபாயின் வங்கியில் வைத்திருப்பதாக கூறப்படும் 500 மில்லியன் டொலர்கள் தொடர்பில் தூது ஒன்றை அவர் எடுத்துச்சென்றதாகவும் ஜே.வி.பியின் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது. இந்த முயற்சியின் மூலம் தமது அரசியல் வாழ்க்கையை நாசப்படுத்த ஜே.வி.பி முனைவதாக வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார். (வ)

## மரண அறிவித்தல்

### ஜெயராஜா நீக்கலஸ் யோசேப்

(Justice Of Peace, Rtd.Asst.Director of Srilanka Customs)



பிரதான வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது ஜானகிலேன், பம்பலப்பிட்டியில் வசித்து வந்தவருமான ஜெயராஜா நீக்கலஸ்யோசேப் கடந்த (23.10.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி றெஜினா லில்லிமலர் (Western Music Teacher) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து நீக்கலஸ் - றெட்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி அரியமலர் அந்தோனிப்பிள்ளை (அவுஸ்திரேலியா), நீக்கலஸ் ராஜநாயகம்(அவுஸ்திரேலியா), திருமதி ராசமலர் பேடினன்ட் (கனடா) ஆகியோரின் பாசமிக்க சகோதரனும் காலஞ்சென்ற ஜேக்கமுத்து அந்தோனிப்பிள்ளை மற்றும் திருமதி நீற்றா ராஜநாயகம், அல்பிரட் பேடினன்ட்(துரை), காலஞ்சென்றவர்களான பக்ஸ் வஸ்தியாம்பிள்ளை, பேரின்பம் வஸ்தியாம்பிள்ளை, திருமதி றோஸ்மலர் கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.10.2015 இல் 2.00Pm - 7.00Pm வரையிலும் 28.10.2015 10.00Am - 3.00Pm வரையிலும் A.Fறேமன்ட் மலர்ச்சாலை பொறளையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி ஆராதனையின் பின்பு களத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

26 1/1, Moor Road, Wellawatte.
011 250 5363/ 076 852 4354

தகவல்:
குடும்பத்தினர்.

# ஜனாதிபதி செயலகத்தில் பணிகளுக்கு நியமிக்கப்பட்டவர்கள் குறித்து சர்ச்சை

***கொழும்பு ஊடகம் தகவல்***

கொழும்பு, ஒக்.26

ஜனாதிபதி செயலகத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் தொடர்பில் சர்ச்சை நிலைமை ஏற்பட்டுள்ளதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உரிய பின்னணிகளை ஆராய்ந்து பரிசீலனை செய்யாமலும் புலனாய்வு அறிக்கைகளை கோராமலும் ஜனாதிபதி செயலகத்திற்கு பெருமளவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு மற்றும் அரச பாதுகாப்புப் பிரிவு ஆகியனவற்றுடன் தொடர்புடையவர்கள் ஒரு மாத தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டு பின்னர் அவர்களது பின்னணி பற்றி ஆராய்ந்தே ஜனாதிபதி செயலகத்திற்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

குடும்ப பின்னணி, இருப்பிட விவரங்கள், யாருடன் தொடர்பு பட்டிருக்கின்றார்கள் போன்ற பல்வேறு விவரங்கள் திரட்டப்பட்டு ஆராய்ந்ததன் பின்னரே நியமனங்கள் வழங்கப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கு இடமானவர்கள் சிலர் ஜனாதிபதி செயலகத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை சமர்ப்பித்த போதிலும் அது பற்றி உரிய நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து மோடி இரட்டை வேடம்

**காங்கிரஸ் குற்றச்சாட்டு**



புதுடில்லி, ஒக்.26

இந்திய பிரதமர் நரேந்திர மோடி. இலங்கை தமிழர்களை கைவிட்டுவிட்டதாக இந்திய காங்கிரஸ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் மோடி இரட்டைக் கொள்கையை கடைப்பிடித்து போர்க்குற்ற விசாரணையின் தன்மையை பாழடித்து வருகிறார் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான வீ நாராயணசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னைய இந்திய அரசின் பிரதமராக இருந்த மன்மோகன்சிங், இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியே வந்தார்.

எனினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரியும் சர்வதேச விசாரணையை எதிர்க்கின்றனர். இந்தநிலையில் மோடி இலங்கைக்கு சென்று பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டார்.

எனினும் தமிழக கட்சிகளின் கருத்தாக உள்ள சர்வதேச விசாரணை தொடர்பில் அவர் இலங்கை அரசுக்கு இதன்போது உரிய அழுத்தங்களை கொடுக்கவில்லை. இந்தநிலையில் இரட்டைக் கொள்கையை கடைப்பிடித்து அவர், இலங்கையின் தமிழர்களை கைவிட்டுவிட்டதாக நாராயணசாமி குற்றம் சுமத்தியுள்ளார். (வ)

## மரண அறிவித்தல்

### ஆழ்வார் சிவஞானம்

*(உரிமையாளர் ஞானலட்சுமி ஸ்ரோர்ஸ் நெல்லியடி)*



கரவெட்டி மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வார் சிவஞானம் 25.10.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வார் தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் சங்கீத்தன் (மலேசியா) மணிமாறன், துவாரகன் ( NDES கட்டுநாயக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்லத்துரை, கந்தசாமி, இராசம்மா, காலஞ்சென்ற இராசதுரை ஆகியோரின் அன்பு சகோதரனும் கந்தசாமி (ARK Printing Solution யாழ்ப்பாணம்) புனிதவதி, சிவம் (சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை) சரஸ்வதி, சுப்பிரமணியம் (லண்டன்), கந்தசாமி (சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தசாமி, இரஞ்சநாதன், ஜெயராணி, செல்வமகாலட்சுமி (பொறுப்பதிகாரி கரவெட்டி பிரதேச சபை உடுப்பிட்டி அலுவலகம்) பாணு(லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.10.2015) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11 மணியளவில் கரவெட்டி சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தச்சன் தோப்பு வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல் : குடும்பத்தினர்
சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
நெல்லியடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா விசாரணை அறிக்கையிலிருந்து 48 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டது

## போர்க்குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என்கிறது அரசு

கொழும்பு, ஒக்.26
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையிலிருந்து போர்க்குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட 48 பேரின் பெயர்கள் நீக்கப்பட்டதாக, அரசு நேற்று தகவல் வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் நேற்று கஞத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்து வெளியிட்ட அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவிக்கையில்,
ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த மாதம் சமர்ப்பிக்கப்பட்டஇலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையில் போர்க்



குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்ட 48 பேரின் பெயர்களை அரசின் முயற்சியால் நீக்கப்பட்டது. இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தது.
இதற்கு புதிய அரசினால் சர்வதேசத்திடம் பெறப்பட்ட நம்பிக்கை தான் காரணம். எனவே தான் ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த விசாரணை அறிக்கையை ஆறு மாதங்கள் தாமதமாக வெளிக்கொண்டு வரப்பட்டது.
இதனால் போர்க் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது. எனவே அவர்கள் வெளிநாடுகளில் கைது செய்யப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்றத்தில் உடலகம, பரணகம ஆணைக்குழுக்களின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. இதன்போதும் எதிர்க்கட்சியினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்– என்றார். (வ)

# பரணகம அறிக்கை குறித்து விளக்கமளிக்க நடவடிக்கை

ஆணைக்குழு அறிவிப்பு
கொழும்பு, ஒக்.26
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் எழுந்துள்ள பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து பதில் வழங்குவதற்கு அந்த ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.
தபால் ஊடாகவோ அல்லது தொலைபேசி அழைப்பின் ஊடாகவோ ஆணைக்குழு தொடர்பான கேள்விகளை முன்வைக்க முடியும் என ஆணைக்குழுவின் செயலாளர் டப்ளியூ.எச் குணதாச தெரிவித்துள்ளார்.
மேலும் pcicpm @ slt. lk என்ற மின் அஞ்சல் வாயிலாகவும் வினாக்களை முன்வைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
பரணகம அறிக்கை எனப்படும் காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைமேற்கொள்ளும்ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்தசெவ்வாய்க்கிழமைநாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.
குறித்த அறிக்யை www. pcicpm.lk என்ற ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் எனவும் செயலாளர் டப்ளியூ.எச் குணதாச தெரிவித்துள்ளார். (வ)

# அரசியல் கைதிகள் விடுதலை குறித்து இன்று விசேட கூட்டம்

## ரணில் தலைமையில்

கொழும்பு, ஒக். 26
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரசிங்க தலைமையில் இன்று திங்கட்கிழமை அலரிமாளிகையில் விசேடகூட்டம்நடைபெறஉள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.
இந்தக்கூட்டத்தில்சிறைச்சாலைகள் அமைச்சர், சிறைச்சாலைகள் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளதாக அவர் கூறினார்.
தம்மைப் பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்யுமாறு சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அண்மையில் சாகும் வரையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இவர்களை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வந்தனர்.
இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடன் பேச்சு நடத்தி இருந்தார்.
தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பிலான விவகாரத்துக்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்குள் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா எழுத்து மூலம் வழங்கிய உறுதி மொழியை அடுத்து தமிழ் அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டிருந்தனர். இந்த நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரசிங்க தலைமையில் கடந்த வாரம் விசேட கூட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.
இந்தக் கூட்டத்தில் சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பெயர்கள் மற்றும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் ஆகிய விவரங்களை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபரிடம் பிரதமர் ரணில் விக்கிரசிங்க கோரியிருந்தார்.
இந்த நிலையிலேயே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் இன்று இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (வ)

# கைதாகும் இந்திய மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவர்

## மீன்பிடித்துறை அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.26
இலங்கை கடற்பரப்புக்குள் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால் மீன்பிடி படகு களும் வலைகளும் அரசு உடைமையாக்கப்படும் என இலங்கை மீன் பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
கிழக்கு மாகாணத்திற்கான 3 நாள் பயணமொன்றை மேற்கொண்டுள்ள அவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டு, உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.
அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:–
இந்திய மீனவர்களின் ஊடுருவல்களை தடுப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின்படி அப்பாவி மீனவர்களை தண்டிப்பதை விட படகுகளின் உரிமையாளர்களே தண்டிக்கப்படுவார்கள்.
இந்திய மீன்பிடி படகுகளின் உரிமையாளர்களில் பலரும் தமிழ்நாட்டு அரசியல் வாதிகள். மீனவர்களை மையப்படுத்தி அங்கு நடைபெறும் போராட்டங்களின் பின்னணியில் அவர்கள் தான் இருக்கின்றார்கள்.
இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பரப்புக்குள் ஊடுருவல் செய்வதால் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடி வலைகளும் உபகரணங்களும் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக வட மாகாண கடலில் இவர்களின் வருகை அதிகரித்து காணப்படுவதால் அந்த மாகாண மீனவர்களுக்கே பொருளாதார ரீதியாக பெரும் தாக்கம் ஏற்படுத்தியுள்ளார்கள். என்றார். (வ)

### அரசியல் கைதிகளுக்காக

அத்துடன் கிழக்கிலும் கைதிகளுக்காக நேற்று விசேட ஆராதனைகள் நடைபெற்றுள்ளன.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு பொதுமன்னிப்பில் தங்களை விடுதலை செய்யவேண்டும் எனக் கோரி, நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச் சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கடந்த 12ஆம் திகதி ஆரம்பித்திருந்தனர். இதனையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் உறுதியளித்திருந்தார்.
மேற்படி உறுதிமொழிக்கு அமைவாக நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் தமது விடுதலை விவகாரம் குறித்து நிரந்தரத் தீர்வு எட்டப்படா விட்டால் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் அரசியல் கைதிகள் எழுத்துமூலம் அறிவித்துள்ளனர் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (தி)

### இலங்கை

சமூகங்கள் தொடர்பிலும் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்படவேண்டும்.
பிரபாகரனின் இளைய புதல்வர் பாலச்சந்திரன் மற்றும் இசைப்பிரியா ஆகியோரின் மரணங்கள் தொடர்பில் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன–என்றார். (த-வ)

### 86 இந்திய

எழுதியுள்ளதாகவும் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.
இலங்கைச் சிறைகளில் இருக்கும் தமிழக மீனவர்களை விடுவிக்க வேண்டுமென இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

### ஆனந்தசங்கரியுடன்

விநாயகமூர்த்தி முரளிதரன் மேலும் தெரிவிக்கையில், தமிழர் விடுதலைக் கூட்டணி பாரம்பரியக் கட்சி. தமிழர்களின் தாய்க் கட்சி. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் 4 கட்டப் பேச்சுக்கள் இதுவரை நடத்தப்பட்டுள்ளன.
தமிழர் விடுதலைக் கூட்டணியான பாரம்பரியக் கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது. போர் காரணமாக அந்தக் கட்சியில் சில பிளவுகள் ஏற்பட்டிருந்தன. அதனால் கட்சியை மீளக்கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. சிங்களக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு நான் இனித் தயாரில்லை. அதனால் உள்ளூராட்சித் தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளோம் – என்றார் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன்.
இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக வீ.ஆனந்தசங்கரி செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

### அரசியல்

பயன்படுத்தினர், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள் செய்தனர் என்ற குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.
ஆனால் அந்த அறிக்கை குறிப்பிட்ட காலத்தை மாத்திரம் அடிப்படையாக கொண்டது. அதற்கு முற்பட்ட காலம் குறித்து என்ன கூறுவது. 1982–1983 முதல் விடுதலைப் புலிகள் பல குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு பொதுமக்களைக் கொலை செய்துள்ளனர். அது இவர்களுக்கும் பொருந்தும் –என்றார். (ற-வ)

### இலங்கைக்கு

வழமையான பயணம். பாகிஸ்தானின் ஜே.எவ். தண்டர் போர் விமானத்தைக் கொள்வனவு செய்யும் திட்டம் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கின்றனர்.
பாகிஸ்தானினதும், இந்தியாவினதும் இந்தப் போர் விமானங்கள் ஒரே மாதிரியான செயற்பாட்டுத் திறன்களைக் கொண்டவை. ஒரேமாதிரியான ஆயுதங்களைக் கொண்டு செல்லக் கூடியவை. நவீன ஸ்மார்ட் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளன. மேலும் வல்லரசுகளின் விமானங்களை விட விலை குறைவானவை.
இவற்றின் விலைகள் அதிகமாகயிருந்தாலும் மாறிவரும் புவிசார்அரசியல் சூழலைக் கருத்திற்கொண்டு இலங்கை தனது பழைய சுப்பர்சொனிக் விமானங்களுக்குப் பதில் புதிய நவீன விமானங்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது என இலங்கை விமானப் படை அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர்.
இலங்கைக்கு அதன் மட்டுப்படுத்தப்பட்ட விமானக் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக இவ்வாறான அதிநவீன விமானங்கள் அவசியமா என்பது குறித்துப் பாதுகாப்பு வட்டாரங்களில் சில கேள்விகள் காணப்பட்டாலும், புதிதாக உருவாகிவரும் பூகோள அரசியல் சூழ்நிலை காரணமாக இலங்கை பல வகையான ஆபத்துக்களை எதிர்கொள்ள தயாராக இருக்கவேண்டியது அவசியம் என்கின்றனர். அதனால் புதிய தலைமுறை விமானங்கள் இலங்கைக்கு அவசியம் என்பது அவர்கள் வாதம்.
பாகிஸ்தானின் விலை குறைவான ஜெட் விமானங்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை விமானப்படையினர் காட்டிய ஆர்வத்தை தொடர்ந்தே இந்தியா தனது விமானங்களை வழங்க முன்வந்துள்ளதாக விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.
பாகிஸ்தானின் விமானங்கள் ஏற்கனவே நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அதேவேளை இந்திய விமானங்கள் இன்னமும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவில்லை என்பதையும் அவை சுட்டிக்காட்டின.
பாதுகாப்பு அமைச்சின் மதிப்பீடுகளின்படி இந்தியாவின் டெஜாஸ் இறுதியில் வெற்றிபெறும் எனத் தெரியவருகின்றது.
இதேவேளை, முன்னாள் பாதுகாப்புத் துறை நிபுணர் ஒருவர் இலங்கை இவ்வளவு நவீன விமானத்தைக் கொள்வனவு செய்யவேண்டிய தேவை ஏன் எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இலங்கை ஓரளவு பாதுகாப்பான அயலில் உள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-வ)

### காணாமற்போனோர்

காணாமற்போனோர் தொடர்பில் 23 ஆயிரம் முறைப்பாடுகள் வரையில் கிடைக்கப் பெற்றிருந்தும் அவற்றில் 80 சதவீதமான முறைப்பாடுகளுக்கு விசாரணை நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### கடன்களை திருப்பி செலுத்தாத காரணத்தால்

கொழும்பு, ஒக்.26
தமது கடன்களைத்திருப்பிச்செலுத்தாத உள்ளூராட்சி சபைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உள்ளூராட்சி மற்றும் மா காண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.
தற்போது 18 உள்ளூராட்சி சபைகள் 659 மில்லியன் ரூபா கடனை அமைச்சுக்கு செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நிதி உள்ளூராட்சி சபைகள் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியிலிருந்து வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.
எனவே உள்ளூராட்சி சபைகளின் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பைசர் முஸ்தபா கூறியுள்ளார்.
இதேவேளை, கடன் தவணைப் பணம் செலுத்தத் தவறியமைக்கான விளக்கத்தைக் கேட்டு குறித்த உள்ளூராட்சி சபைகளுக்கு, முதலாவது கோரல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார். (ற-வ)

## இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தால் கடுமையான அபராதம்

### விரைவில் புதிய சட்டம் வருகிறது

கொழும்பு, ஒக்.26
இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடும் வெளிநாட்டு மீனவர்களுக்கு எதிராக, 150 மில்லியன் ரூபா வரையில் அபராதம் விதிக்கும் வகையிலான புதிய சட்டத்திருத்தம் விரைவில் கொண்டு வரப்படவுள்ளதாக கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் எல்.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கக் கூடிய வகையில் சட்டங்கள் இல்லை. சர்வதேசக்கடல் எல்லைக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடுதல் மற்றும் அனுமதிப்பத்திரமின்றி நடுக்கட லில் மீன்பிடியில் ஈடுபடும் இலங்கை மீனவர்களுக்கு அபராதம் விதிக்கும் புதிய திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி கிடைத் துள்ளது.
இதன்பிரகாரம்மீன்பிடிப்படகுகளின் வகைக்கு ஏற்ப ஒரு மில்லியன் ரூபாவிலிருந்து 150 மில்லியன் ரூபா வரையில் அபராதம் விதிக்கப்படும் என கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.
இதேவேளை, இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடியில் ஈடுபடுவதனைத் தடுப்பதற்கே, இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறும் வெளிநாட்டு மீனவர்களுக்கு 150 மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்கும் வகையிலான சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவுள்ளதாக கொழும்பு இராஜதந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ற-வ)

## இலங்கை நியமங்கள் சான்றிதழ் பெற்ற தலைக்கவசத்தையே அணிய முடியும்

### அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு வருகிறது



கொழும்பு, ஒக்.26
அடுத்த வருடம் முதல் மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் கட்டாயம் இலங்கை நியமங்கள் சான்றிதழ் பெற்ற (எஸ்.எல்.எஸ்) தலைக்கவசங்களையே அணிய வேண்டுமென பொலிஸ்போக்குவரத்து பிரிவு பிரதானி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமரசிறி சேனாரட்ன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நுகர்வோர் விவகாரங்கள் சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானி அறிவிப்பு ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
இதுதொடர்பில்பிரதிப்பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் கட்டாயம் இலங்கை தர நிர்ணய சான்றிதழ் பெற்ற தலைக்கவசங்களையே அணிய வேண்டும் என்ற சட்டம் அடுத்த ஆண்டு செப்ரம்பர் மாதம் நடை முறைக்கு வரும். அதன்போது, வீதி பாது காப்பு தேசிய சபை மற்றும் வீதிப் போக்குவரத்து பொலிஸார் கண்டிப்பாக வலியுறுத்துவார்கள்.
எஸ்.எல்.எஸ் தரம் பொறிக்கப்பட்ட தலைக் கவசங்களையே விற்பனை செய்ய முடியுமென இலங்கை நியமங்கள் நிறுவனம் வர்த்தகர்களுக்கு அறிவித்துள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளை மீறி தலைக்கவசத்தை விற்பனை செய்வோர் நுகர்வோர் விவகார சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவார்கள்.
அத்துடன் விநியோகஸ்தர்களால் வழங்கப்படும் தலைக்கவசங்களில் பெரிது, நடுத்தர மற்றும் சிறிய அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் போது தான் இலங்கை நியமங்கள் நிறுவனத்தின் அனுமதி வழங்கப்படும்.
மேலும் 1981- 21ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்து விதியின் பிரகாரம் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர் மற்றும் பின் இருக்கையில் பயணிப்பவர், கட்டாயம் போக்குவரத்து அமைச்சின் அனுமதியளிக்கப்பட்ட தலைக்கவசத்தையே அணிய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, மோட்டார் வாகனங்கள் பதிவாளர் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் படி தினமும் ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் வரையில் புதிதாக பதிவு செய்யப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-வ)

## ஆலோசனைகளை சிலர் திருடியுள்ளனர்

*டெஸ்மன்ட் டி சில்வா தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.26
மக்ஸ்வெல் பரணகம அறிக்கைக்கு தான் வழங்கியிருந்த சில ஆலோசனைகள் அடங்கிய பக்கங்களை சிலர் தனது அனுமதியின்றி எடுத்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயன்றதாககாணாமற்போனவர்கள் மற்றும் கடத்தல் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் சட்டஆலோசனை குழுவின் தலைவர் டெஸ்மன்ட் டி சில்வா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தவை காணாமல் போன ஆவணங்களின் ஒரு பகுதியே. இவை எனது அனுமதியில்லாமல் பெறப்பட்டுள்ளன. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவித்த பதில் மிகச்சரியானது.
நான் எழுதிய இரகசியத்தன்மை வாய்ந்த கருத்துக்களை உள்ளடக்கிய ஆவணங்கள் எனது அனுமதியில்லாமல் எடுக்கப்பட்டு பத்திரிகைகளுக்கு இவ்வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்டது தெரியவந்தது. இதன் ஒரு பகுதியையே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முயன்றனர்.
இன்னொரு பரணகம, அல்லது டெஸ்ட்மன்ட் சில்வா அறிக்கையுள்ளது. ரணில்விக்கிரமசிங்க அதனை மறைக்கின்றார் என காண்பிப்பதற்கான முயற்சிகளே இவை. எனினும் கையகப்படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் எங்களிடம் இருந்ததால் பரணகம அறிக்கைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என டெஸ்மன்ட் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (த-வ)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து ஆராய ஆலோசனைக்குழு

### *அமைக்க அரசு திட்டம்*

கொழும்பு, ஒக்.26
இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடும் பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து ஆராய ஆலோசனை சபை ஒன்றை அரசு நியமிக்கவுள்ளதாக கடற்றொழில் பணிப்பாளர் நாயகம் எல்.பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
இந்தியாவுடன் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு முன்பாக, குறித்த ஆலோசனை சபை அமைக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
இந்த ஆலோசனை சபை, கடற்படை, கடலோர காவற்படை, கடற்தொழில் அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும்.
இந்த ஆலோசனை சபை அமைக்கும் தீர்மானம் கடந்த வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.
இதில் வடக்கு மீனவர் சங்கங்களின் தலைவர்கள், கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள், கடலோர காவற்படை அதிகாரிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச் சுக்களை நடத்த மிக விரைவில் கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர இந்தியா செல்லவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (ற-வ)

## குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகள் அபிவிருத்தி

### *விரைவில் முன்னெடுக்க அரசு தீர்மானம்*

கொழும்பு, ஒக்.26
குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகளின் பௌதிக வளங்களை அபிவிருத்திசெய்வதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பிப்ப தற்கு தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார தெரிவித் துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
குறைந்த வசதிகள் கொண்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களது உதவியுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.
குறிப்பாக பெருந்தோட்டப் பகுதி, வட மாகாணம் மற்றும் வட மத்திய மாகாண பாடசாலைகள் என்பன தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
இதேவேளை உயர்தர வகுப்புகள் அற்ற பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். (ற-வ)

## கடந்த வருடம் 83 மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள்

### *அவற்றால் வருவாய் 69 மில்லியன் ரூபா*

கொழும்பு, ஒக்.26
கடந்த வருடம் மதுவரித் திணைக்களத்தால், 83 மதுபான விற்பனை நிலையங்களுக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு 69,123 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கடந்த வருடம் அரசு, மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையை கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுத்த போதும் புதிதாக 83 மதுபான நிலையங்களுக்கு வழங்கிய அனுமதிப்பத்திரங்கள் ஊடாக, கலால் வருவாய் 69,123 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.
எனினும் கடந்த வருடம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கே, புதிதாக மது பான சாலை அனுமதிப்பத் திரங்கள் வழங்கப்பட்டதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதுவரித் திணைக் களத்தின் புள்ளி விவர அறிக்கைகளின் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை விட, கடந்த வருடம் 20 அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.
கடந்த வருடம், மதுபானம் மற்றும் சிகரெட் பாவனையை கட்டுப்படுத்த முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை மீறி இவ்வாறு அதிகமாக மதுபான நிலைய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. எனினும் புதிய அரசு கடந்த வருடம் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.
இதேவேளை, 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது கடந்த வருடம் மதுபான உற்பத்தி குறைவடைந்துள்ளது. எனினும் மோல்ட் வகை மதுபானத்தின் உற்பத்தி 3.5 வீதம் அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அத்துடன் முன்னணி 5 மதுபான உற்பத்தி நிறுவனங்கள் 1,451 மில்லியன் ரூபா வரி நிலுவை செலுத்த வேண்டியுள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-வ)

## பொலிஸ் நெறிமுறைகளி[illegible] விரைவில் மாற்ற[illegible]

கொழும்பு, ஒக்.26
பொலிஸ் அதிகாரிகள் தொட[illegible] காணப்படுகின்ற நெறிமுறை[illegible] திருத்தியமைப்பது குறித்து [illegible] பொலிஸ்ஆணைக்குழு அவத[illegible] செலுத்தியுள்ளது.
தற்பொழுது நடைமுறையில் உ[illegible] நெறிமுறைகளில் காணப்படு[illegible] குறைபாடுகளை கண்டறிவத[illegible] செயற்பாட்டு ரீதியில் கடமை[illegible] பொருந்தக்கூடிய நெறிமுறை[illegible] றின் தேவை இருப்பதாக [illegible] பொலிஸ் ஆணைக்குழுவின் [illegible] லாளர் ஆரியதாஸ குரே தெ[illegible] துள்ளார்.
சமூகத்தில் இடம்பெறும் கு[illegible] செயல்களை குறைக்கும் நோ[illegible] இதனை நடைமுறைப்ப[illegible] வுள்ளதாக பொலிஸ்ஆ[illegible] குழுவின் செயலாளர் ஆரிய[illegible] குரே தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி-20 கிண்ணம் ஜொனியன்ஸிடம்

## காட்லியின் தொடரில் ஜொலிஸ்ராரை வீழ்த்தி



யாழ்ப்பாணம், ஒக். 26

பருத்தித்துறை காட்லி யைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவந்த அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடரின் இறுதியாட்டத்தில் ஜொலிஸ்ராரை வீழ்த்தி கிண்ணம் வென்றது ஜொனியன்ஸ்.

பருத்தித்துறை காட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் அணியும் ஜொலிஸ்ரார் அணியும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்ரார் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 125ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. சீரான இடைவெளியில் ஏற்பட்ட தொடர்ச்சியான இலக்குச் சரிவு அந்த அணியின் பின்னடைவுக்கு காரணமாகியது. அதிகபட்சமாக கயானன் 47 ஓட்டங்களையும், ஜனார்த்தனன் 23 ஓட்டங்களையும், வாமனன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் சார்பாக அகலன், கலக்சன், பிருந்தாபன், லோகதீஸ்வரன் நால்வரும் தலா 2 இலக்குகளையும் காண்டீபன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

120 பந்துகளில் 126 ஓட்டங்கள் என்ற சாத்தியமான இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி அசத்தலான தொடக்கத்துடன் 17.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்புக்கு இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக அமிர்நேயன் 37 ஓட்டங்களையும் அன்புயன் 21 ஓட்டங்களையும் லவேந்திரா 25 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பில் குகானந், தீபன், ஜனார்த்தனன், வாமணன் நால்வரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஜொனியன்ஸ் அணியின் அமிர்நேயனும் தொடராட்ட நாயகனாக அதே அணியின் அகிலனும் தெரிவு செய்யப்பட்டனர். (ம)

## இன்றைய மோதல்கள்

கரணவாய், ஒக். 26

சமரபாகு நியூட்டன் விளையா[illegible] கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

## இறுதியில் யங்ஸ்ரார்

யாழ்ப்பாணம், ஒக். 26

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டத் தொடரில் யங்ஸ்[illegible] அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் யங்ஸ்ரார் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

## கொலின்ஸை இலகுவாக வீழ்த்தி அன்ரனிஸ் அமோக வெற்றி



மாங்குளம், ஒக். 26

வடமாகாணத்தின் மகுடம் கிண்ணத்துக்காக வடமாகாண உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கரணவாய் கொலின்ஸ் அணியை வீழ்த்தியது மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் அணி.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், ஆட்டத்துடன் இணைந்த முறையில் கொலின்ஸின் ஆதிக்கமும் ஆரம்பமாகியது. முதலாவது நிமிடத்திலேயே கொலின்ஸ் அணியின் குமார் தனது அணியின் சார்பாகக் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். 7ஆவது நிமிடத்திலும் அதே அணியைச் சேர்ந்த அனுசாந் இரண்டாவது கோலை விளாச கொலின்ஸின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. தொடர்ந்து 16ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸின் முதல்கோலும் 20ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் சார்பாக மற்றொரு கோலும் பதிவாக முதல் பாதியின் முடிவில் 3:1 என்று முன்னிலை வகித்தது கொலின்ஸ்.

இரண்டாம் பாதியில் பழிதீர்க்கும் முயற்சியில் தீவிரம் காட்டியது சென். அன்ரனிஸ். முயற்சியின் பலனாக 5ஆவது, 7ஆவது நிமிடங்களில் அன்ரனிஸ் சார்பாக கோல்கள் பதியப்பட ஆட்டம் சமநிலையானது. 14ஆவது, 16ஆவது நிமிடங்களில் சென். அன்ரனிஸின் சுதர்சன் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய 5:3 என வாய்ப்புக்கள் அன்ரனிஸின் பக்கம் சாய்ந்தன. 18ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் சார்பாக ஓர் கோல் பதிவாகிய போதிலும் அன்ரனிஸ் இறுதிக் கட்ட வேடிக்கையைக் காட்ட முடிவில் அந்த அணி 7:4 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (ம-422)




நேற்றுமுன்தினம் முடிவடைந்த மைலோ கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறி இரண்டாவது இடத்தைப் பெற்ற பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணியினர் தமது வெற்றிக் கிண்ணத்துடன்...

## அரையிறுதிக்குள் நுழைந்தது கலைமதி

கரணவாய், ஒக். 26

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ்., மாவட்ட ரீதியாக நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தை 3:1 என்று வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம்.

இந்த இரண்டு அணிகளில் பொம்மர்ஸ் அணி அரையிறுதிக்கான வாய்ப்பைஏற்கனவே பெற்றிருந்தது. ஆனால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றாலேயே அரையிறுதிக்குள் நுழையலாம் என்ற [illegible] களமிறங்கியது கலைமதி. ஆட்டம் [illegible] பிரியனும் மறுநிமிடம் சந்துருவும் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய 2:0 என்று முன்னிலை வகித்தது கலைமதி. மேலதிக கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் மூன்றாவது நிமிடத்தில் சாரங்கனின் கோலின் மூலம் தனது கோல் கணக்கை ஆரம்பித்தது பொம்மர்ஸ். நேரம் கடந்து சென்றதால் கலைமதியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியது. முடிவில் அந்த அணி 2:1என்று வெற்றி[illegible] அரையிறுதிக்குள் நுழைந்த[illegible] (108)

## றொசாரியன் சனசமூக நிலைய விழா

கொழும்புத்துறை, ஒக். 26

கொழும்புத்துறை றொசாறியன் சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி அண்மையில் நடைபெற்ற 60 கிலோமீற்றர் சைக்கிளோட்டப் போட்டி, உள்ளூர் சைக்கிளோட்டப் போட்டி மற் றும் 5 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம்;

60 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டத்தில் கு.யசன் (பண்டத்தரிப்பு) முதலாம் இடத்தையும், எஸ்.றஜீவன் (நவாலி) இரண்டாம் இடத்தையும், ப.ஜயவேந்தன் (நவாலி) மூன்றாம் இடத்தையம் தமதாக்கினர்.

உள்ளூர் சைக்கிளோட்டப் போட்டியில் அ.கிரிசாந் முதலாம் இடத்தையும் ஜோ.ஜெனஸ் கனோஜின் இரண்டாம் இடத்தையும் வ.டிலக்சன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

மரதன் ஓட்டப்போட்டியில் ஜெ. கஜந்தன் முதலாம் இடத்தையும் [illegible] தமதாக்கினர். (ம-135)

## சமபோச உதைபந்தாட்டக் கிண்ணம் முஸ்லிம் மகா வித்தியாலயத்திடம்

யாழ்ப்பாணம், ஒக். 26

சமபோச கிண்ணத்துக்காக வவுனியா மாவட்ட பாடசாலைகளின் 15வயதுக்கு உட்பட்ட (ஆண்கள்) அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரில் முஸ்லிம் மகா வித்தியாலய அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முஸ்லிம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து செட்டிகுளம் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. கோல்கள் எதைனையும் பெறாமலேயே முடிவுக்கு வந்ததுமுதல் பாதி.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இழுபறி நிலைமை நீடிக்கவே செய்தது. ஆட்டம் முடிவதற்கு 5நிமிடங்கள் இருக்கையில் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சார்பாக முதல் கோலாகவும் இறுதிக்கோலாகவும் பதிவாக முடிவில் அந்த அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-2[illegible])

## இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது யாழ். மாவட்ட இளைஞர் அணி

யாழ்ப்பாணம், ஒக். 26

வவுனியாமாவட்ட இளைஞர்அணியை வீழ்த்தி இறுதியாட்டத்துக்குள் நுழைந்தது யாழ். மாவட்ட இளைஞர் அணி.

27ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குருநாகல் சென்.ஆன்ஸ் பாடசாலையின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்று வருகின்றது. அதில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட இளைஞர் அணியை எதிர்த்து யாழ். மாவட்ட இளைஞர் அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். மாவட்ட இளைஞர் அணி 68:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு அணிகளுக்கும் சம வாய்ப்புக்கள் தில் நிலையில் இங்கி. - பாக். டெஸ்ட்





இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாளில் 9ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களைக் கடந்த யுனிஸ்கான் இந்த மைல் கல்லை எட்டிய முதல் பாகிஸ்தானிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாளில் பாகிஸ்தான் இரண்டாவது இன்னிங்ஸிற்காக 354 ஓட்டங்கள் எடுத்திருந்த வேளையில் ஆட்டத்தை இடைநிறுத்தி இங்கிலாந்துக்கு வெற்றியிலக்காக 491 ஓட்டங்களை நிர்ணயித்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து நாள் முடிவில் 130-3 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 378 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மொயீன், வூட் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது இன்னிங்ஸை ஆரம்பித்த கிரிக்கெட்டின் தாயகம் 242 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் ரியாஸ், சாஸ் இருவரும் தலா 4 இலக்குகளையும் இம்ரான் கான் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

136 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக பாகிஸ்தானின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினார்கள் ஹபீஸ் மற்றும் மக்சூட். ஒரே ஓட்டத்துடன் மக்சூட் ஆட்டமிழக்க கடந்த ஆட்டத்தில் இரட்டைச்சதம் விளாசிய மலிக்கும் வெறும் ஏழே ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். பாகிஸ்தானின் ஆரம்பம் சொதப்பினாலும் யுனிஸ்கான், ஹபீஸ் இணை நிலைத்து நின்றது அரைச்சதம் கடந்தார் யுனிஸ்கான். அரைச்சதம் கடந்த அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார் ஹபீஸ். தற்பொழுது களத்தில் யுனிஸ்கான் மற்றும் மிஷ்பா. சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் மிஷ்பா. அடிக்கொரு சிக்சர்களுடன் மிஷ்பாவும் அரைச்சதம் கடக்க சதம் கடந்தார் யுனிஸ்கான். பாகிஸ்தான் சார்பாக 9ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதல் வீரர் என்ற சாதனையும் நிலைநாட்டினார். 118 ஓட்டங்களுடன் இன்னிங்ஸை முடித்துக்கொண்டார் யுனிஸ்கான். சபிக் பின்வரிசையில் விளாச 354-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது பாகிஸ்தான்.

491 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்பம் வாய்க்கவில்லை. 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆரம்ப வீரர்கள் இருவரும் ஆட்டமிழந்து விட்டனர். தொடர்ந்தும் நிலைத்துநின்ற பெல் அரைச்சதத்தை 4 ஓட்டங்களால் தவறவிட்டார். நாள் முடிவில் இங்கிலாந்து 130-3. ரூட் 59 ஓட்டங்களுடனும் பரிஸ்ரௌவ் 6 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளார். (ம)

## குர்பஜ் மீதான தடை நீக்கம்

இந்திய கொக்கி வீரர் குர்பஜ் சிங் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக கொக்கி இந்தியா அமைப்பு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

பெல்ஜியத்தில் ஜூன் மாதம் நடைபெற்ற உலக கொக்கி தொடரின் அரையிறுதி ஆட்டத்தின் பொழுது குர்பஜ் சிங், இந்திய அணியில் குழுச் சண்டையை உருவாக்கியதாகவும், வீரர்களிடையே பிளவை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்து முன்னாள் இந்திய பயிற்சியாளர் பெலிக்ஸ் அறிக்கை அளித்திருந்தார். அந்த அறிக்கையின் அடிப்படையில் கொக்கி இந்தியா அமைப்பு, குர்பஜ் சிங்குக்கு 9 மாதம் தடைவிதித்து நடவடிக்கை எடுத்தது. குறித்த விடயம் தொடர்பாக விசாரித்ததில் அவர் மீது தவறில்லை என்று தெரிவித்து குர்பஜ் சிங் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. (ம)



## மீண்டும் மிஸ்ராவுக்கு சிக்கல்


மிஸ்ரா மீதான முறைப்பாட்டை திரும்பப் பெற முடியாது என்று அவரது தோழி தெரிவித்துள்ளதால் அவருக்கு மீண்டும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான மிஸ்ரா, பெங்களூரில் தனியார் விடுதியில் தங்கியிருந்த போது அவரை பார்க்க வந்த தோழி வந்தனாவை தாக்கியுள்ளார். பின்னர் அவரது தோழி இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் இருவருக்கும் சமரசம் ஏற்பட வந்தனா, மிஸ்ரா மீதான முறைப்பாட்டை தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார். இந்த நிலையில் அவர் மீதான முறைப்பாட்டை திரும்ப பெற முடியாது என்று பல்டி அடித்துள்ளார். இதனால் மிஸ்ராவுக்கு மீண்டும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. (ம)



# மழையின் ஆதிக்கம் அதிகம்
## இன்றைய ஆட்டமும் பாதிக்கப்படலாம்



இலங்கை-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் நான்காம் நாளான நேற்றையதினம் மழை காரணமாக ஓர் பந்துகூட வீசப்படாத நிலையில் நாள் முடிவுக்கு வந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முன்னிலை வீரர்கள் எவருமே சிறப்பாக செயற்படாத நிலையில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சிறிவர்தன அதிகபட்சமாக 68 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தீவுகள் சார்பாக வரிக்கன் 4 இலக்குகளையும் கோல்டர், ரெய்லர் இருவரும் தலா 2 இலக்குகளையும் றோச், பிஸ்கு இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகள் 163 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறி கொடுத்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத் 4 இலக்குகளையும் பெரேரா 3 இலக்குகளையும் சிறிவர்தன 2 இலக்குகளையும் கேரத் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

37 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கைக்கு இரண்டாவது தடவையாகவும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. 206 ஓட்டங்களில் சகல இலக்கையும் பறிகொடுத்தது இலங்கை. அதிகபட்சமாக மத்தியூஸ் 46 ஓட்டங்களையும் சிறிவர்தன 42 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் தீவுகள் சார்பாக பிரீத்வைட் 6 இலக்குகளையும் ரெய்வர் வறிக்கன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகித்தது கைகொடுக்க தீவுகளுக்கு இலக்காக 244 ஓட்டங்கள். ஆரம்ப வீரர்களாக பீரித்வைட் மற்றும் கோப். அடிக்கடி மழை அச்சுறுத்தினாலும் அதற்குள்ளும் வீழ்ந்தது ஓர் இலக்கு. மூன்றே ஓட்டங்களுடன் பிரீத்வைட் ஆட்டமிழந்தார். நாள் முடிவில் தீவுகள் 20-1. இறுதிநாளான இன்று இலங்கை வெற்றிபெற வேண்டுமாயின் 9 இலக்குகளை வீழ்த்த வேண்டும். தீவுகள் வெற்றிபெற வேண்டுமாயின் இன்னமும் 224 ஓட்டங்கள் பெறப்பட வேண்டும். (ம)

## மூன்றாவது இடத்தையே பெரிதும் விரும்புகிறேன்

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் இன்னமும் எந்தவொரு வீரரையும் உறுதிப்படுத்தாத நிலையில் தான் மூன்றாவது இடத்திலேயே விளையாட விரும்புவதாக விராட் கோக்லி தெரிவித்துள்ளார்.

தனது இடம் தொடர்பாக கோக்லி தெரிவித்ததாவது - '4ஆவது வரிசையில் எனது ஆட்டம் கௌரமாகவே இருக்கிறது. ஆனாலும் சர்வதேச அளவில் விளையாடும் போது எனது ஆட்டம் 3ஆவது வீரர் வரிசைக்கு பொருத்தமானது. 3ஆவது வீரராக களம் இறங்கும் போது திட்டமிட்டு விளையாட முடிகிறது. ஆட்டத்தை கட்டுக்குள் கொண்டு வர இயலுகிறது. இதில் எனக்கு அதிகமான நம்பிக்கையும் இருக்கிறது. நான்காவது வரிசையில் ரகானேயும், ஐந்தாவது இடத்தில் ரெய்னாவும் களமிறங்குவது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்' என்றார். (ம)



## கேலெப் இலகு வெற்றி

தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ் தொடர் சிங்கப்பூரில் நேற்று ஆரம்பமாகியது. குறித்த தொடரில் கேலெப், பென்னட்டா ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் கேலெப் இலகுவெற்றியைப் பதிவுசெய்தார்.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் செற்றை 6-0 என்று கைப்பற்றிய கேலெப் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 6-3 என கைப்பற்றி 2:0 என்ற நேர் செற்களில் இலகுவெற்றிபெற்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு மரண அடி

## வரலாறு படைத்தது தென்னாபிரிக்கா

### 214 ஓட்டங்களால் மிகமிக இலகு வெற்றி



109 ஓட்டங்களை விளாசி சில அசத்தல் பிடியெடுப்புக்கள் மூலம் ஆட்டநாயகனான கொக்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடை யிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் 214 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரைக் கைப் பற்றியது தென்னாபிரிக்கா. இந்த வெற்றியின் மூலம் இந்தியாவில் வைத்து ஒரு தடவையேனும் ஒருநாள் தொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற தென்னாபிரிக்காவின் கனவு நிறைவேறியுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்ததுதான் மிச்சம் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று இந்திய வீரர்களாலும் ஊகிக்க முடியவில்லை. ரசிகர்களும் அத்தகைய ஓர் மரண அடியை எதிர்பார்க்கவில்லை. மொத்தத்தில் வடிவேலுவின் காமடியில் வருவது போன்ற "சம்பவம் சம்பவம்" என்ற ஒன்று மட்டும் நடந்து கொண்டிருந்தது. ஆரம்ப வீரராக களமிறங்கிய அம்லா சிறிது ஏமாற்றினாலும் விளாசித்தள்ளினார் கொக். இணைந்தார் பிளாஸிஸ். ஒரு இந்தியப் பந்துவீச்சாளரும் மிச்சமில்லை. அத்தனைபேரின் பந்துகளும் காற்றோடு காற்றாக கலந்தன. ஆளுக்கொரு அரைச் சதம் கடந்துவிட்டனர் இலக்கு வீழ்த்தப்பட்ட பாடில்லை. மற்றுமொரு சதம் கடந்தார் கொக். 109 ஓட்டங்களுடன் கொக் ஆட்டமிழக்க இடத்தை நிரப்பினார் வில்லியர்ஸ். வில்லியர்ஸ் வந்ததுதான் தாமதம் களத்தடுப்பாளர்களாக மாறினார்கள் பார்வையாளர்கள். அடிக்கொரு தடவை பந்து பவிலியனை முத்தமிட்டு வந்தது. சதம் கடந்தார் பிளாஸிஸ். கூடவே தசைப் பிடிப்பும் வந்தது. 133 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டமிழப்பற்ற ஓய்வினை அறிவித்துச் சென்றார். 40ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 300 ஓட்டங்களைக் கடந்தது தென்னா பிரிக்கா. இலங்கை ரசிகர்களுக்கும் வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது. தமது அதிக ஓட்ட எண்ணிக்கை இன்று கவிழ்ந்து விடுமோ என்பது அவர்கள் பிரச்சினை. நீண்ட இடைவேளையின் பின்னர் ஓர் மிகப் பெரும் நிம்மதிப் பெருமூச்சு. தப்பியது இலங்கையின் சாதனை முடிவில் தென்னாபிரிக்கா 428-4. அதிகபட்சமாக பிளாஸிஸ் 133 ஓட்டங்களையும் வில்லியர்ஸ் 119 ஓட்டங்களையும் கொக் 109 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புவனேஸ்குமார் 106 ஓட்டங்களை அள்ளிக் கொடுத் தார். ஒருநாள் ஆட்டங்களில் விட்டுக்கொடுக்கப்பட்ட இரண்டாவது உயர் ஓட்ட எண்ணிக்கை இதுவாகும்.

300 பந்துகளில் 439 ஓட்டங்கள் மிகமிக கடினமான இலக்கு. ரோகித் சர்மா முதல் 30 பந்துப்பரிமாற்றங்கள் வரையில் நின்றுபிடித்தால் சாத்தியமாகலாம். ஆனால் அவர் முழுமையாக 5 பந்துப்பரிமாற்றங்கள் வரையிலேயே தாக்குப்பிடிக்கவில்லை. வந்த வேகத்தில் அனுஸ்கா இருந்த பவிலியனை நோக்கி சிக்சர் விளாசினார் கோக்லி. அனுஸ்காவை மைதானத்தின் பெரிய திரையில் காட்டியதால் தானோ என்னமோ அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்தார். அரைச் சதத்துடன் களைத்துப்போனார் தவான். சிறிதுநேரம் அச்சுறுத்தினார் ரகானே. இந்தியாவின் பக்கம் வாய்ப்பை இழுத்துவரப் பார்த்தார் ரகானே இயலவில்லை. 87 (58 பந்துகளில்) ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியாவின் பின்வரிசை எடுபடவேயில்லை. இறுதி நம்பிக்கையான டோனியும் 27 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திரும்ப முடிவில் இந்தியா 224 ஓட்டங்களில் சுருண்டு 214 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆட்டநாயகனாக கொக், தொடர் ஆட்ட நாயகனாக வில்லியர்ஸும் தெரிவானார்கள். (ம)



இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான நேற்றைய ஆட்டத்தில் மூன்றாவது வீரராக களமிறங்கி சதம் விளாசினார் பிளாஸிஸ். இந்த சதம் இந்தியாவுக்கு எதிராக அவரது முதலாவது சதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.



நேற்றைய ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தில் 23 ஓட்டங்களை எடுத்திருந்த அம்லா ஒருநாள் ஆட்டங்களில் வேகமாக 6 ஆயிரம் ஓட்டங்களை எடுத்தவர் என்ற கோக்லியின் சாதனையை முறியடித்து முத்திரை பதித்துள்ளார்.



நேற்றைய ஆட்டத்தில் சதம் விளாசியதன் மூலம் சர்வதேச ஒருநாள் ஆட்டங்களில் அதிக சதங்களை விளாசிய பட்டியலில் கோக்லியுடன் 5ஆவது இடத்தை பகிர்ந்துள்ளார் வில்லியர்ஸ்



நேற்றைய ஆட்டத்தில் வில்லியர்ஸும், பிளாஸிஸ்ஸும் இணைப்பாட்டமாக 211 ஓட்டங்களை பகிர்ந்திருந்தனர். அந்த வேளையில் உபாதை காரணமாக ஆட்டமிழப்பற்ற ஓய்வினை அறிவித்துச் சென்றார் பிளாஸிஸ். இதனால் அதிக இணைப்பாட்ட சாதனை


இறுதி எதிர்பார்க்கை விசேட கருத்தரங்கு

பதிவாளர் சேவை தேர்வுக்கு

செவ்வாய் (27.10)

காலை 9.00 - 4.00 மணிவரை

அதிபர்சேவை தரம் - 3

திங்கள், செவ்வாய், புதன் பி.ப 5.00 மணி

தொடர்பு:

076 688 3394

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு

(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

விரைவில் நடைபெறவுள்ள

காலம் - 27.10.15(9.00-4.00pm)

விரிவுரையாளர்கள்

P.உமாசங்கர்

P.கமல்தாசன்

(தொடர்ச்சியாக வார இறுதி நாள்களில் நடைபெறும்)

நாவலர்

கல்வி நிலையம்

ஆனைப்பந்தி யாழ்நகர்

T.P 077 469 6695

Oct. 31 இல் நடைபெறவுள்ள

27.10.2015 (9.00-4.00)

விரிவுரையாளர்கள்

P.உமாசங்கர்

P. கமல்தாசன்

(முந்திலும் எதிர்பார்க்கை வினா விடைகள் ஆராயப்படும்)

நாவலர்

கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்நகர்

077 469 6695





யாழ் நகரில் முதன்முதலாக

Certificate in Robotics and Intelligent Systems

எதிர்வரும் 27.10.2015ம் திகதி IIS City Campus மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதிய பிரிவு ஆரம்பம் 01/11/2015

மேலதிக விபரங்களுக்கு 071 777 4555

INSTITUTE OF INFORMATICS STUDIES

209 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

021 222 8060/ 2631


## மரண அறிவித்தல்



திருமதி

**றொசாறியோ வயலற் அந்தோனிப்பிள்ளை**

பண்டத்தரிப்பு பத்திமா கோவிலடியைச் சேர்ந்த திருமதி றொசாறியோ வயலற் அந்தோனிப்பிள்ளை நேற்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை றோசமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பர்னாந்து - ஞாயிசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பர்னாந்து அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் றெஜினோல்ட் றாபன்(பண்டத்தரிப்பு ப.தெ.வ.அபி.சங்கம்), பசில் பிரேமராஜன் (பிரான்ஸ்), மொடஸ்ரா(ரதி), சுசில் லோகராஜன், கிறிஸ்ரி ஜெயந்தன் (பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), டெனி கொன்ஸ்ரன்ரையின் (GIZ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், புஷ்பவதி, ஜெயா(பிரான்ஸ்), தேவரட்ணம், நளினி, ஜொய்சி, சத்தியசர்மிளா (ஆசிரியை,கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பீலிக்ஸ் அஞ்சலோ, றோஸ் பெல்சியா, றோய்டிலக்சன், கிரிஷாந்த், சஜாந்த், நிஷாந்த், றோய் கிளறிஸ்ரன், ஜெசி, எறின், சுமில்ரன், சாருஜன், மொறிஸ், ஜென்சியா, ஜொவ்றின், ஜெருசியா, ஜெரன்சியா, லொகான், துசாரி, விசிந்தன், எட்வின், கோமதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றொஜேஸ், விமர்சா, சாம்சன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.10.2015) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு பண்டத்தரிப்பு புனித செபமாலை மாதா ஆலயத்தில் இடம்பெற்று பூதவுடல் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பத்திமா கோவிலடி,
பண்டத்தரிப்பு.
0777 270 811

தகவல் : குடும்பத்தினர்


அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஷ்டசாலியாகலாம்

V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241

கிளிநொச்சி 0768226240

0776699892

0776697960


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.